விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்தெட்டு

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 01 வெள்ளிக்கிழமை (13.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 116








# இலங்கை விவகாரம் குறித்து


# ரணில்-அத்வானி பேச்சுவார்த்தை



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் எல்.கே.அத்வானியை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன்போது இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (28ஆம் பக்கம் பார்க்க)



## இடி மின்னலுடன் கூடிய மழை மூன்று நாட்களுக்கு நீடிக்கும்

### அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் கரையோரப் பகுதிகளில் அயன அயல் ஒடிவிகள் வலய செயற்பாடு வலுவடைந்து காணப்படுவதால் எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய மழை கால நிலை நீடிக்கும் என வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

இந்தியாவில் மேற்குப்பக்கம் வீசும் காற்று இலங்கையின் தெற்கு பக்கம் (28ஆம் பக்கம் பார்க்க)

## தோட்டக் கிணற்றிலிருந்து இளம் பெண் சடலமாக மீட்பு


(யாழ்ப்பாணம்)

மானிப்பாயிலுள்ள தோட்டக் கிணற்றிலிருந்து இளம் பெண்ணின் சடலம் ஒன்று நேற்று அதிகாலை மானிப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

ஆனந்தா வீதி பெரியகுளம் மானிப்பாய் பகுதியிலுள்ள கிணற்றிலிருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த லதாரூபுன் சாலினி (வயது 20) என்பவரே (28ஆம் பக்கம் பார்க்க)

## மண்டைதீவுச் சந்தியில் அதிரடியாக சுருவம் அமைக்கும் முயற்சி



### தடுத்து நிறுத்தக் கோருகிறது திருமுறைக் கழகம்

(மண்டைதீவு)

மண்டைதீவுச் சந்தியில் நேற்று அதிரடியாக சுருவம் அமைக்கும் வேலைகள் இடம் பெற்றுள்ளன.

பண்ணை வீதியும் மண்டைதீவு வீதியும் சந்திக்கும் மண்டைதீவுச் சந்தியில் கடற்படையினரின் முகாமுக்கு அருகில் சுருவம் அமைக்கும் வேலை நேற்று அதிரடியாக இடம் பெற்றுள்ளது.

மண்டைதீவு புனித பேருதுவானவர் ஆலய பங்குத்தந்தையின் ஏற்பாட்டில் இந்த அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையடுத்து மண்டைதீவு சைவ மக்கள் அதிர்ச்சியும் (28ஆம் பக்கம் பார்க்க)






## பால் பொங்க வேண்டிய நேரத்தில் பயம் பொங்கும் நிலையில் நாடு!

### அரசை சாடுகிறது ஐ.தே.க

(கொழும்பு)

பல்வேறு துன்பங்களுக்கு மத்தியிலும் தமிழ், சிங்கள புத்தாண்டு சிறப்பாக கொண்டாட வேண்டும் என ஆவலுடன் காத்திருக்கும் மக்களின் கனவுகளை மகிந்த அரசு குழிதோண்டி புதைத்துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக குற்றம் சாட்டியுள்ளார்.

பால் பொங்கி புத்தாண்டை வரவேற்க வேண்டிய தருணத்தில் அத்தியவசியாவசிய பொருட்களின் விலை அதிகரிக்கப்படுகின்றது என்ற அபாய சமிக்ஞை எப்போது வருமென அல்லோலகல்லோலப்பட்டே மக்கள் புத்தாண்டில் அடுப்பு மூட்ட வேண்டியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் சுதந்திரமாக வாழும் உரிமையை இழந்து தவிக்கும் மக்களைசர்வதேச நாணய நிதியத்திடம் தாரை வார்த்து கொடுப்பதற்கு மகிந்த அரசு தயாராகி வருகின்றது. (02ஆம் பக்கம் பார்க்க)

## எஞ்சியுள்ள 700 புலிகளை விடுவிக்க ஒரு வருடம் தேவை!

### புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

முகாம்களில் எஞ்சியுள்ள 700 முன்னாள் புலி உறுப்பினர்களை விடுதலையை இன்னும் ஒருவருடம் வரை செல்லும். விடுதலை அடைந்தவர்கள் சமூகத்தில் சிறந்த பிரஜைகளாக வாழ்கின்றனர் என்று புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் சந்தன ராஜகுரு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், இறுதி யுத்தத்தின் போது சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட பெரும்பாலான புலி உறுப்பினர்களுக்கு முகாம்களில் புனர்வாழ்வு அளித்தோம்.

அத்தோடு தொழில்சார் பயிற்சிகளை வழங்கி தத்தமது வாழ்வாதாரத்தை (28ஆம் பக்கம் பார்க்க)


அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

வட மாகாணத்தில் முதல் தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

கிருபா லேணர்ஸ் L

பெண்களுக்கு: நவீன காரில் பயிற்சி வழங்கப்படும் 021 492 3200 (கவிதா)

(அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை)







தலைமைக் காரியாலயம்:- 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:- 021 222 4353 0777225291. 0777225292

கிளை :- கிளிநொச்சி T.P:- 021 228 5505 0714546955

கிளை :- சுன்னாகம் கே.கே.எஸ் வீதி மதவடி முன்பாக T.P:- 021 224 2022 0714546956

கிளை :- நெல்லியடி T.P:- 021 300 6550 0714546957


கிளை :- விசுவமடு T.P:- 021 320 1515 0714546955

கிளை :- பருத்தித்துறை T.P:- 0214923201 0714546958

கிளை :- A-9 வீதி, சாவகச்சேரி T.P:- 0777744424 0212270700

# புத்தாண்டில் புதுவாழ்வு பூக்கட்டும்

## அமைச்சர் டக்ளஸ் வாழ்த்து



பிறக்கும் புத்தாண்டின் வரவில் சகல மக்களும் சகல உரிமைகளும் பெற்று இன்னமும் நிமிர்வு பெறும் புது வாழ்வு பூக்கட்டும் என்றும் அதற்கான சூழலை மேலும் வளர்க்கவும் பாதுகாக்கவும் தொடர்ந்தும் உறுதியுடன் உழைப்போம் என்றும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது தமிழ்-சிங்கள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கிடையில் வளர்க்கப்பட்ட அர்த்தமற்ற பகை முரண்பாடுகள் ஒட்டு மொத்த இலங்கை தீவையும் இருண்டதொரு யுகத்தினுள் தள்ளிவிட்ட கடந்த காலத்துயர்களில் இருந்து மீண்டெழும் காலம் இப்போது கனிந்திருக்கிறது.

வலிகளும் வதைகளும் தந்து அழிந்தொழிந்த வாழ்வில் இருந்து மீண்டெழுந்த எமது மக்கள் உரிமைகள் பெற்று நிமிர்வதற்கு இனங்களுக்கிடையிலான சமத்துவ ஐக்கியமே இனி நாம் வளர்த்தெடுத்துச் செல்ல வேண்டிய எமது வரலாற்று கடமை.

மானிட வாழ்வின் மகத்தான மனித விருப்பங்கள் ஈடேற, இல்லாமை என்பது இல்லாதொழிக்கப்பட்டு வறுமையும் உயர்வு தாழ்வுமற்ற புதிய சமூகத்தின் வருகைக்காக எமது அரசியல் அதிகாரங்களை மேலும் பெற்று தொடர்ந்தும் நாம் உழைப்போம்.

இவைகளே பிறக்கின்ற புத்தாண்டில் எமது மக்களுக்கு நாம் வழங்கும் உண்மையானதும் நேர்மையானதும் நடைமுறைக்கும் சாத்தியப்படுத்த முடிந்ததுமான நம்பிக்கை தரும் செய்தியாகும்.

எமது மக்களின் வரலாற்று வாழ்விடங்கள் சிறக்கவும் இன சமத்துவ ஐக்கியத்தின் மூலம் உரிமைகள் பிறக்கவும் நம்பிக்கையுடன் சேர்ந்துழைக்க சகல மக்களும் இன்னமும் உறுதியோடு உழைக்க முன்வர வேண்டும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (எ)

## தங்கச் சங்கிலி அபகரிப்பு

வீதியால் பயணித்துக் கொண்டிருந்த வயோதிபப் பெண்மணியொருவரின் தங்க சங்கிலி மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத நபர்களினால் அபகரித்து செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று மதியம் ஒரு மணியளவில் சாவகச்சேரி கச்சாய் வீதி உப்புக்கேணி அருகே இடம்பெற்றுள்ளது.

சிவபாலன் விமலாபதி (வயது 63) என்பவருடைய ஒரு இலட்சத்து 75 ஆயிரம் பெறுமதியான மூன்று அரைப்பவுண் தங்க சங்கிலியே அபகரிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (எ-11;29)

# தண்டப் பணம் செலுத்தும்வரை குணரட்ணம் இலங்கை வர முடியாது!

## குடிவரவுத் திணைக்களம் தெரிவிப்பு

குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறினார் என்ற குற்றச்சாட்டின் கீழ் பிறேம்குமார் குணரட்ணம் என்ற நொயல் முதலிகேவுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டப்பணத்தை செலுத்தும் வரையில் அவருக்கு இலங்கைக்குள் பிரவேசிக்க முடியாது என்று இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் நிர்வாகி சூலானந்த பெரேரா இதனைத் தெரிவித்தார்.

பிறேம்குமார் குணரட்ணம் என்ற நொயல் முதலிகே அவுஸ்திரேலியாவில் இருந்து இலங்கை வந்து தமது விசா காலம் நிறைவடைந்த நிலையிலும் இலங்கையில் தங்கியிருந்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த குற்றத்திற்காக அவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் சூலானந்த பெரேரா குறிப்பிட்டார்.

முற்போக்கு சோசலிச கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் பிறேம்குமார் குணரட்ணம் அவுஸ்திரேலியாவில் இருந்து நொயல் முதலிகே என்ற பெயரில் இலங்கை வந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு இலங்கை வந்த அவர் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட நிலையில் அவுஸ்திரேலியாவுக்கு திரும்பியமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## பால் பொங்க...

எனவும் அரசின் அராஜகங்களை கட்டுப்படுத்த நாடு முழுவதும் மீண்டும் போராட்டங்கள் வெடிக்கும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:

பெரும் வாழ்க்கைச் சுமையைத் தமது தலைகளில் சுமந்து கொண்டு துன்பப்படுகின்ற மக்கள் கடன்பட்டாவது தமிழ்-சிங்கள புத்தாண்டைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் உள்ளனர்.

இந்நிலையில் எரிவாயு மற்றும் பால்மாவின் விலைகள் அதிகரிக்கப்படுகின்றன என்ற அறிவிப்பு மகிந்த அரசிடம் இருந்து எப்போது வருமென்ற அச்ச உணர்வுடனே அடுப்பு மூட்ட வேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

புத்தாண்டிலாவது நாம் புதிய மோட்டார் சைக்கிள் ஒன்று வாங்க வேண்டும். சிறிய வீடு ஒன்று கட்ட வேண்டும் என்ற கனவுடனும் எதிர்பார்ப்புடனும் ஏழை மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கின்றனர். இவர்களின் கனவுகளை குழி தோண்டிப் புதைக்கும் வகையில் மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோக்களில் விலைகளை அதிகரித்துள்ளதுடன் வட்டி வீதத்தையும் அதிகரித்துள்ளது மகிந்த அரசு.

அமைச்சர்களின் சுகபோக வாழ்க்கைக்கும் அவர்களின் சுயலாபத்திற்குமே அரசு இது போன்ற கடன் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அமைச்சர்களின் சுகபோகத்திற்காக பெறப்படுகின்ற கடனை மக்களே செலுத்தும் நிலையை மகிந்த் அரசு ஏற்படுத்தி உள்ளது.

யுத்தத்தின் பின்னர் நாம் சுதந்திரமாக வாழலாம். அரசிடம் இருந்து எமக்கு மானியங்கள் கிடைக்கும் என எதிர்பார்ப்புடன் காத்திருந்த மக்களுக்கு அரசு மேன்மேலும் கடன் சுமையேற்றி வருகிறது. எவரிடமும் மண்டியிட்டு நாம் மக்களை தாரை வார்த்து கொடுக்க மாட்டோம் என வீரவசனம் பேசிய மகிந்த அரசு, தற்போது சர்வதேச நாணய நிதியத்திடம் மண்டியிட்டு மக்களை தாரை வார்த்து கொடுத்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடி பணிந்து அவர்களை பின் தொடர்ந்து புத்தாண்டை கொண்டாட வேண்டியுள்ளது.

தொடர்ந்தும் அரங்கேற்றப்பட்டு வரும் மகிந்த அரசின் அராஜக செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வரை நாடு முழுவதும் எமது அரச எதிர்ப்பு போராட்டங்கள் வெடித்துக் கொண்டே இருக்கும். இப்படி ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக பேச்சாளர் கயந்த கருணாதிலக வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-11)

“பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள்: அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்” (ஏசாயா 45:22)

தேவன் உங்களுக்காக ஆயத்தம் செய்தவைகளை வந்து பாருங்கள்! கேளுங்கள்!! அனுபவியுங்கள்!!!

இலங்கை பெந்தெகொஸ்தே சபையின் வருடாந்த கன்வென்ஷனும் சுவிசேஷப் பிரசங்கங்களும்

2012 ஆம் ஆண்டு ஏப்ரல் 11ம் திகதி புதன் மாலை முதல் 15ம் திகதி ஞாயிறு வரை இளையதம்பி வீதி, அரியாலை, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சபைச்சாலையில் தினமும் மாலை 5.30 மணிக்கு நடைபெறும்

“இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்” (மத்தேயு 4:15)

பிசாசின் பிடி, பாவம், மதுபானம், புகைத்தல், பில்லிசூனியம், கொலை இன்னும் தீய பழக்கங்களிலிருந்து இயேசு விடுவிக்கிறார். சமாதானம், சந்தோஷம், பாவமன்னிப்பு தருகிறார்.

இலவச உட்பிரவேசம்

விபரங்களுக்கு: இலங்கை பெந்தெகொஸ்தே சபை, 111, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். தொலை பேசி: 021 2222339

(C-6346)



(C-6351)

YAALH ENGLISH ACADEMY
(077 3212 711)
வழங்கும் இன்றைய தேவை
BASIC+INTERMEDIATE+ADVANCED
PRACTICAL ENGLISH COURSES
FOR ADULTS+SCHOOL STUDENTS

True ease in language Use comes from Practice, not chance
As they walk with grace, who've learned to dance!
கற்க. கற்பவை கற்க. கற்பவை, கசடறக் கற்க.

வகுப்பிட அனுசரணை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி; யாழ்.நகர்.

முதியோர் ஆறுதலின் ஆனந்த இல்லம்

முதியோர் இல்லத்தில் சேர விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய இல. 0770204905.

தொடர்பு கொள்ள வேண்டிய நேரம்: ஒவ்வொரு நாளும் 4 – 8 மணி வ[illegible]

Address: ‘சாந்தி பவனம்’ முதன்மைச் சாலை சின்ன ஆலடி கான்ரநகர்

(8152)

காணி விற்பனைக்கு

இல. 118, கோவில் வீதி, றக்கா வீதி சந்தியில் (ICRC இருந்த கட்டிடம்) காணி விற்பனைக்குண்டு.
உடன் தொடர்பு கொள்ளவும்.
T.P.: 021 222 8876
021 222 5707
0772871034

(8165)

PHYSICS ENGLISH MEDIUM

2012 ELECTRICITY Sunday 8.30
2013 HEAT Sunday 10.30
2014 MECHANICS Sunday 2.30

By: KUGANESWARAN Bsc(Hons)
Green Pearl Institute
Navalar Road, Infront of Touchwood, Jaffna.
T.P.No. 0774287373

(8162)



(C-6210)

# இன்று ஒரு தகவல்

## மூன்று இடையூறுகள்

ஒரு பெரியவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அவர் சொன்னார்:"இரண்டு நல்லவனுக்கு மூன்று வழி. ஒரு நல்லவன்– ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி. இரண்டு கெட்டவனுக்கு ஒரேவழி" என்றார்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இதற்கு என்ன விளக்கம்? என்றேன்.

அதன் பின் அவர் விளக்கம் கொடுத்தார்.

ஒரு ஒற்றையடி பாதையில் எதிரும் புதிருமாக இரண்டு பேர் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் பாதையை விட்டு விலகாமல் நேராக வந்தால் மோதிக்கொள்ள வேண்டியது தான். எதிரும் புதிருமாக வந்து கொண்டிருக்கும் இவர்கள் இருவருமே நல்லவர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

அவர் என்ன செய்வார்? இவர் நேராக பாதை யில் வரட்டும் என்று அவர் வரப்பை விட்டு விலகி கீழே இறங்கி நடந்து வருவார்.

இவர் என்ன செய்வார்? அவர் பாதையில் வரட்டும் என்று விலகி கீழே இறங்கி நடந்து வருவார்.

அவருக்காக இவரும் இவருக்காக அவரும் விட்டுக் கொடுக்கிறார்கள். ஆக அவர் வரும் பாதையொன்று. இவர் போகும் பாதையொன்று. நடுவில் ஏற்கனவே உள்ள பாதையொன்று. மொத்தம் மூன்று.

அதுதான் இரண்டு நல்லவனுக்கு மூன்று வழி என்று சொல்வது.

ஒரு நல்லவன்– ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி. இது எப்படி என்றால்... ஒரே வரப்பில் எதிரும் புதிருமாக வரும் இரண்டு பேரில் ஒருவன் நல்லவன். ஒருவன் கெட்டவன்.

நல்லவன் வரப்பை விட்டு கீழே இறங்கி எதிரில் வருபவனுக்கு வழி விடுவான். கெட்டவன் வரப்பை விட்டு இறங்கவே மாட்டான். அவன் இறங்கட்டுமே. நாம் எதற்கு இறங்க வேண்டும் என்று இருந்து விடுவான். இப்பொழுது இரண்டு பாதைதான் உண்டு. இதுதான் ஒரு நல்லவன்– ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி என்று சொல்வது.

இரண்டு கெட்டவனுக்கு ஒரே வழியென்று சொல்வது எப்படித் தெரியுமா?

ஒரே வரப்பில் எதிரும் புதிருமாக வரும் இரண்டு பேருமே கெட்டவன் என்று வைத்துக் கொள்ளுங்கள். இரண்டு பேருமே வரப்பை விட்டு கீழே இறங்க மாட்டார்கள்.

இவன் இறங்கட்டுமே என்று அவனும் அவன் இறங்கட்டுமே என்று இவனும் இருப்பார்கள்.

இதுதான் கெட்டவனுக்கு ஒரேவழி என்று சொல்வது. இப்பொழுதுதான் அந்தப் பெரியவர் சொன்ன வார்த்தைக்கு அர்த்தம் புரிந்தது. அவரே இன்னொரு விடயத்தையும் சொன்னார்.

அதாவது நமக்கு வரும் இடையூறுகள் மூன்று வகை என்றார். அது எப்படி என்று கேட்டேன். நாம் ஒரு காரியத்தை தொடங்குகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு மூன்று வகையில் இடைஞ்சல் வரலாமாம்.

நம்மால் வரும் இடைஞ்சல் ஒரு வகை. இது ஆத்யாத்மிகம்.

நம்மைத் தவிர மற்றவர்களால் வரும் இடைஞ்சல் ஒரு வகை– இது ஆதிபௌதிகம்.

இயற்கையாக வரும் இடைஞ்சல் மூன்றாவது ரகம். அதற்கு பெயர்– ஆதிதெய்வீகம்.

நமக்குப் பிடித்த ஒரு சினிமாப்படத்தை பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

அந்த நேரம் பார்த்து நமக்கு வயிற்றை வலிக்கிறது. இது நம்மிடம் இருந்தே வரும் இடைஞ்சல்.

ஆர்வமாக அந்தப் படத்தை பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்தச்சமயம் பார்த்து பக்கத்திலிருப்பவர்கள் சத்தம் போடுகிறார்கள். இது மற்றவர்களால் வரும் இடைஞ்சல்.

அந்தச்சமயம் பார்த்து இடி–மின்னல்– பூகம்பம்... கரன்ட் போய் விடுகிறது. இது இயற்கை உண்டு பண்ணும் இடைஞ்சல்.

இப்படி மூன்று வகையாகவும் இடைஞ்சல் வரக்கூடாது என்பதற்காகத்தான் பெரியவர்கள் சாந்தி–சாந்தி– சாந்தி என்று மூன்று தடவை சொல்கிறார்கள். இந்த மூன்று இடைஞ்சலும் அமைதியாக இருக்க வேண்டும் என்று அர்த்தம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 14 கிராம சேவையாளர்களின் தேவைக்கு 8 கிராம சேவையாளர்களே சேவையில்

### தேவையை பூர்த்தி செய்வதில் மக்கள் சிரமம்

(ஆனையிறவு)

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 14 கிராம சேவையாளர் பிரிவுகளில் 8 கிராம சேவையாளர்களே பணியாற்றுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் இரண்டு அல்லது மூன்று கிராமங்களை உள்ளடக்கி ஒரு கிராம சேவையாளர் மட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றார்.மேற்குறித்த பிரதேச செயலர் பிரிவில் குறைந்தளவிலான கிராம சேவையாளர்களே பணியாற்றி வருவதால் மக்கள் தமது உடனடி தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

அண்மையில் மீள்குடியேற்றப்பட்ட இம் மக்களின் வாழ்க்கைத் தேவைகள் பெருமளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய கட்டாய தேவை உள்ளது.

இதே நிலையில் ஒரு கிராம சேவையாளர் பிரிவில் மக்களுக்குதேவை ஏற்படும் பொழுது பெறமுடியாத நிலை உள்ளது.

கிராமசேவையாளர்கள் இரண்டு அல்லது மூன்று கிராமத்தில் ஒ்ரே வேளையில் பணியாற்ற வேண்டிய தேவை உள்ளமையே இதற்குக் காரணம்.

இதனால் அப்பகுதி மக்களே பெரும் சிரமங்களைஎதிர்கொள்கின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் இதனை கருத்தில் கொண்டு ஒரு கிராம சேவையாளர் பிரிவிற்கு ஒரு கிராம சேவையாளரை நியமித்து மக்கள் தமது தேவைகளை உடனுக்குடன் பூர்த்தி செய்ய ஆவன செய்யுமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-264)

# புதுமுறிப்புக்குள அபிவிருத்தி வேலைகள் ஆரம்பமாகின

(சிவநகர்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள புதுமுறிப்புக் குளத்தின் அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன பிரதிப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி அபிவிருத்தி பணிகள் கடந்த 9 ஆம் திகதி யாவன்ச கட்டுமான ஒப்பந்தகாரரிடம் கையளிக்கப்பட்டது. இவ்வேலைகள் 109 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய மேற்படி வேலைகள் யாவும் புதுவருடத்தின் பின்னர் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் குளக்கட்டினைப் பலப்படுத்துதல், வாய்க்கால்கள், கழிவு வாய்க்கால்கள், வீதிகள் என்பன புனரமைக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இச் செயற்பாட்டினால் இக் குளத்தின் கீழுள்ள 327 குடும்பங்கள் நேரடியாகவும் ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் மறைமுகமாகவும் பயன் பெறவுள்ளனர்.

மேலும் புதுமுறிப்பு, சிவநகர், ஜெயந்திநகர் ஆகிய கமக்கார அமைப்பின் கீழுள்ள விவசாயிகளும் நன்மையடையவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2-254)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 40 | 30 | 40 |
| தக்காளி | 60 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 30 |
| கோவா | 15 | 10 | 25 |
| கரட் | 35 | 60 | 45 |
| பூசணி | 30 | 30 | 30 |
| புடோல் | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 25 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 50 | 40-70 | 70 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 80 | 90 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | -- |
| பயற்றங்காய் | 40 | 80 | 70 |
| லீக்ஸ் | 70 | 70 | 50 |
| பீற்றூட் | 30 | 20 | 20 |
| கறிமிளகாய் | 50 | 40 | 60 |
| முருங்கைக்காய் | 300-350 | 350 | 300 |
| போஞ்சி | 40 | 60 | 50 |
| கத்தரிதம்புள்ள | 25 | 30 | 30 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 40 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 15-35 | 30 | 25 |

# இராசி பலன்

13.04.2012
(சித்திரை 01, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
சப்தமி முற்பகல் 10.40 மணிவரை
பூராடம் பிற்பகல் 3.51 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
நந்தன வருடப்பிறப்பு.

**மேடம்** நல்லவர்கள் தொடர்பால் நலம் காணும் நாள், ஆரோக்கியம் சீராகும், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் தொடர்பில் புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**இடபம்** கடவுளை வழிபட்டு காரியங்களைத் தொடங்க வேண்டிய நாள், சிரித்து பேசும் நண்பர்களால் சில சிக்கல்கள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பழைய சடங்கு சம்பிரதாயங்களில் அதிக நம்பிக்கை ஏற்படும், வாழ்க்கைத் துணை வழியே வரவுகள் வந்து சேரலாம்.

**கடகம்** உறவினர் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும், விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடைவீர்கள், வழிபாட்டால் சிறப்பு பெறுவீர்கள்.

**சிங்கம்** பிள்ளைகள் வழியில் சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம், பூர்வீகச் சொத்துக்கள் தொடர்பில் ஆதாயம் கிடைக்கலாம், பிரபலமானவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் தோன்றலாம்.

**கன்னி** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பெற்றோரின் தேவைகளை நிறைவு செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், உடன் பிறப்புக்கள் வழியில் உற்சாகமான தகவல் வந்து சேரலாம், ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும்.

**விருச்சிகம்** புதிய பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள், உறவினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலைகள் அமையலாம், உங்கள் கருத்துக்கு மதிப்பு கிடைக்கும், பண வரவுண்டு.

**தனுசு** வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்,சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறாவிட்டாலும் எதிர்பாராத காரியமொன்று நடைபெறும்.

**மகரம்** இறைவழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திருப்பம் வரலாம்,உறவினர்களின் நலனுக்காக செலவு செய்யும் சூழ்நிலை அமையலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரலாம், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், ஆடம்பரப் பொருட்களில் விருப்பங்காட்டுவீர்கள், அந்நிய தேசத் தொடர்புகள் எண்ணியபடியே கை கூடும்.

**மீனம்** தொழில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவு எடுப்பீர்கள், உற்சாகத்துடன் பணிபுரியும் நாள், பொதுவாழ்வில் பாராட்டுப் பெறுவீர்கள், விருந்து விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

வளவன்

## இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் புதுவருடத்தன்று காலை 9 மணிக்கு இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

7 ஆவது வருடமாக நடைபெறவுள்ள இந்த இரத்ததான நிகழ்வு காலை 9 மணிக்கு பொற்பதி அறிவாலய மண்டபத்தில் ஆரம்ப மாகவுள்ளது.

இரத்ததானம் செய்ய ஆர்வம் உள்ளவர்கள் பங்கு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-6)

## கலைவிழா

(யாழ்ப்பாணம்)

யா/ சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் அபிவிருத்தி நிதிக்கான மாபெரும் கலை விழா நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு விக்ரோறியாக் கல்லூரி திறந்தவெளி அரங்கில் நடைபெறவுள்ளதாக பழைய மாணவர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இக்கலை விழாவில் மங்கல இசை, நாடகம், இன்னிசைக்கானங்கள், நாட்டியாஞ்சலி, நாட்டுக்கூத்து என்பனவும நடைபெறவுள்ளன. (அ-9)




## 92 ஆவது ஆண்டு நிறைவு விழா

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதயா சங்கத்தின் 92 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சங்க மண்டபத்தில் தலைவர் ப.துஸ்யந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.சுரேஸ்பிறேமச்சந்திரன், சிறப்பு விருந்தினர்களாக வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் தவிசாளர் அ.உதயகுமார், யாழ். மாவட்ட விளையாட்டுத்திணைக்கள பணிப்பாளர் சி. அண்ணாத்துரை, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடமாகாண பணிப்பாளர் மோசஸ் மரியதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் அன்றைய தினம் காலை 6 மணிக்கு மேற்படி சங்க முன்றலில் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியும் மாலை கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (அ-9-134)

# வாழ்க்கைப்பயணம் சிறுகதை தொகுப்பு வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

முருகேசு ரவீந்திரனின் வாழ்க்கைப் பயணம் சிறுகதை தொகுப்பு வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் நல்லூர் இல.527, நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆங்கில போதனாசிரியர் த. அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்வெளியீட்டு விழாவில் சிறப்புரையினை யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய ஆசிரியர் ந.சத்தியபாலன், நூல் அறிமுக உரையினை யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை அதிபர் கா. சசிதரன், வெளியீட்டுரையினை யா/ கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய ஆசிரியர் பாலசிங்கம் சண்முகநாதன், நூல் ஆய்வினை யாழ். கல்வி வலய தமிழ்த்துறை உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை கல்விக் காருண்யன் மனிதநேய ஈகையாளன் லயன் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் பெற்றுக்கொள்வார்.

அத்துடன் ஓவியர் கௌரவிப்பும் நடைபெறவுள்ளதாக அறிவித்துள்ளனர். (அ-9)

# .கொள்ளைச் சம்பவம் முறியடிப்பு; கொள்ளையர்கள் தப்பியோட்டம்

(கரவெட்டி)

பொலிகண்டி வீரபத்திரகோவில் பகுதியில் நேற்று அதிகாலை ஒரு மணிக்கு கொள்ளையர்களுக்கும் வீட்டு உரிமையாளர்களுக்கும் ஏற்பட்ட மோதலில் வீட்டு உரிமையாளர்கள் காயமடைந்ததுடன் பாரிய கொள்ளை முயற்சியும் முறியடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, குறித்த வீட்டில் பணவரவு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றவேளை அதனை அவதானித்த கொள்ளையர்கள் நேற்று அதிகாலை கொள்ளையடிக்கும் நோக்குடன் வீட்டிற்குள் புகுந்த சமயமே இம்மோதல் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் கொள்ளையர்கள் தப்பிச் சென்றதுடன். பாரிய கொள்ளைச்சம்பவமும் முறியடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் வீட்டு உரிமையாளர்களான ஏ.றமணன் (வயது 32), வினோத் (வயது 22) ஆகிய இரு சகோதரர்களுமே காயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-24)

# தப்பியோடிய விளக்கமறியல் கைதிக்கு ஆறுமாத சிறை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை விடுதியில் தங்கி சிகிச்சை பெற்றவேளை தப்பியோடி தலைமறைவாகியிருந்த விளக்கமறியல் கைதிக்கு யாழ். நீதவான் மா. கணேசராசா ஆறுமாத சிறைத்தண்டனை விதித்தார்.

மானிப்பாயைச் சேர்ந்த வடிவேலு இராசரத்தினம் (வயது-47) என்பவருக்கே சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சைக்கிள் திருடிய குற்றச்சாட்டில் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் குறித்த நபர் ஆஜர் படுத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த நபரினை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் உத்தரவிட்டிருந்தார். 18 நாட்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த நபர் சுகவீனம் எனக் கூறியதால் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதன்போது மலசலகூடத்திற்கு செல்வதாக கூறி இரவு 10 மணியளவில் தப்பிச் சென்றுள்ளார்.

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் குறித்த நபரினை தேடி கோண்டாவில் உப்புமடம் சந்தியில் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இந்நபர் யாழ். நீதிமன்றின் உத்தரவிற்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் நேற்றுமுன்தினம் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதவான் குறித்த நபருக்கு 6 மாத கால சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார். (அ-4)

# விளையாட்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கிழக்கு வளர்மதி விளையாட்டுக்கழகம் சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு நடாத்தும் விளையாட்டுவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யா/ கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலை மைதானத்தில் கழகத் தலைவர் வே.ஜெயாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் கரப்பந்தாட்டம் (ஓவர்கேம்), கரப்பந்தாட்டம் (செற் அப்கேம்) என்பன இரவு மின்னொளியில் இறுதியாட்டங்களாக நடைபெறவுள்ளதாகவும் விளையாட்டுக்கழகம் அறிவித்துள்ளது. (அ)

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா எதிர்வரும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அச்சுவேலி கூட்டுறவுச்சங்க மைதானத்தில் பிரதேச செயலாளர் ம. பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் விளையாட்டுத்துறை உதவிச் செயலாளர் எஸ். சிவகரன், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப்பணிப்பாளர் சி. அண்ணாத்துரை, யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஜே. ரூபசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-9-134)

## புதுவருட விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் புதுவருட விளையாட்டு விழா-2012 இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் கழக தலைவர் செ. பகீரதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி தெற்கு, மேற்கு முன்னாள் கழக தலைவரும் பிரதேச சபை உறுப்பினருமான க. பரஞ்சோதி, சிறப்பு விருந்தினராக கரணவாய் கிழக்கு ஜே/351 கிராம அலுவலர் வே. வைத்தியலிங்கம், கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் க. கணேசமூர்த்தி, வலம்புரி ஆசிரியர் சி.ஜி. திருமாலழகன், திடீர் மரண விசாரணை அதிகாரியும் சிலிங்கோ ஆயுட் காப்புறுதி முகாமையாளர் வே. பாஸ்கரன், ஆசிரியர் சி. கௌசிகன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ. ரமணன் ஆகியோர் கலந்து கொள்வர். (அ-9)

## உடற்பயிற்சிப்போட்டிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் இருபாலாருக்குமான வலய மட்ட உடற்பயிற்சி போட்டிகள் எதிர்வரும் 14, 15,16 ஆம் திகதிகளில் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 14, 15 ஆம் திகதிகளில் பெண்களுக்கான கரப்பந்தாட்டப்போட்டிகளும் 16 ஆம் திகதி பாடசாலைகளுக்கான வலய மட்ட உடற்பயிற்சிப் போட்டிகளும் நடைபெறவுள்ளது என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (அ-3-29)





யா/ கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர் ஒருவர் மங்கல விளக்கேற்றுவதையும் பரிசில் பெற்றுக்கொண்ட மாணவர்கள் விருந்தினர்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# சுப நேரக் கொடுக்கல் வாங்கலுக்கு கைநிறைய அற்புதமான பரிசுகள்

மங்களகரமான சித்திரைப் புத்தாண்டின் சுப நேரத்தில் உங்கள் பணத்தை வைப்பிலிட்டு கவர்ச்சியான பரிசுகளைப் பெறுங்கள்.

## ஏப்பிரல் 14ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை எமது கிளைகள் உங்களுக்காகத் திறந்திருக்கும்.




ஒரு வருட அல்லது அதற்கு மேற்பட்ட நிலையான வைப்பிற்கு பரிசு வழங்கப்படும்.

## நிலையான வைப்புகளுக்கு 15.50% ஆண்டுக்கு

வருட முதிர்ச்சியில் மற்றும். வ.வி.வ.வீ.

சிரேஷ்ட பிரஜைகளுக்கு 1% மேலதிக வட்டி*

## வட்டி வீதங்கள்

| முதலீட்டுக் காலம் | வட்டி வீதம் | வ.தே.வ. | வட்டி வீதம் | வ.தே.வ. |
|---|---|---|---|---|
| வட்டி வழங்கப்படும் காலம் | முதிர்ச்சியில் | | மாதாந்தம் | |
| 1 வருடம் | 15.50 % | 15.50 % | 15.25 % | 16.36 % |
| 2 வருடங்கள் | 16.50 % | 15.33 % | 16.25 % | 17.52 % |
| 3 வருடங்கள் | 16.75 % | 14.53 % | 16.25 % | 17.52 % |
| 4 வருடங்கள் | 16.75 % | 13.68 % | 16.25 % | 17.52 % |
| 5 வருடங்கள் | 16.75 % | 12.94 % | 16.25 % | 17.52 % |

வட்டி வீதங்கள் 2012 ஏப்ரல் 1 முதல் செல்லுபடியாகும். RAM BBB- / P3 (Stable)

(சி/6348)

011 533 2712

softlogic Finance

கூட்டிணைத்த திகதி: 24.08.1999

2011இன் 42ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் இந்நிதி நிறுவனம் அனுமதி பெறப்பட்டுள்ளது.

**சொவ்ட்லொஜிக் ஃபினான்ஸ் பி.எல்.சி., இல.1, லேக் கிரெசன்ட், கொழும்பு 02.**

கிளை வலையமைப்பு: கொழும்பு - 011 2577455, பதுளை - 055 5635072-3, சிலாபம் - 032 2221415, தம்புள்ளை - 066 2284737, எம்பிலிப்பிட்டி - 047 2230590-1, கடவத்தை - 011 2923011-2, கண்டி - 081 2224913, மாத்தறை - 041 2220195, நுவரெலியா - 052 2223382, நீர்கொழும்பு - 031 2224714, இரத்தினபுரி - 045 2230677, பொலன்னறுவை - 027 2228727, காலி - 091 2226501, அனுராதபுரம் - 025 2226279, குருநாகல் - 037 2232875, நாவல - 011 2807080, யாழ்ப்பாணம் - 021 2219444.

# புதிய 'நந்தன' வருடப்பிறப்பு கருமங்களும் பொதுப்பலன்களும்

## திருக்கணித பஞ்சாங்கம்

| | | | |
|---|---|---|---|
| புதன் 03-16 யுரே 11-36 | சூரி 00-00 குரு 22-07 | சுக் 14-37 கேது 13-28 | |
| நெப் 08-24 | புதுவருட ஜாதகம் | | |
| சந்திரன் 01-33 | | | செவ்வாய் 09-39 |
| | ராகு 13-28 | லக் 15-21 சனி 02-19 | |

கரவருடம்பங்குனிமாதம் 31ஆம் திகதி (13.04.2012) வெள்ளிக்கிழமை முன்னிரவு 7.20 இல் 'நந்தன' என்னும் பெயருடைய புதுவருடம் பிறக்கின்றது.

அன்று நட்சத்திரம் உத்தராடம் 2ஆம் பாதம். திதி அபர அட்டமி. சித்தயோகம். இது 60 வருட சுற்றுவட்டத்தில் 26ஆவது வருடமாகும். அன்று பிற்பகல் 3.20 மணி முதல் முன்னிரவு 11.20 மணி வரை மேட சங்கிரமான புண்ணியகாலம் எனப்படும். வருடம் பிறக்கும் போது உதய லக்கினம் துலாம் ஆக அமைகிறது.

### கருமங்கள்

இப்புண்ணிய காலத்தில் சகலரும் சங்கற்ப பூர்வமாக மருத்துநீர் தேய்த்து தலையில் புங்கமிலையும் காலில்ஆலிலையும்வைத்து ஸ்நானஞ்செய்து வெண்மஞ்சள் பட்டாயினும் அல்லது மஞ்சள் கரை வைத்த வெள்ளைப் புதுவஸ்திரமாயினும் தரித்து,வைரம் சேர்த்திழைக்கப்பெற்ற ஆபரணங்களையணிந்து விநாயகர் முதலிய இஷ்ட குலதெய்வங்களைத் தரிசனம் செய்து இயன்ற தானாதிகள் வழங்கி குரு, பெற்றோர் முதலிய பெரியோர்களை வணங்கி, அவர்கள் ஆசிபெற்று, விருந்தினர்களை உபசரித்து, சுற்றத்தினரிடமிருந்து கடுகு தாளிதஞ் செய்த புளியோதரை, தயிரன்னம், நெல்லிக்காய் துவையல் முதலியவற்றுடன் அறுசுவைப் பதார்த்தங்களையும் போஜனம் செய்து, தாம்பூலமருந்தி, சுகந்த சந்தன புஸ்பாதிகளையணிந்து நல்லனவற்றை அறிந்து சயனிப்பார்களாக.

மறுநாளாகிய சித்திரை முதலாம் திகதி சனிக்கிழமை அதிகாலையில் எழுந்து கண்ணாடி, பூரண கும்பம், தீபம் முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து முன்போல் ஸ்நானஞ்செய்து புதுவருட சூரியனுக்கு பொங்கல், பூஜை வழிபாடுகள் செய்து பிதிர் விரதானுசாரிகள் சிரார்த்தம், தர்ப்பணம் என்பன செய்து சுகந்த சந்தன புஸ்பாதிகளையணிந்து, விருந்தினர்கள், நண்பர்கள், சுற்றத்தாருடன் முன்போல் போசனஞ்செய்து தாம்பூலமருந்தி புதுவருடத்தில் ஆற்றக்கூடிய நற்கருமங்களைச் சிந்தித்து மங்களகரமாக வாழ்வார்களாக.

### சங்கிரமதோச நட்சத்திரங்கள்

கார்த்திகை, மிருகசீரிடம் 3,4ஆம் கால்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் கால்கள், உத்தரம், மூலம், பூராடம்,உத்தராடம், திருவோணம்,அவிட்டம் 1,2ஆம் கால்கள்.

### கைவிசேடம்

15.04.2012 ஞாயிறு காலை 6.05 தொடக்கம் 6.50 மணிவரை

15.04.2012 ஞாயிறு முற்பகல் 8.00 தொடக்கம் 9.55 மணிவரை

16.04.2012 திங்கள் முற்பகல் 9.12 தொடக்கம் 9.48 மணிவரை

### பொதுப்பலன்கள்

சூரியன் 6ஆம் பாவத்தைப் பொருந்துவதுடன் சனியின் எதிர் திருஷ்டியையும் பெறுவதால் அரசியல் நிலைமைகளில் பல சச்சரவுகளும் பரஸ்பர விரோதங்களும் காட்டும். உயர் பதவியிலுள்ளோரின் மறைவுகள் ஏற்படும். 4ஆம் பாவத்தில் சந்திரன் இருப்பதால் மக்களுக்குப் போக்குவரத்து போன்ற பல வசதிகள் ஏற்பட்டாலும் திடீர் விபத்துக்களும் வாகன விபத்துக்களும் நடக்கும். புதன் 5ஆம் பாவத்தைப் பொருந்துவதால் கல்வித்துறை முன்னேற்றமடையும், கலாசாலைகள், மல்கலைக்கழகங்கள் சிறப்பாக இயங்கும், குரு 7 ஆம் பாவத்தில் இருப்பதால் சமயாசார நிகழ்வுகள் சிறக்கும், ஆலய விழாக்கள் சிறப்படைவதோடு மதகுருமார் கௌரவிக்கப்படுவார்கள், சுக்ரன் 8 இல் ஆட்சி பெறுவதால் திருமணம் முதலிய மங்கல நிகழ்வுகள் கூடுதலாக இடம்பெறும். பொழுது போக்குத்துறை சார்ந்த கல்விகளும் முன்னேற்றமடையும். செவ்வாய் 11 இல் விவசாய முன்னேற்றத்தையும் அதிக விளைச்சலையும் கொடுக்கும்.

## வாக்கிய பஞ்சாங்கம்

| | | | |
|---|---|---|---|
| புதன் | சூரியன் குரு | சுக்கிர்ன் கேது | |
| | நந்தன வருட ஜாதகம் | | |
| | | | செவ்வாய் |
| சந்திரன் | இராகு | | லக்கினம் சனி |

சித்திரைமாதம் முதலாம் திகதி (13.04.2012) வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.45 மணிக்கு அபரபக்க அட்டமித் திதியில் உத்தராட நட்சத்திரத்தின் முதலாம் பாதத்தில் சித்த நாம யோகத்தில் பாலவக்கரணத்தில் கன்னி இலக்கினத்தில் கடக நவாம்சத்தில் குரு காலவோரையில் சூரியன் சூக்குமவோரையில் தாமதகுண வேளையில் நட்சத்திரப் பட்சியாகிய கோழி உண்டித் தொழிலும் சூக்கும பட்சி உண்டித் தொழிலும் செய்யும் காலத்தில் இப்புதிய நந்தன வருடம் பிறக்கின்றது. அன்று பிற்பகல் 1.45 மணிமுதல் அன்று முன்னிரவு 9.45 மணிவரை விஷு புண்ணியகாலமாகும்.

### கருமங்கள்

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து சிரசில் கொன்றை இலையும் காலில் புங்கம் இலையும் வைத்து ஸ்நானஞ்செய்து நல்ல பச்சைப் பட்டாடையாயினும் வெள்ளைக்கரை அமைந்த புதிய பட்டாடையாயினும் தரித்து பச்சை, மரகதம், வைரம் இழைத்த ஆபரணமணிந்து சுகந்த சந்தனம் பூசி, நறுமலர் சூடி விக்னேஸ்வரர் முதலிய குலதெய்வ வழிபாடு செய்து, சூரியனுக்குப் பொங்கல், பூசைகள் செய்து, குரு, பெற்றோர் முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசிபெற்று, பந்துமித்திரர்களுடன் அளவளாவி, அறுசுவை அமைந்த உண்டிகளுடன் பொரிகடுகு, பொரி எள், புளி,நெல்லிக்கனி என்பவை சேர்த்தருந்தி, தாம்பூலம் தரித்து, கண்ணாடி,தீபம், நிறைகும் முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து, நல்லவற்றைக் கேட்டும் வாசித்தும் பேசியும் அரிய தவத்தால் பெற்ற மானிடப்பிறவியில் செயற்பாலனவற்றை இனிது சிந்தித்து சுகமாக வாழக்கடவர்.

### மருத்துநீர் தயாரித்தல்

தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம்பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திப்பிலி, சுக்கு இவைகளை சுத்த ஜலத்திலிட்டு காய்ச்சிக் கொள்க.

### சங்கிரம தோச நட்சத்திரங்கள்

கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் 1ஆம், 2ஆம் கால்கள், உத்தரம், மூலம், பூராடம், உத்தராடம்

### கைவிசேடம்

15.04.2012 ஞாயிறு முற்பகல் 8.42 தொடக்கம் 9.44 மணிவரை

15.04.2012 ஞாயிறு முற்பகல் 9.56 தொடக்கம் 11.54 மணிவரை

15.04.2012 ஞாயிறு பிற்பகல் 12.06 தொடக்கம் 2.02 மணிவரை

16.04.2012 திங்கள் முற்பகல் 9.10 தொடக்கம் 9.44 மணிவரை

16.04.2012 திங்கள் முற்பகல் 9.52 தொடக்கம் 11.47 மணிவரை


16.04.2012 திங்கள் பிற்பகல் 12.03 தொடக்கம் 1.58 மணிவரை

### பொதுப்பலன்கள்

மிகுதியான வெப்பம், முன் மழை சமம், பின்மழை அதிகம், கூடுதலான பூமியில் பயிரிடப்படுதல், சனங்களுக்கு நற்கருமங்களில் ஊக்கமிகுதி, உணவுப்பொருள் விருத்தி, வயோதிபர் கஷ்டம், திருடர்கள் அதிக தண்டனை பெறுதல், சுபபாசை கல்வி விருத்தி, சமய பிரயாசை மிகுதி, உலகத்தில் அதிர்ச்சியடையக்கூடிய சம்பவங்கள் நடைபெறுதலும் பயமும் உண்டாகலாம்:



# வடமாகாண ஆளுநரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி



மாண்புமிகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையின் கீழ் இவ்வரசாங்கம் வடமாகாணத்தின் சுபீட்சத்தை நோக்கி செல்ல அர்ப்பணிப்புடன் பாடுபட்டு வந்தமையால் அபிவிருத்திப்பணியின் பலாபலன்களை மக்கள் அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர்.


இவ்வாறு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி தனது சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவரது வாழ்த்துச்செய்தியில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

வடபகுதி மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ்வதையும் தமிழ், சிங்கள புத்தாண்டை தம் குடும்பங்களோடு மகிழ்ச்சியாக கொண்டாடுவதையும் கண்டு பேருவகை அடைகிறேன். எங்களுடைய பாரம்பரியங்கள் மற்றும் வழி வழி வந்த நடைமுறைகளுக்கமைய புத்தாண்டைக் கொண்டாடுவதே ஒற்றுமையும் நல்லிணக்கத்தையும் வளர்க்கும் வழியாகும்.

சமூக மற்றும் கலாசார விழுமியங்களைப்பேணும் ஒரு சமூகமாக வடக்கு எழுச்சி பெறவேண்டும் என்பதே என் வேணவா ஆகும்.

உங்கள் அனைவருக்கும் தமிழ், சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# நம்பிக்கையுடன் வாழ்வை ஆரம்பிப்போம்



புத்தாண்டு வருகிறது. தமிழ்மக்கள் காலையிலெழுந்து நீராடி தமக்கு நம்பிக்கையுள்ள தெய்வங்களை வணங்கிப் புத்தரிசி எடுத்துப் பொங்கி மகிழ்வதுதான் பாரம்பரியமாகும். தம் நம்பிக்கைகள் நிறைவேற வேண்டி கோவில்களில் வழி பாடியற்றுவர்.

இவ்வாறு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இஸ்ரேலிய நாட்டின் மக்கள் அன்று அவர் நாட்டுத் தந்தை பெர்குஸன் தலைமையிலே ஒவ்வோராண்டும் புத்தாண்டில் ஒன்று கூடி அடுத்தாண்டில் சுதந்திர தேசத்தில் கொண்டாடுவோம் என உறுதி எடுத்துக் கொள்வார்கள். பின் சுதந்திர நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள்.

அதேபோல நம் தமிழ் மக்களும் ஒவ்வொரு புத்தாண்டிலும் வரும் ஆண்டு வளமாக வாழ்வோம்.

சுதந்திர தேசத்தில் விடுதலை பெற்றவர் களாய் வாழ்வோம் என்ற தன்னம்பிக்கையை நெஞ்சில் நிறுத்தி இப்புத்தாண்டில் வாழ்வை ஆரம்பிக்க வேண்டுமென வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

## நந்தன வருடமும் நீயும்

சிந்தை இனித்திடும் நந்தன வருடமே வருக!
நம் துயரதனைக் களைக
எத்தகை புத்தாண்டுகளை வரவேற்கிறோம்!
இன்னும் எம் துயர் தீரவில்லை பேரிடி எனத் தொடரும்
எம் வாழ்வில் ஜெயம் பெற
மங்களம் சேர்ப்பாயா
மாற்றங்கள் தருவாயா
இல்லை நீயும்....

புலோலியூர்
வேல்நந்தன்

## தோற்காமல் வாழவேண்டும்

ஆன்மீக, விஞ்ஞான, கணித மொழிகளில்
அகிலத்தையே நாம் வென்றிட வேண்டும்
தேனான நம் நாட்டில் என்ன இல்லை?
தோற்காமல் வாழ வேண்டும் நந்தனா!

கே.எஸ். சிவஞானராஜா,
கொக்குவில்


WESTERN UNION
DHL EXPRESS
D-Link Building Networks for People
Sri Lanka Telecom Mobitel We Care. Always.

# திருமுருகன் கொம் நெற்

MMBL Money Master
EPSON EXCEED YOUR VISION

வெளிநாட்டிலிருந்து பணத்தை பெற்றுக்கொள்ள
பாதுகாப்பான விரைவான நம்பிக்கையான சேவை
உள்ளூர், வெளிநாடுகளுக்கான ஆகாய,
கடல் மார்க்கமான துரித கடிதங்கள், பொதிகள் சேவை
220 க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான
துரித தபால் பொதிகள் சேவை



அனைத்து விதமான கணனி உதிரிப் பாகங்களையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள



03 நாட்களில் ஒப்படைக்கப்படும்

DHL உத்தரவு பெற்ற முகவர்
Thirumurugan Com Net

இல.259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல.05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி,
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு-06

# தமிழ்-சிங்கள பயங்கரவாத கொலைகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவில்லை

## சமூக தொடர்பாடல் கலாசார நிலையம் அறிக்கை

(கொழும்பு)

தமிழ், சிங்கள பயங்கரவாத குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட கொலைகள் சம்பந்தமாக பொதுவான விசாரணைகள் நடத்தப்படவில்லை என கத்தோலிக்க பேராயரின் சமூக தொடர்பாடல் மற்றும் கலாசார நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கையில் 1970 ஆம் ஆண்டு முதல் பல அரசாங்கங்களும் அரசியல் கட்சிகளும் அடிப்படைவாத குழுவினரும் ஆயுதங்களை வைத்திருந்ததுடன் தமது கொள்கைகளுக்கு இணங்காதவர்களை கடத்திச் சென்று காணாமல் போக செய்து அவர்களின் பிணங்களை பொது இடங்களில் காட்சிக்கு வைத்தனர் என்பதை புதிதாக கூறவேண்டியதில்லை. இவை 88 ஆம், 89 ஆம் ஆண்டுகளில் மிகவும் பயங்கரமான வகையில் நடந்தன.

அதேபோல் எதிரான கொள்கைகளை கொண்ட அரசியல்வாதிகள் மற்றும் பாதாள உலகக்குழுக்களின் தலைவர்கள் கடத்திச் செல்லப்படுதல், கொலை செய்யப்படுதல் என்பன பல்வேறு சந்தர்ப்பங்களில் நடந்துள்ளன.

பயங்கரவாதிகள் செய்த கொலைகளும் அடங்கும். இந்த கொலைகள் தொடர்பாக பொதுவான விசாரணைகள் நடத்தப்படவில்லை என்பது உண்மை. இவ்வாறு கொலை செய்யப்பட்டவர்களில் தமிழ், சிங்கள அரசியல் தலைவர்களும் அடங்குகின்றனர். இந்த குற்றச்செயல் தொடர்பில் சட்ட ரீதியான தண்டனைகள் குறைவாகவே வழங்கப்பட்டுள்ளன.

எதிரான அரசியல் கொள்கைகளை கொண்டுள்ளார் என்பதால் மாத்திரம் ஒருவரை கடத்திச் சென்று காணாமல் போக செய்வது ஜனநாயக விரோத நடவடிக்கையாகும். இது மனிதனின் உரிமையை மீறும் செயல். அத்துடன் இது சமய சிந்தனைகளுக்கும் எதிரானது. நாட்டின் பொதுவான சட்டத்திற்கு எதிராக எவராவது செயற்பட்டால் அவர் மீது பொலிஸ் அல்லது நீதிமன்றம் ஊடாக தண்டனை கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமே அன்றி மாற்று நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவறானது.

அத்துடன் அது அபாயகரமான நிலைமையாகும். இவ்வாறான கடத்தல்கள், காணாமல் போக செய்தல் போன்றவை நாட்டின் சமயசம்பிரதாயங்களுக்குஎந்தவிதத்திலும்பொருந்தாதது எனவும் கத்தோலிக்க பேராயரின் சமூக தொடர்பாடல் மற்றும் கலாசார நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. (அ-2)

# அரசியல்வாதிகள் வெளிநாட்டுக்கு விஜயம்

(கொழும்பு)

புத்தாண்டு காலத்தில் பல அரசியல்வாதிகள் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

•பிரபல அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள்• உள்ளிட்ட பல அரசியல்வாதிகள் விடுமுறையை கழிப்பதற்காக இவ்வாறு வெளி நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளனர்.

எதிர்வரும் புத்தாண்டு காலத்தில் தமது குடும்ப உறுப்பினர்களுடன் இவ்வாறு வெளி நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ள அரசியல் வாதிகளின் எண்ணிக்கை 50 இற்கும் அதிகமாகும்.

• தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் மற்றும் ஆளும் கட்சியின் முக்கிய அமைச்சர்கள் ஆகியோர் இவ்வாறு வெளிநாடுகளில் விடுமுறையைக் கழிக்கத் திட்டமிட்டுள்ளனர். (அ-2)

# பின்தங்கிய பிரதேசங்களிலேயே எமது அபிவிருத்தி வேலைகள் தொடரும்

## அலென்ரின் எம். பி. தெரிவிப்பு

(கொழும்பு)

பின்தங்கிய பிரதேசங்கள் எங்கெல்லாம் உள்ளதோ வறுமைக்கோட்டிற்குள் உட்பட்ட மக்கள் எங்கு வாழ்கின்றார்களோ அங்கு எமது பணிகள் தொடரும் என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட விவசாயிகளுக்கான தெளிகருவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்,

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாயிகளது நலனில் அக்கறை கொண்டவர்களாக நாங்கள் கமநல மற்றும் விவசாய திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாம் வாக்குறுதியளித்ததற்கு அமைய விவசாய உபகரணங்களை வழங்கி வருகின்றோம்.

விவசாயிகள் தற்போது எதிர்கொள்கின்ற எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வினை வழங்கும் நோக்கில் மானிய அடிப்படையில் எரிபொருளை வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். இதேபோல கடற்றொழிலாளர்களுக்கு தற்போது மானிய அடிப்படையில் எரிபொருள் வழங்கப்பட்டு வருகின்றது.

எமது மக்களுக்கான தேவைகளை இனங்கண்டு நிறைவேற்றுவதுடன் அந்தந்த பிரதேசங்களுக்கு என உறுதியளிக்கப்பட்ட உதவிகளை அந்தந்த பிரதேசங்களுக்கே வழங்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# பாலித மீது போர்க்குற்ற விசாரணை நடத்துங்கள்

## அவுஸ்திரேலியா கோரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கான ஐ.நா. நிரந்தர வதிவிட பிரதிநிதி பாலித கோஹனவிற்கு எதிராக போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ளுமாறு அவுஸ்திரேலியாவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவில் இரட்டை குடியுரிமை பெற்றுள்ள கோஹன இலங்கை படையினரால் தமிழர் பகுதியில் மேற்கொண்ட போரின் போது போர்க்குற்றம் புரிந்தமைக்கான ஆதாரங்களை அவுஸ்திரேலிய தமிழ் அமைப்பு ஒன்று பொலிஸாரிடம் சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் இறுதிக்கட்ட போரின் போது இடம்பெற்ற ஒரு கூட்டுக் குற்றவியல் சம்பவம் தொடர்பில் பாலித கோஹன மீது விசாரணை நடத்தவும் என்ற தலைப்பில் 32 பக்கங்கள் அடங்கிய போர்க்குற்ற ஆவணங்களை அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சின் ஊடாக அவுஸ்திரேலிய தமிழ் அமைப்பு சமர்ப்பித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன,

இந்த ஆவணத்தில் உள்ள விடயங்களை மூன்று முக்கிய அம்சங்களில் ஆராயும் அவுஸ்திரேலிய பொலிஸார் இது குறித்து விசாரணை நடத்துவதா இல்லையா என்பதை பின்னர் தீர்மானிப்பர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தற்போதைய தேர்தல் முறைமை பிழையானது

தற்போதைய தேர்தல் முறைமை பிழையானது என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார். தேர்தல் முறையினால் அரசியல் கட்சிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

மோதல்கள், ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் வெடிப்பதற்கு இந்த தேர்தல் முறைமையே காரணம். தேர்தல் முறைமையின் குறைபாடுகளினால் கட்சி கீழே நபர்கள் மேலே எழுந்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியினால் அறிமுகம் செய்யப்பட்ட இந்த தேர்தல் முறைமை பிழையானது. கள்ளச்சாராயம் வடித்த, சட்டவிரோதமாக மரம் வெட்டிய நபர்கள் அரசியலில் பிரவேசிக்க வழியேற்பட்டுள்ளது. (அ-2)

# கொக்கேய்ன் கடத்திய தாய்லாந்து பெண்கள் கைது

கொக்கேய்ன் போதைப்பொருள் கடத்திய இரண்டு தாய்லாந்து பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கட்டாரிலிருந்து இலங்கை சென்ற பெண்களை கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

குறித்த பெண்களிடமிருந்து 17 கொக்கேய்ன் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

விமானம் தரையிறங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னதாக பெண் ஒருவர் மயக்கமடைந்ததனைத் தொடர்ந்து அந்தப் பெண் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் போது பெண்ணின் உடலில் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட கொக்கேய்ன் போதைப் பொருளின் மொத்த எடை இதுவரையில் மதிப்பீடு செய்யப்படவில்லை.

நோய்வாய்ப்பட்ட பெண் பொலிஸ்துறை பாதுகாப்பிற்கு மத்தியில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் அதேவேளை மற்றைய பெண் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)



அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
சிறி தேவி கருமாரி நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்


83/01, கஸ்தூரியார் வீதி, செம்மாதெரு, யாழ்ப்பாணம்.
T.P.:021 5672567

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை ௧௧


பின்லான்டின் ஜெனரல் ஜாம்லர் சீலாஸ், ஜேர்மன் ஜெனரல் ஹான்ஸ் ஜோர்ய்கென்

இந்நடவடிக்கையில் பங்கேற்பதற்காக சோவியத் தரப்பில் 41 டிவிசன்கள், 5 துப்பாக்கிப்படை பிரிகேடுகள், 4 பலப்படுத்தப்பட்ட மண்டலங்களைச் சேர்ந்த துருப்புகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இவற்றில் சுமார் 4 இலட்சத்து 50 ஆயிரம் போர் வீரர்கள் இருந்தனர். சுமார் 10 ஆயிரம் சாதாரண மற்றும் மார்டர் பீரங்கிகளும் 800 ஆயிரத்துக்கும் அதிகமான டாங்கிகள், தானியங்கி பீரங்கி அமைப்புகள் 1547 விமானங்களும் இருந்தன. இவ்வாறாக சோவியத் துருப்புகள் ஆட்பலத்தில் 1.7 மடங்கும் பீரங்கிகளில் எண்ணிக்கையில் 5.2 மடங்கும் டாங்கிகள்,



பின்லாந்தவரின் ஜேர்மனிக்கு எதிரான சுவரொட்டி

7.3 மடங்கும் விமானங்களில் 6.2 மடங்கும் எதிரியை விஞ்சிநின்றன.

முதலில் ஜூன் மாதம் லெனின் கிராட் சேனையின் வலப்பிரிவு துருப்புகள் செம்பதாகை விருது பெற்ற பால்டிக் கடற்படையோடு சேர்ந்து கரேலிய பூசந்தியில் எதிரியின் படைத் திரட்டை முறியடித்தன. பின் ஆகஸ்டு இறுதியில் கரேலிய சேனையின் இடப்பிரிவு துருப்புகள் லதோகா மற்றும் ஒனீகா இராணுவ ப்ளீட்டுகளுடன் சேர்ந்து கரேலியாவில் எதிரியை முறியடித்தன.

எதிரியின் நீண்டகாலத் தற்காப்பைப் பிளப்பதோடு தொடர்புடைய விபெர்க்-பெத்ரொஸவோத்ஸ்க் நடவடிக்கை காடுகளும் சதுப்பு நிலங்களும் ஏரிகளும் நிறைந்திருந்த கடினமான சூழ் நிலைகளில் நடத்தப்பட்டது. இந் நடவிடிக்கையில் எதிரியின் ஆதார நிலையங்கள் மற்றும் எதிர்ப்பு மையங்களைச் சுற்றிச் செல்வதும் வளைப்பதும் பரவலாக பயன்படுத்தப்பட்டன. பிளந்து செல்லும இடங்களில் பீரங்கிப்படையின் அடர்த்தி அதிகமா இருந்தது. நீண்டகால பீரங்கி சடும் இடங்களும் மரத்தாலான பீரங்கி சுடும் இடங்களும் முன்கூட்டியே அழிக்கப்பட்டன. எதிரியின் பலப்படத்தப்பட்ட இடங்கள் மீது விமானப் படையைக்கொண்ட பெரும்தாக்குதல் நடத்தப்பட்டது. விபெர்க்கையும் பெத்ரொஸவோத்ஸ் கையும் விடுவித்து எதிரித்துருப்புகளை பின்லாந்தின் ஆழத்தினுள் தள்ளியது. இவ்வாறாக கரேலி-பின்லாந்து சுயாட் சிக்குடியரசின் பெரும் பகுதியை விடுவித்தது. வடக்கேயிருந்து லெனின் கிராடை எதிர்நோக்கிய அபாயம் அகற்றப்பட்டது. கிரவ் இருப்புப் பாதையையும் பால்டிக்கடலையும் வெண்கடலையும் இணைக்கும் பெல்மோர் பால்டிக்காலைவாயையும் மீண்டும் பயன்படுத்தும் வாய்ப்பு சோவியத்யூனியனக்கு கிடைத்தது.

சோவியத்-ஜேர்மனியப்போர் முனையின் வடபகுதியில் போர்த்தந்திர நிலவரம் சோவியத்யூனியனுக்கு ஆதரவாக உறுதியாக மாறியது. யுத்தத்திலிருந்து வெளியேறும்படி பின்லாந்து நிர்ப்பந்திக்கப்பட்டது. 1944 செப்ரெம்பர் 4 ஆம் திகதி பின்லாந்து இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தியது. செப்ரெம்பர் 19 இல் ஹிட்லரின் கூட்டிலிருந்து வெளியேறி சோவியத்யூனியனுடன் சமரச உடன்படிக்கை செய்து இந்த உடன் படிக்கையை சுதந்திர பின்லாந்தின் வரலாற்றில் வரலாற்றில் திருப்பு


பின்லாந்தை ஜேர்மன் ஆக்கிரமித்திருந்தபொழுது ஹிட்லரும் அவரது அதிகாரரிகளும்

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு

முனையாகக் கருதலாம். இது முற்றிலும் புதிய ஒரு சகாப்பதத்திற்க வழிகோலியது இதில் எமது நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டுக்கொள்கை அடிப்படை மாற்றங்களை அடைந்தது. என்று 1974 இல் பின்லாந்து ஜனாதிபதி ஊர்ஹோ- கேக்கனேன் கூறினார்.

1944 நவம்பரில் பின்லாந்தில் புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டது. இதில் முதன் முதலாக கம்யூனிஸ்ட்டுகள் பங்கேற்றனர். பெரும்முற்பாக்கு அரசியல், அரச பிரமுகராகிய பாசிக் கிவி இந்த அரசாங்கத்திற்குத் தலைமை தாங்கினார். தனது அரசாங்கத்தின் உடனடிக் கடமைகளை நிர்ணயித்த அவர் சுதந்திரதினமாகிய 1944 டிசெம்பர் 6 இல்பின்வருமாறு கூறினர் எனது நம்பிக்கையின்படி, சோவியத் யூனியனுக்கு எதிராக இல்லாதபடி வெளிநாட்டுக்கொள்கையை நடத்துவது என்பது நமது மக்களின் அடிப்படை நல்களுக்கு உகந்ததாகும் சமாதானம், ஒத்துழைப்பு மற்றும் முழு நம்பிக்கையின் அடிப்படையில் சோவியத் யூனியனடன் நல்லண்டை உறவுகள் ஆகியவை தான் நமது அரச நடவடிக்கையில் பின்பற்றி நடக்க வேண்டிய முதல்கோட்பாடாகும்.


பின்லாந்தவர்கள் ஜேர்மனியர்களை விரட்டியபின் தமது கொடியை ஏற்றுகிறார்கள்

பாசிச ஜேர்மனியத் துருப்புகள் பின்லாந்திலிருந்து வெளியேறியபோது பல குடியிருப்பு பகதிகளை அழித்தன. ஆயிரக்கணக்கான மக்களின் வீடுவாசல்களைப்பறித்தன. சுமார் 16 ஆயிரம் வீடுகள் 165 மாதா கோவில்கள் மற்ற சமூகக் கட்டடங்கள் முதலியவற்றைக் கொழுத்தின. 700 பெரிய பாலங்களைத் தகர்த்தன. பின்லாந்துக்கு எற்பட்ட இழப்பு 120 மில்லியன் டாலர்களுக்கும் கூடுதலாக இருந்தது. பாசிச ஜேர்மனி தனது முந்தைய கூட்டாளியை இப்படித்தான் நடத்தியது.

சுதந்திரத்தை மதித்து நடத்தல், பின்லாந்துடன் நல்லண்டை உறவுகளை எற்படுத்துதல், எனும் தனது கொள்கைக்கு ஏற்ப சோவியத்யூனியன் பின்லாந்திற்கு அரசியல்உதவியோடு கூட பொருளாதார உதவியையும் நல்கியது. பின்லாந்துப்பரப்பினுள் சோவியத் துருப்புகள் அனுப்பப்படவில்லை. பின்லாந்து இராணுவம் சோவியத்யூனியனுக்கு ஏற்படுத்திய இழப்பின் ஒருபகுதியை மட்டுமே ஈடுசெய்த போர்நஷ்ட ஈடு பின்லாந்திற்குக் குறைக்கப்பட்டது.

(தொடரும்)


பில்லாந்தின் விமான எதிர்ப்புப் பீரங்கிநிலை


பின்லாந்தவரின் -ஜேர்மனியர்களுக்கு எதிரான இயந்திரத் துப்பாக்கிநிலை

# நந்தன புத்தாண்டு சிறப்புமலர்– 13.04.2012

## புத்தாண்டில் மகிழ்ச்சி பூத்துக் குலுங்கட்டும்



கர வருஷம் மறைந்து இன்று புதிய நந்தன வருடம் உதய மாகிறது. இந்துக்களின் புனிநாளான வெள்ளிக்கிழமை புத்தாண்டு மலர்வது அதி விஷேடமாகும். இவ்வாறு இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் தனது சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில்குறிப்பட்டுள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப் பட்டவைகள் வறுமாறு,

உலகில் எப்போதும் மகிழ்ச்சியாக வாழ்பவர்கள் ஞானிகள். அத்தகைய மகிழ்ச்சியுடன் மனிதனும் வாழ்முடியும். ஆனால் அவ்வாறு வாழ்வதில்லையே ஏன்? மனிதனின் மனமே அவனது வாழ்வைத் தீர்மானிக்கிறது. உள்ளம் தூய்மையாக இருந்தால் அங்கே இறைவன் குடிபுகுந்து விடுகிறான். அதனால் இன்பமே மேலோங்கும்.

மனதில் தீய என்ணங்கள் என்றும் நிறைந்திருந் தால் மனிதனால் எந்தநாளும் துன்பத்தைத்தவிர இன்பத்தை அனுபவிக்க முடியாது. கோபம், பொறாமை, பேராசை, வஞ்சகம், பொய், பிறர் பொருளை அபகரிக் கும் எண்ணம், பிறரை ஏமாற்றுதல், பிறரை துன்பு றுத்தல் ஆகிய தீய எண்ணங்கள் உள்ளத்தில் குப்பை யாக மண்டிக்கிடக்கிறது. அதனால் தான் மனிதன் துன்பத்தில் உழன்று வருந்தி அதிலிருந்து மீளவழி யின்றி தவிக்கிறான்.

இந்தக் குப்பை கூழங்கள் எல்லாம் அகற்றிவிட்டால் உள்ளமானது இறைவனிடம் சுலபமாக. மாறிவிடு கிறது. அங்கு ஆனந்தம் நிலையாக தங்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மனதைத் தூய்மைப்ப டுத்துங்கள், இறைவனை குடியேற்றுங்கள், என்றும் ஆனந்தம் பொங்க வாழுங்கள்.

இந்த் புத்தாண்டு திருநாள் இன்பம் பூத்துக் குலுங் கும் திருநாளாக அமைய வாழ்த்தி ஆசி கூறி என் றென்றும் ஆனந்தத்துடன் நீங்காத செல்வம் நிறைந்து வாழவேண்டு மென எம்பெருமாட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மாளின் திருவடிகளை சிந்தித்து கொள்கிறேன்.

''லோகா சமஸ்தா சுகினோ பவந்து''

## செஞ்சொற் செல்வரின் புத்தாண்டு வாழ்த்து செய்தி



புதிய ஆண்டு மலரும் வேளையில் அனைவரும் சீரும் சிறப்புடனும் நிம்மதியுடனும் வாழப் பிரார்த்திப்போம். எம் மண்ணில் நீதியும் நற்பண்பாடும் நிலைபெற இறையருளை வேண்டுவோம்.


இவ்வாறு தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் தனது சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தி மேலும் குறிப்பிடப்பட்டுள் ளவை வருமாறு,இன்று பிறக்கும் நந்தன வருடம் நலங்கள் பல தந்து நாளைய சந்ததி நல் வழியில் வாழ வேண்டுதல் செய்வோம். எம் முன்னோர் சொன்ன வார்த்தைகள் ஒரு நாளும் வீண் போகாது. உண்மையை ஒரு நாளும் ஒருவ ராலும் ஒழிக்க முடியாது. உண்மை வெல்லும் என்ற உன் னத ஆத்மீக கருத்தை அனைவரும் உணர்கின்றோம் எங்கள் திரு நாட்டில் உண்மை ஒளி உண்டாக வேண்டுமென ஒன்றுபட்டு பிரார்த்திப்போம்.

அன்பும் பண்பும் அரவணைப் பும் நிறைந்த நல்லதோர் சமுதாயத்தை உருவாக் குவதற்கு அனைவரும் ஒன்று பட்டு உழைப்போம். எங்கள் மண்ணில் ஏதிலிகளாக அல்லற்படும் மக்களின் கண்ணீரைத் துடைப் பதற்கு எம்மால் இயன்ற பங்களிப்பைச் செய்வோம். அவப் பொழுதாய் காலத்தை கழிப்பதை விடுத்து அனைவரும் நல்ல உழைப்பாளிகளாக மாற்றம் பெறுவோம். போட்டி, பொறாமை, வஞ்சகம் செய் தல், பிறரைத்தூற்றுதல், குறை காணல் என்ற எல்லை களைத் தாண்டிப் புதிய ஆண்டில் ஆக்கபூர்வமான காரி யங்கள் செய்வதற்கு ஆயத்தமாவோம். எங்களுக்கு கிடைத்த வசதிகள் போதாதென்று ஏங்குவதை தவிர்ப்போம். சிறையில் வாடுபவர்கள், நோயில் துடிப்பவர்கள் உறவை இழந்ததனால் துயரத்தில் மிதப்பவர்கள் எனத் துயருறும் ஆத்மாக்களை எண்ணி அவர்களுக்காக இரக் கப்படுவோம்.

எனவே புத்தாண்டில் கடவு ளை வழிபாடு செய்து புதிய மனதர்களாக வாழ முயற்சி செய்வோம். அன்பர்கள் அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.

## நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி



இன்று புது வருடத்திருநாள். இந்த இனிய நல்ல நாளில் நாம் அனை வரும் ஒன்றிணைந்து ஒற் றுமை யுடன் சுபீட்சமாகவும் மங்க ளகரமா கவும் அமைதியுடனே இந்தச் செல்வங் கொழிக்கும் ஈழமணித் திருநாட்டில் என்றும் மன மகிழ்ச்சியோடு வாழ வேண்டுமென இறையருளை வேண் டிப் பிரார்த்திக்கின்றோம். இவ்வாறு நல்லை திருஞானசம் பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் தனது சித்திரைப் புத்தாண்டு அருளாசிச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது அருளாசிச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட் டுள்ள விடயங்கள் வருமாறு

இந்த நல்ல நாள் முதலாக நாட்டில் அமைதியும் சந்தோஷ மும் நிம்மதியும் நிலவவேண்டும். ஈழம் வாழ்மக்கள் அனை வரும் நலமுடனும் வளமுடனும் இனசனபந்துக்களுடன் சுகமே வாழ்ந்து ஒன்றுபட்டால் உண்டு வாழ்க என்பதற் கிணங்க இருக்க வேண்டுமென எல்லாம் வல்ல கலியுகவர தனாகிய நல்லைக் கந்தப்பெருமானை வணங்கி வாழ்த்தி எல்லோரும் வாழவேண்டுமென உளமாரப் பிரார்த்தித்து நல்லைக் குருமணியின் பாதபங்கஜம் பணிந்து அருளாசி கள் நல்கி மகிழ்வுறுகின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

## சிரித்திடுவாய் நந்தனமே!

நித்திய வாழ்விற்கு
மலர்ந்திட்ட நந்தனமே
வையகத்தில் இன்பம்
நிலைத்திடவும்
பொங்கும் மங்களம்
பொலிந்திடவும்
பிறந்திட்ட நந்தனமே சிரி!

நறுமண மலர்சூடி
மங்கையர் மகிழ்ந்திடவும்
பொங்கலோடு புத்தாடை
பொலிவு பெற்றிடவும்
சொந்த பந்தம்
இணைந்திட்ட மங்கள நாளிலே
இனிய உறவுகளால்
பூத்து பொங்கும்
புன்னகையுடன்
சிரித்திடுவாய் நந்தனமே!

எஸ்.ஜிந்துஜா,கோண்டாவில்

## புதியதோர் தீர்வுடன் நந்தனவே வா

நந்தன ஆண்டே வருக! வருக!
நமக் கொரு நிரந்தர தீர்வை தருக
கரவருஷமவள் காதலிக்க நினைத்தால் மட்டுமே
கலியாணம் செய்ய விரும்பவில்லை
வரம் தர நினைத்தவள் ஆனால் தரவில்லை
வாஞ்சையோடு காத்திருந்தோம் கரமவளை
தரம் பார்த்து தடுமாறினாளோ தெரியவில்லை
தமிழர்களை நேசிக்க தவறி விட்டாள்
உடன்பிறப்பே நீ வந்திடம்மா

உகந்ததோர் நிச்சயதார்த்தம் நிறைவேற்ற
நந்தன வாய் வா உரிமைக்காரி நீதான் என
வந்தனை செய்துன்னை வழிபடுவோம்
சிந்திடும் உன் பொலிவுகண்டு மகிழ்ந்தோம்
சினக்காமல் சிணுங்காமல் வழிகாட்டம்மா
புத்தம் புதுமலராய் மலரும் பொன்மகளே
புதியதோர் தீர்வு கொண்டு வருக வருக

மதுரகவி காரை எம்.பி
அருளானந்தன்

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



இன்று மலருகின்ற சித்திரைப் புத்தாண்டு அனைவருக்கும் ஒளிமய மான, சுபீட்சமான ஆண்டாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த் தித்து எனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியைத் தெரிவிப்பதில் மிகிழ்ச்சிய டைகின்றேன்.இவ்வாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

அச்சமற்ற அமைதியான சூழல் பூத்திருக்கும் இவ் வேளை யில் மக்கள் புத்துணர்ச்சியுடனும் புதுப்பொலி வுடனும் இப் பண்டிகையைக் கொண்டாடுவதனையிட்டு மிக்க மகிழ்ச் சியடையும் அதேவேளை கலியுகம் முடி வடைந்து சுவர்ண யுகத்தின் தொடக்கமாகப் பிறக்கும் நந்தன வருடத்தில் நாமெல்லோரும் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ வேண்டும் என திடசங்கற்பம் பூண வேண்டும் எனவும் நாமெல்லோரும் ஒரு தாயின் மக்களாய் அன்புடனும் அகமகிழ்வுடனும் வாழ்ந்து இம் மாவட்டத்தின் அபிவிருத்தி கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு, சமூக, சமய, பண் பாட்டு பாரம்பரிய விழுமியங்கள் மேலோங்கிச் செல்ல அனைவரும் ஒத் துழைத்துச் செயற்பட வேண்டும் எனவும் கேட்டு மக்க ளின் வாழ்வில் அனைத்து இன்னல் களும் துன்பங் களும் களையப்பட்டு அவர்களின் வாழ் வாதார நிலை மேன்மையடைந்து, பொருளாதார நிலை உயர்வ டைந்து, வாழ்க்கை நிலை் மேலோங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி எனது சித்திரைப் புத்தாண்டு நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## நல்லசெய்தியுடன் நந்தனமே வருக!

சிலையொரு வளைவகற்றி
சிங்காரமாய்ப் புதிதமைத்து
மாடிகள் பல ஒங்க
நாடியே பலசிங்குவர
வைத்த கர வருடமே நீ
பரபரப் பின்றிப் போ
ஆளுகின்ற எங்கள்
அருமைச் சகோதரர்போல்
நாங்களும் ஒன்றாய்
நலிவுகள் ஏதுமின்றி
நன்றாக வாழ்வதற்கு
நாடுகள் எல்லாம்
ஒன்றாகச் சேர்ந்துழைத்து
நல்லதோர் தீர்வுத்தரும்
நறுஞ்செதி கொண்டிங்கு
நந்தனமே நீ வருக

கவிமணி
அன்னைதாஸன்




# சிறுவர் அரங்கம்

## அம்புலி மாமா கதைகள்

## கெட்டிக்கார மருமகள்



ராமநாதபுரத்தில் வந்த ஒருபணக்கார வியாபாரிக்கு பாக்கி யநாதன் என்று ஒரு மகன் இருந்தான். சிறு வயது முதலே அவனுக்கு சாமர்த்தியம் என்பது சிறிதுமில்லை.

இவனை நினைத்தால் எனக்குக் கவலையாக இருக்கிறது. இவன் எதிர்காலத்தில் எப்படி காலந் தள்ளுவான்? என்று வியாபாரி தன் மனைவியிடம் குறைப்பட்டுக் கொண்டார்.

அவருடைய மனைவி நீங்கள் ஆரம்பத்திலிருந்து உங்களுடைய வியாபாரத்தில் அவனை ஈடுபடுத்தி இருந்தால் இப்படி ஆகியிருக்குமா? எல்லாம் உங்கள் தவறு என்று அவரையே குறை கூறினாள். உடனே அவரும் பாக்கியநாதனை அழைத்து மகனே நாளை முதல் நீ என்னுடன் கடைக்கு வந்து வியாபாரத்தை கவனி என்று உத்தரவிட்டார்.

மறுநாள் பாக்கியா தன் தந்தையுடன் கடைக்குச் சென்றான். ஆனால் அங்கு வியாபாரத்தை கவனிக்காமல் மற்ற பணியாளர்களுடன் வீணாக அரட்டை அடிப்பதில் ஈடுபட்டான். ஒரு நாள் கடையை விட்டு வெளியே ஊர் சுற்றப் போனவன் மீண்டும் கடைக்கே வரவில்லை.

மீண்டும் கவலையில் ஆழ்ந்த வியாபாரியைப் பார்த்து பாக்கியாவின் தாய் பேசாமல் அவனுக்கு ஒரு கால்கட்டு போடுங்கள். பொறுப்பு தானாக வந்து விடும் என்றாள்.

அதுவும் நல்ல யோசனைதான் என்ற வியாபாரி ஆனால் அவனுடைய திருமணத்தைப் பற்றி யோசிக்க முன் அவனுடைய புத்திசாலித்தனத்தை இன்னொரு முறை சோதிக்க விரும்பு கிறேன் என்றார். பின்பு தன்னிட மிருந்து மூன்று ரூபாய் நாணயங்களை எடுத்து அவளிடம் கொடுத்து இந்தா இந்த நாணயங்களை பாக்கியாவுக் குக் கொடு.

ஒரு ரூபாய்க்கு அவன் விரும்பியதை வாங்கி சாப்பிடட்டும். ஒரு ரூபாயை ஆற்று நீரில் எறியச் சொல். மீதி ஒரு ரூபாயை வைத்துக் கொண்டு அதில் தான் கொஞ்சம் சாப்பிட்டு விட்டு கொஞ்சம் ஏதாவது குடித்து விட்டு மிஞ்சியதை தோட்டத்தில் நட்டு வைக்கவும் பசு மாட்டுக்குக் கொடுக்கவும் சொல். அதிலிருந்து அவன் எவ்வளவு புத்திசாலி என்று தெரிந்து கொள் வோம் என்றார்.

மறுநாள் தன் தாய் கொடுத்த மூன்று ரூபாய்களை வாங்கிக் கொண்டு பாக்கியா வீட்டை விட்டுக் கிளம்பினான். கடைக்குச் சென்று ஒரு ரூபாய்க்கு பகோடா வாங்கி சாப்பிட்டான். அடுத்து ஆற்றங்கரைக்குப் போனான். தன் தந்தை சொல்லியபடி ஒரு ரூபாய் நாணயத்தை ஆற்று நீரில் எறிய வேண்டும்.

ஆனால் அவ்வாறு செய்ய அவனுக்கு மனம் வரவில்லை என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கையில் கோயில் அர்ச்சகரின் பெண்ணான பகீரதி அருகில் வந்து அப்படி என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய்? என்று கேட்டாள். அதற்கு அவன் ஒன்றுமில்லை பகீரதி! இந்த ஒரு ரூபாய் நாணயத்தை ஆற்றில் எறியும்படியாக என் தந்தை சொல்லி இருக்கிறார். அப்படி அவர் ஏன் சொன்னார் என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன் என்றான். அட அசடே! என்று சிரித்த பகீரதி ஒரு ரூபாயை நீ பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே அதன் பொருள் என்றாள்.

சரிதான்! அப்படியோர் உள்ளர்த்தமா? மீதி ஒரு ரூபாய்க்குள் நான் நான்கு அல்லது ஐந்து பொருட்களை வாங்க வேண்டும். அது எப்படி முடியும்? அதற்கும் நீயே ஏதாவது யோசனை சொல்லேன் என்றான். பின்பு அவன் தாய் மூலமாக தந்தையிட்ட கட்டளையை விளக்கிக் கூறினான்.

அது ஒன்றும் சிரமமில்லையே! நீ பேசாமல் ஒரு முலாம்பழத்தை ஒரு ரூபாய் கொடுத்து வாங்கு. அதில் உனக்கு சாப்பிடவும் குடிக்க சாறும் கிடைக்கும். அதன் விதைகளை தோட்டத்தில் நட்டுவை. தோலை பசு மாட்டுக்குக் கொடுத்து விடு என்றாள்.

ஆகா! என்ன அற்புதமான யோசனை! என்று மகிழ்ந்த பாக்கியா அவள் சொன்னபடியே செய்துவிட்டு தன் தாயிடம் சென்றான். மிக சாமர்த்தியமாக ஒரு ரூபாயை திருப்பிக் கொடுத்துவிட்டு தான் வாங்கி வந்த முலாம் பழத்தையும் காட்டியவுடன் அவனுடைய புத்திசாலித்தனத்தைக் கண்டு வியந்த அவன் தாய் பாக்கியாவின் தந்தையிடம் நடந்ததைக் கூறினாள்.

ஆனால் பாக்கியாவின் தந்தை இது நமது பிள்ளை சுயமாக செய்ததில்லை என்று அறிந்து அவனைக் கூப்பிட்டு பாக்கியா! உனக்கு இந்த யோசனை யார் சொல்லிக் கொடுத்தது? என்று கேட்டார்.

பாக்கியாவும் உண்மையை மறைக்காமல் அர்ச்சகர் மகள் பகீரதி என்றான். ஆகா! அந்த பகீரதி மிக புத்திசாலிப் பெண் என்று தோன்றுகிறது என்று கூறிய அவர் தன் மனைவியிடம் நமக்குத் தகுந்த மருமகள் பகீரதிதான் என்றார்.


இருவரும் அர்ச்சகரைக் கலந்து ஆலோசித்து அவரின் மகளுடன் பாக்கியாவின் திருமணம் செய்வதற்கு முடிவு செய்தனர். திருமணம் முடிந்து சில நாட்கள் ஆயின ஒருநாள் பகீரதி தன் தாய் வீட்டுக்குச் செல்ல விரும்பியதால் பாக்கியா அவளை பிறந்த வீட்டுக்கு அழைத்துச் சென்று விட்டு விட்டு வீடு திரும்பினான்.

மறுநாள் அவன் தந்தை அவனையும் வேலைக்காரனையும் பக்கத்திலுள்ள நகரத்திற்கு விற்பனைப் பொருட்கள் வாங்கி வர அனுப்பினார். பொருட்கள் வாங்கத் தேவையான பணம் எடுத்துக் கொண்டு நகரத்தை அடையும் போது இரவு ஆகிவிட்டதால். பாக்கியாவும் வேலைக்காரனும் ஒரு விடுதியில் தங்கினர். அந்த விடுதியின் சொந்தக்காரியான ஓர் இளவயதுப் பெண்மணி பாக்கியாவிடம் நிறையப் பணம் இருப்பதை அறிந்து கொண்டு அவனை ஏமாற்றிப் பணம் பறிக்க திட்டமிட்டாள்.

இரவு உணவருந்திய பின்பு அவள் பொழுது போக்க பாக்கியாவை சீட்டாட அழைத்தாள். அவள் சொல்லை மறுக்க முடியாத பாக்கியா சீட்டாட அமர்ந்தான் ஒரே ஒரு காடா விளக்கு மட்டுமே எரிந்து கொண்டிருந்த அறையில் இருவரும் சீட்டாட அமர்ந்தனர். உங்களை போன்ற பணக்கார வியாபாரிகள் சும்மா சீட்டாடினால் எப்படி? பணம் வைத்து ஆடினால் தான் உங்களுக்கு கௌரவம் என்று பணம் வைத்து சீட்டாட வற்புறுத்தினாள் பாக்கியாவும் அதற்கு சம்மதித்தான் தான் வெற்றி பெறுவேன் என்று பாக்கியா நினைக்கும் சமயம் பார்த்து அவளுடைய பூனை திடீரென குறுக்கே பாய்ந்து விளக்கின் மீது விழ எங்கும் இருள் சூழ்ந்தது. மீண்டும் விளக்கை ஏற்றியவுடன் சீட்டுகள் முழுதும் நிலைமாறி இருந்தன. அந்த இளம் பெண் வெற்றிபெற்று பாக்கியவிடம் இருந்து கணிசமான பணத்தை பெற்றாள் இது போல் பல முறை நடக்க தான் கொண்டுவந்த வந்த பணம் அனைத்தையும் இழந்த பாக்கியா மேலும் அவளுக்கு பணம் கொடுக்க வேண்டி வந்தது இவ்வாறு அவனை நாடகம் ஆடி ஏமாற்றி விட்டாள் மறுநாள் பொழுது விடிந்ததும் அவள் பாக்கியா விடம் நீ பணம் தர வேண்டி இருப்ப தால் உன்னை வெளியே செல்ல விடமாட் டேன் உன் வேலைக்காரனை ஊருக்கு அனுப்பி பணம் எடுத்து வரச்சொல் அது வரை நீ இங்கேயே இரு என்று கூறி விட்டாள்.

பாக்கியா திரும்பி வராததால் அவன் பெற்றோர்கள் கவலை அடைந்தனர் இதற்குள் பாக்கியா தன்னை அழைக்க வராமல் போகவே பகீரதி தானாகவே கணவன் வீட்டிற்கு வந்தாள் உண்மையை அறிந்து அவளும் பதற்றம் அடைந்தாள் இதற்குள் பாக்கியாவின் வேலை காரன் அங்கு வந்து அனைத்தையும் கூறினான் அதை கேட்டு அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர் பகீரதி மட்டும் சமாளித்து கொண்டு தான் சென்று பாக்கியாவை மீட்டு வர கிளம்பினாள் பாக்கியா எவ்வாறு சூதாட்டத்தில் ஏமாற்றப்பட்டான் என்பதை அந்த வேலைக்காரன் மூலம் தெரிந்து கொண்டாள். பகீரதி தன்னுடன் ஒரு சுண்டெலியையும் இரகசியமாக எடுத்துச் சென்றாள். வேலையாளை விடுதிக்கு வெளியிலே நிறுத்தி விட்டு தானும் ஒரு ஆண் போல் வேடம் தரித்து பகீரதி பாக்கியா தங்கியிருந்த விடுதிக்குள் நுளைந்தாள். பாக்கியாவிற்கு தன் மனைவியை சிறிதும் அடையாளம் தெரியவில்லை.

விடுதி சொந்தக்காரியை சந்தித்து தனக்கு தங்க இடம் வேண்டும் என்று கூறி அங்கே தங்க ஏற்பாடு செய்த பின்பு அவளிடம் தனக்கு சூதாட்டத்தில் விருப்பம் உண்டு என்பதைத் தெரிவித்தாள். அவளும் அன்றிரவு மகிழ்ச்சியுடன் சூதாட அமர்ந்து கொண்டாள். பகீரதி வெற்றிபெறும் தருணத்தில் வழக்கப்படி விடுதி சொந்தக்காரி தன் பூனைக்கு சைகை செய்ய அது விளக்கை அணைக்க ஓடி வந்தது. அதை எதிர்பார்த்திருந்த பகீரதி தான் மறைத்து வைத்த சுண்டெலியை வெளியே விட்டாள். சுண்டெலியைத் துரத்திக் கொண்டே பூனை வெளியே ஓடி விட்டது.



மீண்டும் அது திரும்பவில்லை. தொடர்ந்து சூதாட்டத்தில் பகீரதி வெற்றிபெற பாக்கியா இழந்த அத்தனை பணத்தையும் அதற்கு மேல் பல மடங்குகளும் அவளுக்குக் கிடைத்தது. அடுத்த நாள் காலை பகீரதி அந்தப் பணத்தை வெளியே இருந்த வேலைக்காரனிடம் கொடுத்து அதை சொந்தக்காரிக்கு அளித்துத் தன் கணவனை மீட்டு வரச் சொன்னாள். அதன்படியே பணம் கிடைத்ததும் அந்தப் பெண்மணி பாக்கியாவை விட்டுவிட்டாள். வெளியே நின்றிருந்த வண்டியில் தன் மனைவியைப் பார்த்ததும் ஆச்சரியத்தில் மூழ்கினான். பின்பு மூவரும் நகரத்துக் கடைகளில் தேவையான விற்பனைப் பொருட்களை வாங்கிக் கொண்டு தங்கள் கிராமத்திற்குத் திரும்பினர். நடந்த விடயங்களை பகீரதி விளக்கியதும் பாக்கியாவின் தந்தை தனது கருத்தை வெளியிட்டார். பாக்கியா மாறமாட்டான். அவன் ஏமாளியாகவே இருப்பான். ஆனால் அவனை கவனித்துக் கொள்ள மகா சாமர்த்தியசாலியான நம் மருமகள் அவன் கூடவே இருக்கும் வரையில் நாம் அவனைப் பற்றி ஒருபொழுதும் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை.

# தெரிவுக்குழுவுக்கு வந்து நிரூபித்தால்

# அதிகாரப் பகிர்வுக்குத் தடை இல்லை

## கூட்டமைப்புக்கு சவால் விடுக்கிறது ஹெல உறுமய

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகள் நியாயமானவை அல்ல என்பதனை ஜாதிக ஹெல உறுமய உரிய ஆதாரங்களுடன் நிரூபித்துவிடும் என்ற அச்சத்தின் காரணமாகவே நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வருவதற்கு கூட்டமைப்பு தயங்குகின்றது என ஜாதிக ஹெல உறுமய பரபரப்பான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

தமது தரப்பு கோரிக்கைகள் நியாயமானவை என்பதை பொதுக்களமான நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் உரிய நியாயங்களுடன் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நிரூபித்தால் எவ்வகையான அதிகாரப் பகிர்வுக்கும் தாம் தடையாக இருக்கமாட்டோம் என்றும் அந்தக்கட்சி தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு சவால் விடுத்துள்ளது.

நாடாளுமன்ற தெரிவுக்குழு விவகாரம் தொடர்பில் நேற்றுமுன்தினம் தமிழ் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே ஜாதிக ஹெல உறுமயவின் அரசியல் குழு உறுப்பினரும் மேல் மாகாணசபை அமைச்சருமான உதயகம்மன்பில மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு,

தமிழ் மக்களுக்கு நாட்டில் பிரச்சினை இருக்கின்றது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத்தான் கூறுகின்றது. எனவே தெரிவுக்குழுவில் அங்கம் வகித்து பிரச்சினைகளைச் சுட்டிக்காட்ட வேண்டியது கூட்டமைப்பின் கடப்பாடாகும்.

தனிப்பட்ட ரீதியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேசித் தீர்வை வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது. இறுதியான தொரு தீர்வு தெரிவுக்குழுவினூடாகவே வெளிவர வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

நாம் அதிகாரப்பகிர்வுக்கு எதிர்ப்பை வெளியிடுவது உண்மைதான். இதற்கான காரணங்களை உரிய வகையில் விளக்கி தமிழத் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகள் நியாயமானவை அல்ல என்பதை ஹெல உறுமய நிரூபித்துவிடும் என்ற அச்சத்தின் காரணமாகவே தெரிவுக்குழுவுக்கு வராமல் கூட்டமைப்பு பதுங்குகின்றது.

முடியுமானால் கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்கு வந்து தமது தரப்புக் கோரிக்கைகள் நியாயமானவை என்பதை நிரூபிக்கட்டும் பார்ப்போம்.அவ்வாறு கூட்டமைப்பு நிரூபிக்குமானால் அதனை எவராலும் எதிர்க்கமுடியாது என்று பதிலளித்தார்.

அதேவேளை அரசுடன் இடம்பெற்று வரும் பேச்சுக்ளினூடாக எட்டப்படும் இணக்கப்பாட்டை பரிசீலிப்பதாகவே தெரிவுக்குழு அமைய வேண்டும். முதலில் பேச்சில் இணக்கம் ஏற்பட வேண்டும். அதன் பின்னரே தெரிவுக்குழு என்ற நிலைப்பாட்டில் கூட்டமைப்பு உறுதியாக உள்ளதே என்று தமிழ் ஊடகவியலாளர்கள் கேட்ட போது,

தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன எனக்கூறும் கூட்டமைப்பு அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

பிரச்சினைகளுக்குத் தீர்வை காண முடியாவிட்டால் அதற்கான பொறுப்பை கூட்டமைப்பே ஏற்க வேண்டும்.

தனிப்பட்ட ரீதியில் ஒரு தரப்புடன் பேசி தீர்வை காண முடியாது. அது சிறந்த உபாயமுமல்ல. எனவே பொதுக்களமான நாடாளுமன்ற தெரிவுக்குழுவிலேயே இந்த விடயங்கள் ஆராயப்பட வேண்டும் என அவர் இக்கேள்விக்கு பதிலளித்துள்ளார். (அ-2)

## குணரட்னத்தை யார் கடத்தினார்களோ யாருக்குத்தெரியும்! -லக்ஸ்மன் யாப்பா

(கொழும்பு)

முன்னணி சோசலிச கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் பிரேம்குமார் குணரட்னத்தை ஜே.வி.பி கூட கடத்தியிருக்கலாம் யாருக்குத் தெரியும் என பதில் ஊடகப் பேச்சாளர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.


ஜே.வி.பி.க்குள் ஏற்பட்ட பிளவு சில வேளைகளில் இந்த கடத்தல்களுக்கு வழிகோலியிருக்கக்கூடும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

யார் இந்த கடத்தலை மேற்கொண்டார்கள் என்பது எமக்குத் தெரியாது என்றாலும் இதனை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்பதனை தெளிவுபடுத்த வேண்டும்மென அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இடம்பெற்றுவரும் சகல சம்பவங்களையும் பொலிஸார் கண்காணிக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடத்தல்காரர்கள் குறித்த இருவரும் எவ்வாறு சனநெரிசல் மிக்க இடங்களில் விடுதலை செய்தார்கள் என்பது தமக்குத் தெரியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இரண்டு தரப்பினர் ஆயுதங்களை ஏந்தி போராட்டம் நடத்தியிருந்ததாகவும் அந்தக் குழுவில் சிலர் இன்னமும் எஞ்சியிருக்கக்கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)



இலங்கை வங்கி காரைநகர் கிளையினால் வழங்கப்பட்ட கடனுதவி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட உழவு இயந்திரம் முகாமையாளர் ஆர். சிவகுமாரால் வாடிக்கையாளரான வி. ஆனைமுகனுக்கு வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

## மினி சூறாவளியினால் 73 குடும்பங்கள் பாதிப்பு

(மல்லாவி)

துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுகளில் காற்றுடன் கூடிய மழையினால் மாந்தை கிழக்கில் 24 குடும்பங்களும் துணுக்காயில் 49 குடும்பங்களுமாக மொத்தம் 73 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ பொருளாதார அமைச்சின் முல்லை. மாவட்ட இணைப்பாளர் எஸ். குலாஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள நிலையில் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் கடந்த 9 ஆம் திகதி அனிஞ்சியன் குளம் கிராமத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 32 நுளம்பு வலைகளும் 32 அவசர சுகாதார உதவிப் பெட்டிகளும் 45 தறப்பாள் என்பனவும் உடனடி உதவியாக வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் இவர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்குவதற்காக முல்லை. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனிடம் அனுமதி கோரியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-3-15)

## ஐரோப்பாவுக்கான தனது சேவைகளை குறைத்துள்ள எயார்லைன்ஸ் சேவை

(கொழும்பு)

நட்டத்தில் இயங்கி கொண்டிருப்பதால் ஐரோப்பாவுக்கான தனது சேவைகளையும் விமானத்தில் வழங்கப்படும் பயணிகளுக்கான வசதிகளையும் குறைப்பதாக இலங்கையின் தேசிய விமான சேவையான சிறிலங்கன் எயார்லைன்ஸ் அறிவித்துள்ளது.

செலவுகளை குறைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக பயணிகளுக்கான உணவு வசதிகளை குறைக்கவுள்ளதாக சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்,

ஆசனப் பதிவுகள் குறைந்து போனதால் லண்டன் உட்பட ஐரோப்பாவுக்கான பல பயணத்திட்டங்களை நாம் நிறுத்தியுள்ளோம். முன்னர் வாரத்தில் 12 சேவைகளை நடத்தி வந்தோம். தற்போது அது 7 சேவைகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் விமானத்தில் பயணிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் அளவும் குறைக்கப்பட்டுள்ளன என்று கூறியுள்ளார்.

கடந்தாண்டில் ஐரோப்பாவில் இருந்து இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையிலும் சிறியளவு சரிவு காணப்பட்டது.

இந்நிலையில் சிறிலங்கன் எயார் லைன்ஸ் விமான சேவையின் ஆசனப் பதிவுக்கான கேள்வி திடீரென குறைந்து அதன் சேவைகளும் வசதிகளும் மட்டுப்படுத்தப்படும் நிலை உருவாகியுள்ளது. (அ-2)

### நந்தன வருட விசேட பூசை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நந்தன வருடப்பிறப்பு விஷேட பூசை வழிபாடுகள் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.45 மணிக்கு நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

இன்று வெள்ளிக்கிழமை காலையில் மருத்து நீரினை அடியார்கள் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர். (அ-9)

## முதியோர்களும் சிறுவர்களும் வாண வேடிக்கைகளை தவிர்க்க வேண்டும்

### பொலிஸார் அறிவிப்பு

(கொழும்பு)

சித்திரைப் புத்தாண்டின் போது மிகுந்த அவதானத்துடன் வாணவேடிக்கைகளில் ஈடுபடுவது அவசியமென பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக சிறுவர்களும் முதியவர்களும் பட்டாசு கொளுத்துவதனை கூடியளவு தவிர்த்துக் கொள்வது சிறந்தது. அதேவேளை பட்டாசுகளை கையில் வைத்து கொளுத்த வேண்டாம் எனவும் பொலிஸார் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

பெரியவர்கள், குழந்தைகளை கையில் வைத்துக் கொண்டும் நோயாளிகள் மற்றும் வயோதிபர்கள் அருகிலிருக்கும் இடங்களிலும் வாண வேடிக்கைகளில் ஈடுபடுவது அதிக பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடுமெனவும் கூறியுள்ளனர்.

பட்டாசு விபத்துக்கள் தொடர்பில் கடந்த வருடம் ஏற்படுத்தப்பட்ட விழிப்புணர்வின் அடிப்படையில் விபத்துக்களின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 'நந்தன' புத்தாண்டு சிறப்புமலர் – 13.04.2012




அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துகள் உரித்தாகட்டும்

கிருஷ்ணா நகை மாளிகை

குறித்த நேரத்தில் குறித்த தவணையில் தரம் குன்றாத 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

இல- 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

கிளை : கிருஷ்ணா அடகுக்கடை

இல- 370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 5046



மலரும் புத்தாண்டு மகிழ்ச்சியாக அமைய வாழ்த்துக்கள்

V.S.P லக் ஒயில்

தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்

பரிமளா ஸ்ரோர்ஸ்

இல:26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 0212224135, 0212229165



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

வேல் முருகன் வாணிப நிலையம் VELMURUGAN TRADERS

தற்கால நவநாகரிக கட்டடங்களுக்கு ஏற்ப சகல விதமான வர்ண பெயின்ட் வகைகளும், சுண்ணாம்பு மற்றும் கட்டடப் பொருள் விற்பனையாளர்.

இல.56A, 295A மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 9437

புதுவருட நல்வாழ்த்துக்கள்

HOLCIM CEMENT



Jaffna District Batas

யாழ். ஏக விநியோகஸ்தர்கள்

SRI RANGAN ENTERPRISES

370, Hospital Road, Jaffna.

Authorized Dealer Prima Ceylon (PVT) Ltd.

யாழ். மண்ணில் பிறிமா உற்பத்திகளின் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்

ஸ்ரீ றங்கன் என்ரப்பிறைஸ்

370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P - 021 222 2027

அனைவருக்கும் தித்திக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

ராம்கோ சீமெந்து



RAMCO CEMENT

ராம்கோ சீமெந்தை பயன்படுத்துங்கள்!
உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்!

ஆசியாவின் முதலாம் தர(நம்பர்-1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட RAMCO சீமெந்து (கோபுரமார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

- ★ இலங்கையின் SLS 107 தரச்சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து
- ★ 50 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் சீமெந்து
- ★ மிகமிக உயர்தரம் கொண்ட சீமெந்து
- ★ ISO 9001 உலகத்தர சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து

ராம்கோ சீமெந்தின் ஏக இறக்குமதியாளர்கள்

ஐஸ்வர பகவான் அன் கம்பனி

தொ. பே: 021 222 7603, 021 222 2350

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# நந்தன புத்தாண்டு சிறப்புமலர் - 13.04.2012

எம் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்



ஆர். வி.ஜி மருந்தகம்

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2129

R.V.G ஸ்தாபனம்

58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ. பே. இல : 021 222 6806

## சீர்மிகு தீர்வு காண வருக புத்தாண்டே!

நந்தன ஆண்டாய் நாமம்
கொண்டின்று மலரும் மாதே!
வந்தனை செய்கின்றோம் நாம்
வாழ்வது வளமாய் விளங்கச்
சிந்தனை சிறக்க வைப்பாய்!
சீர்மிகு தீர்வு கண்டு
அந்தமில் அன்பின் வழியில்
அனைவருக்கும் நலமே பெறவே!

**நாயன்மார் கட்டு**
**ப.மகேந்திரதாசன்**

## சித்திரையாள் சிரிப்பாளா...?

காலமெனும் சித்திரையே நீ சிரித்தால்
கண்மணியே தமிழருக்கு சிறப்புண்டாகும்
ஞாலத்தில் எம் பெருமை சிறக்க
நன்மைகள் பல செய்வாய்
தாயவளே உன்னை நம்புகின்றோம்
துன்பங்கள் அகன்று விடும் உன் வரவாய்
தாயவளாய் வந்தவளே அன்பு கூர்ந்து
தயவான சித்திரையே சிரிப்பாயா...

**ம.புவிலக்ஷி**
**பெரிய நிலாவணை,**
**மட்டக்களப்பு.**



## புதுமைகள் காவி வருக

புத்தொளிர்வாய் புத்தாண்டே
புதுமைகள் பல தர வருவாய் புத்தாண்டே
இனிமைகள் பல தரவருவாய் புத்தாண்டே
இன்பம் பல தொலைத்தோம் புத்தாண்டே
துன்பம் பல சுமந்தோம் புத்தாண்டே
தூக்கம் பல இழந்தோம் புத்தாண்டே
தாக்கம் பல பெற்றோம் புத்தாண்டே
வாலறுந்த பட்டமாய் நூலறுந்து
நிம்மதியிழந்து நிர்க்கதியாய் வாழ்கின்றோம்
மலரும் சித்திரையாளே...
மகிமை பல பெற்று...
சமாதான புத்தாண்டாய் சந்திப்போம் யாவரும்
புத்தாண்டே வருக புதுமைகள் பல காவிவருக....

**பா. மதனபாரதி**
**அல்வாய்**

அன்பர்கள்,நண்பர்கள் ,வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



Nallur Saravana Tex
நல்லூர் சரவணா ரெக்ஸ்

இல. 526,529,பருத்தித்துறை வீதி
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 1723

இல. 770, 772, தட்டாதெருச் சந்தி,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே :- 021 222 0421



இல. 171,பிரதான வீதி
சம்பத்வங்கிக்கு அருகாமை,
நெல்லியடி.
தொ.பே:- 021 226 2992

வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் தித்திக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

TVS

YASO TVS

யசோ மோட்டோர்ஸ் & ஹாட்வெயர்ஸ்



TVS

தலைமை நிறுவனம்:
இல.163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 7200650, 021 222 7566

கிளை நிறுவனம்:
A-9,றோட், சாவகச்சேரி, (வைத்தியசாலை முன்பாக)
T.P:- 021 7200950

# 'நந்தன' புத்தாண்டு சிறப்புமலர்- 13.04.2012

## SRI MURUGAN

SILVER SHIELD

TELE COMMUNICATION & AGENCY
POST OFFICE

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

வெளிநாட்டில் இருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் கைகளில் பணத்தைப் பெற்றுக்கொள்ள பாதுகாப்பான இடம் ஸ்ரீமுருகன்

பாடசாலை மாணவர்களுக்கும் ,அலுவலக ஊழியர்களுக்கும், சிறியோர் முதல் பெரியோர் வரை சகல தரத்திலும் சகல அளவுகளிலும் பெற்றுக் கொள்ள.

கடந்த 30 ஆண்டுகளாக யாழ். நகர் மக்களின் தரச்சிறப்புமிக்க காலுறைகள்(SOCKS)

SILVER SHIELD SOCKS

e-mail:srimurugan09@gmail.com
web:srimurugan@eureka.lk



WESTERN UNION
MONEY TRANSFER

#303 K.K.S Road,
Jaffna,
Tel:-0212225392
0212222670
Fax:-021-2223214


அன்பர்கள், நண்பர்கள், வடிக்கையாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்


## உதயா ஜுவல்லர்ஸ்

## Uthayaa Jewellerss









இல 81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


No.81, Kasthuriar Road,
Jaffna
T.P:-021 222 4434

அனைவருக்கும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்


NEW NELSON LEANERS
NNL
D.S 590

## நியூ நெல்சன் லேணர்ஸ்

அரச அங்கீகாரம் பெற்ற முதன்மைச் சாரதிப் பயிற்சிப் பாடசாலை




- சாரதிப் பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்
- சகல வாகனங்களுக்கும் சிறந்த முறையில் பயிற்றுவித்து விரைவாகச் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புக்கள்.
- அதி கூடிய பயிற்சி நேரங்கள்.
- அதி கூடிய பயிற்சிக் காலங்கள்.
- சாரதிப் பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- தவணை முறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.



நவீன வாகனங்களில் வாகன பயிற்சிகள்





இல.89, கண்டி வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 4527
0773581916

கிளைகள்:- இல.127, பருத்தித்துறை வீதி,
நெல்லியடி கரவெட்டி,
தொ.பே:- 021 492 3115

இராமலிங்கம் வீதி,
சாவகச்சேரி.
தொ.பே:- 021 492 3114

பஸ் நிலையம்
சுன்னாகம்
தொ.பே:-0214923732

# 'நந்தன' புத்தாண்டு சிறப்புமலர்– 13.04.2012

புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்

## அசோகா நகை அகம்

இல:111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6290

நம்பிக்கை நாணயம்–உத்தரவாதம்
22 கரட் தங்க நகைகளுக்கு

## ASOKA JEWELERS



எம் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் துல்லியமான பார்வையைப் பெற்றிட, பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்னரைவிட உறுதியான, அழகான வெண்சங்குப் பற்களைக் கட்டிட– இளைய தலைமுறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட

கட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.

## எரிக்கணேஷ்

முக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்



இல 564,566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 2486

**கிளைகள்:**
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல 80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

## தட்ஷா



### அழகுக் கலையகமும் பயிற்சி நிலையமும்

மணப்பெண் அலங்காரம்
மணப்பெண்களுக்கான முக ஒப்பனைகள்
அனைத்துவகையான முக ஒப்பனைகள்
சிறுவர், மகளிருக்கான ஹெயர் கட்ஸ் & ஒயில் மசாஜ்
மெனிகியூர், பெடிகியூர் & நக அலங்காரம் (Nail Arts)
பேர்மிங் (Perming), ஸ்ரெயிற்னிங் (Straightening)
ரீ–பொண்டிங் (Re-Bonding) & கலரிங் (Colouring)

**Special Bridal Packages & Wedding packages are Available**

இல. 84, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 9713, 077 33 83643 E-Mail: thadsha83@yahoo.com


அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

## J.T

சகல விதமான பொருட்களும் நியாயமான கட்டணத்தில் கொண்டு வந்து தரப்படும்

யாழ் ➔ கொழும்பு
கொழும்பு ➔ யாழ்

## ரான்ஸ்போட்




**J.T ரான்ஸ்போட்**
இல.302 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

40 வருடகால மதிப்போடு விளங்கும்


## யாழ். வணிக நிலையம்
## Jaffna Traders

இல.336, 338, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

குழந்தைகளின் பால்மா, பிஸ்கற் வகைகள், பெண்களுக்கான கிறீம் வகைகள், குளிரூட்டப்பட்ட அங்கர்பட்டர், மாஜரின் வகைகள், குரக்கன், எள்ளு, தேயிலை மற்றும் சகல வகைப் பொருட்களையும் ஒரே இடத்தில் நியாய விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

## ஜீவாகாரம்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்




உள்ளூர் உற்பத்தியான ஜீவாகாரம் சிறியோர் முதல் பெரியோர் வரை பாவிக்க உகந்தசத்துணவு. இரசாயனக் கலவை அற்றது

உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் மக்கள் விரும்பிப் பாவிப்பது

**அண்ணா தயாரிப்புக்களே!**

அண்ணா கோப்பி
அண்ணா அரிசி மா
குரக்கன் மா
ஆட்டா மா
அண்ணா மிளகாய்த் தூள் வகைகள்
அண்ணா பத்தி வகைகள்
அண்ணா பற்பொடி
அண்ணா இனிப்பு வகைகள்

## அண்ணா தொழிலகம் இணுவில்

தொலைபேசி இல: 021 224 1565

# கடத்தல் சம்பவங்களை ஏற்றுக்கொள்ள முடியாது

## மதத் தலைவர்கள் கண்டனம்

(கொழும்பு)

கடத்தல் சம்பவங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என கொழும்பு பேராயர் அதி வணக்கத்திற்குரிய கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் இத்தாபானே தம்மலாலங்கார தேரர் ஆகிய மதத் தலைவர்கள் கூட்டாக இணைந்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடத்தல் சம்பவங்கள் நாட்டின் மத விழுமியங்களுக்கு பொருத்தமற்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சட்டத்திற்கு எதிராக எவரேனும் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்டத்திற்கு புறம்பான வகையில் நடவடிக்கை எடுத்தல் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என மதத் தலைவர்களினால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(அ-2)

# தமிழர்களுக்கு தீர்வு வழங்குவதில் மஹிந்த அரசாங்கம் அசமந்தம்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

கடந்த தேர்தல்களின்போது ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எட்டு தடவைகள் தம்மிடம் கோரியதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

தொலைபேசி ஊடாக எட்டுத் தடவைகள் ஜனாதிபதி மஹிந்த. ஆதரவு கோரியிருந்தார். எனினும் ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்கப் போவதில்லை என நான் தீர்மானித்திருந்தேன்.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்கும் நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி மஹிந்த எதிர்ப்பை வெளியிட்டார்.

இதன் காரணமாகவே ஆளும் கட்சிக்கு நான் ஆதரவளிக்கவில்லை என சந்திரிகா குறிப்பிட்டுள்ளார். இந்திய ஊடகங்களுக்கு அளித்த விசேட நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மினிச்சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வாருங்கள்

## பாதிக்கப்பட்ட மக்கள் அழைப்பு

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் மீண்டும் இரண்டாவது தடவையாக கடந்த செவ்வாய்க்கிழமை மாலை வேளை கடும் காற்றுடன் கூடிய மழை பெய்துள்ளது.

இதன் காரணமாக 22 வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டு மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் புகழேந்தி நகர் கிராம சேவையாளர் பிரிவில் 4 வீடுகளும் யோகபுரம் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் 10 வீடுகள், தேறாங்கண்டல் கிராம சேவையாளர் பிரிவில் 8 வீடுகளும் மொத்தமாக 22 குடும்பங்களின் வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளாகின.

இதேவேளை, கடந்த 9 ஆம் திகதி மாலை காற்றுடன் கூடிய மழையினால் அனிஞ்சியன்குளம் கிராம சேவையாளர் பிரிவில் 41 வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டு முற்றாக பாதிப்படைந்துள்ளன.

வன்னிப் போரில் அனைத்தையும் இழந்து அகதிகளாகி நலன்புரி முகாம்களில் இருந்து மீள்குடியேறிய இம்மக்களுக்கு நிரந்திர வீடுகள் அமைத்துக் கொடுக்காத நிலையிலும் உலர் உணவு நிறுத்தப்பட்ட வேளையிலும் தங்கள் சுயமுயற்சியினால் வங்கிகளில் கடன் பெற்று பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு அறுவடை செய்த நெல் மூடைகள் உட்பட அனைத்துப் பொருட்களும் வெள்ளத்தினால் நாசமாகியுள்ளன.

இந்நிலையில் தமக்கு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கிடைக்குமா என எதிர்பார்த்து உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கியிருக்கின்றனர். (அ-3-15)

# ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு மருத்துநீர் தாள் பைகள் விநியோகம்

(சிவநகர்)

மகரகம நாவின்ன என்ற இடத்தில் இயங்கும் ஆயுர்வேத வைத்திய சபை ஆணையாளர் ஊடாக பதிவு செய்யப்பட்ட சகல ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் புது வருட தேவைக்கான மருத்துநீர் தூள் பைக்கற்றுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதம மந்திரி டி.மு.ஜெயரத்ன, சுதேச வைத்திய அமைச்சர் சாலிந்த திசநாயக்க, பிரதி அமைச்சர் பந்து பண்டார நாயக்க ஆகியோரின் ஆசிச் செய்திகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

முன்னைய காலங்களில் இதற்குரிய ஆயுர்வேத பஞ்சாங்கம் சிங்கள மொழியில் அனுப்பப்பட்டு வந்தது.

தமிழ் வைத்தியர்களின் அழுத்தம் காரணமாக இம்முறை பஞ்சாங்கம் தமிழிலே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

(அ-3-254)




★ 1111-ஐந்தாம் ஹென்றி புனித ரோம் பேரரசின் மன்னனாக முடி சூடினான்.

★ 1605-ரஷ்யாவின் சார் மன்னன் பொரிஸ் குடுனோவ் மரணமானான். இரண்டாம் ஃபியோதர் சார் மன்னனானான்.

★ 1829-பிரித்தானிய நாடாளுமன்றம் ரோமன் கத்தோலிக்கர்களுக்கு மத உரிமை அளித்தது.

★ 1849-ஹங்கேரி நாடு குடியரசானது.

★ 1861-அமெரிக்க உள்நாட்டுப் போர்: சம்ட்டர் கோட்டை அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்புப் படைகளிடம் சரணடைந்தது.

★ 1868-பிரித்தானிய மற்றும் இந்தியப் படைகள் மக்டாலாவைக் கைப்பற்றியதில் அபினீசியப் போர் முடிவுக்கு வந்தது.

★ 1873-ஐக்கிய அமெரிக்காவில் லூசியானாவில் கோல்ஃபாக்ஸ் என்ற இடத்தில் இடம்பெற்ற தேர்தல் வன்முறையில் 105 கறுப்பினத்தவரும் 3 வெள்ளையினத்தவரும் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1919-ஜாலியன்வாவலா பாக் படுகொலை: அம்ரித்சரில் ஜாலியன்வாலா பாக் திடலில் கூடியிருந்த மக்களை நோக்கி பிரித்தானியப் படையினர் சுட்டதில் 379 பேர் உயிரிழந்தனர்.

★ 1930-மகாத்மா காந்தியின் உப்புச் சத்தியாக்கிரகத்திற்கு ஆதரவாக தென்னிந்தியாவில் ராஜாஜி தலைமையில் பாத யாத்திரை தொடங்கப்பட்டது.

★ 1939-இந்தியாவில் இந்திய செம்படை என்ற இராணுவ அமைப்பு பிரித்தானியர்களுக்கு எதிரான ஆயுதப் போராட்ட அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

★ 1941-ஜப்பானுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் அணிசேரா உடன்பாடு எட்டப்பட்டது.

★ 1943-இரண்டாம் உலகப் போர்: போலந்தில் கட்டின் என்ற இடத்தில் சோவியத் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்ட போலந்து போர்க் கைதிகளின் புதைகுழிகளைத் தாம் கண்டுபிடித்ததாக ஜேர்மனி அறிவித்தது.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியில் கார்டெலகான் என்ற இடத்தில் ஆயிரம் பேர் மற்றும் அரசியல் கைதிகள் நாசிகளினால் படுகொலை செய்யப்பட்டனர்.

★ 1953-இயன் ஃபிளமிங் தனது முதலாவது ஜேம்ஸ் பொண்ட் புதினத்தை வெளியிட்டார்.

★ 1954-காமராசர் சென்னை மாநிலத்தின் முதல்வரானார்.

★ 1970-அப்பல்லோ 13 விண்கலத்தில் ஒட்சிசன் தாங்கி வெடித்தது.

★ 1974-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது வணிக செய்மதி வெஸ்டார் 1 ஏவப்பட்டது.

★ 1975-லெபனானில் 27 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.

★ 1979-இலங்கையில் சுயாதீன தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.

★ 1984-இந்தியா காஷ்மீரின் சியாச்சென் கிளேசியரை ஆக்கிரமித்தது.

★ 1987-மக்காவு தீவை மக்கள் சீனக் குடியரசிடம் 1999 இல் ஒப்படைக்கும் ஒப்பந்தம் போர்த்துக்கல்லுக்கும் சீனாவுக்கும் இடையில் கைச்சாத்தானது.

★ 1997-டைகர் வூட்ஸ் கோல்ஃப் மாஸ்ரர்ஸ் வென்ற இளம் வீரரானார்.

★ 2006-கூகிள் காலண்டர் வெள்ளோட்டம் விடப்பட்டது.

★ 2007-பிரபல தமிழ் தொலைக்காட்சி நடிகை வைஷ்ணவி தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

### பிறப்புகள்

★ 1743-தோமஸ் ஜெபர்சன், மூன்றாவது அமெரிக்க ஜனாதிபதி (இ.1826)

★ 1906-சாமுவேல் பெக்கெட், நோபல் பரிசு பெற்ற ஐரிஷ் எழுந்தாளர் (இ.1989)

★ 1934-டேம் ஜேன் குட்டால், சிம்பன்சி பற்றி ஆராய்ந்த ஆங்கிலேயப் பெண்மணி

★ 1939-சீமுஸ் ஹீனி, நோபல் பரிசு பெற்ற ஐரிஷ் எழுத்தாளர்

★ 1941-மைக்கல் பிரௌன், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★ 1949-கிறித்தபர்ஃகிச்சின்சு, அமெரிக்க எழுத்தாளர், ஊடகவியலாளர்

★ 1963-காரி காஸ்பரோவ், ரஷ்ய சதுரங்க ஆட்டக்காரர்

★ 1979-பேரன் டேவிஸ், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்


### இறப்பு

★ 1605-பொரிஸ் குதுனொவ், இரகசியப் பேரரசன் (பி.1551)



★ 1930-தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியர், பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரத்தின் பிறந்த தினம். (இ.1959)

# உலகிலேயே பழைமையான சப்பாத்து கண்டுபிடிப்பு



உலகின் மிகவும் பழமையான சப்பாத்து அர்மீனியாவில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதற்கு வயது 5500 ஆண்டுகள். அதாவது எகிப்தின் முதல் பிரமிட்டை விட 1000 ஆண்டு முன்பே தயாரிக்கப்பட்டது.

மாட்டுத் தோலில் செய்யப்பட்ட இந்த சப்பாத்துக்கு லேஸ் உண்டு. வித்தியாசமின்றி எந்த பாதத்திற்கும் பொருந்தும் வகையில் மூதாதையர் உருவாக்கியது.

உலகின் மிக பழைமைவாய்ந்த சப்பாத்து கண்டுபிடித்துவிட்டோம். அது ஆணுடையதா பெண்ணுடையதா என்பதுதான் தெரியவில்லை என்கிறார் அயர்லாந்தின் கார்க் பல்கலைக்கழக விஞ்ஞானி ரான்பின்யாசி.

## அதிசய உலகம்...

# ஆச்சரியப்பட வைக்கும் மணல் ஓவியம்



எத்தனை வகையான கலைகள் இருக்கின்றன என்பதனை விட புதிய புதிய கலைகள் உருவாகிக் கொண்டே இருக்கின்ற இந்த உலகத்தில் இப்படியும் ஒரு கலை இருக்கின்றதா என பிரமிக்க வைத்துள்ளது இந்த மணற்கலையும் அதனை செய்த கைகளும்....

இப்படியும் செய்யலாமா இப்படியும் இருக்கின்றதா.... என மனசுக்குள் ஆயிரம் கேள்விகள் எழும்படியாக இருக்கின்றது இப்படம்.

# வீடுகள் நகரும் அதிசயம்



மனிதர்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கு உருவாக்கப்பட்ட வீடுகளுக்கு கால் முளைத்தால் எப்படி இருக்கும். தினமும் பிடித்தமான இடங்களில் தங்கலாம் அல்லவா?

அதேபோன்று இடத்திற்கு இடம் நகரும் வீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவில் அதிகம் காணப்படும் இந்த வீடுகள் சுற்றுலா பயணிகளுக்காக வாடகைக்கு கொடுக்கப்படுகின்றது.

படத்தில் நீங்கள் காண்பது சகல வதிகளையும் உள்ளடக்கிய 130 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளில் ஒன்றாகும்.

# இரட்டை நுரையீரல் மற்றும் அறுவைச் சிகிச்சையில் சாதனை



கனடாவில் ஒட்டவா மாகாணத்தைச் சேர்ந்த ஹெலன் என்ற 20 வயது இளம் பெண்ணுக்கு இரட்டை நுரையீரல் மாற்று அறுவைச் சிகிச்சை செய்து மருத்துவர்கள் சாதனை புரிந்துள்ளனர்.

ஹெலனுக்கு கடந்த சில தினங்களுக்கு முன்பு மூச்சுத் திணறல் ஏற்படவே ரொறொண்டோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவர்கள் சோதனை செய்து பார்த்ததில்அவருக்கு நுரையீரல் பாதிப்படைந்திருந்தது தெரியவந்தது.

இந்நிலையில் உடனே உறுப்பு தான பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு 7 மணி நேர அறுவைச்சிகிச்சைக்குப் பின்னர் இவர் காப்பாற்றப்பட்டுள்ளார்.

இந்த சிகிச்சையை மூன்று அறுவை சிகிச்சை நிபுணர்கள், மூன்று செவிலியர்கள், இரண்டு மயக்க மருந்து நிபுணர்கள் உள்ளிட்ட 10 பேர் கொண்ட மருத்துவர்கள் குழு மேற்கொண்டனர்.

ஒரு நுரையீரல் மட்டும் அறுவை சிகிச்கைச நிபுணர்களால் வெற்றிகரமாக பொருத்தப்படும். இந்தக் கால கட்டத்தில் ஹெலனுக்கு இரட்டை நுரையீரல்களையும் மாற்றும் அறுவைச் சிகிச்சையை நடந்துள்ளது மிக பெரிய சாதனையாகும்.

# எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய அடுப்புகள்



USB இணைப்பில் பயன்படுத்தக் கூடியதும் எளிதில் எடுத்துச் செல்லக் கூடியதுமான Power pot எனப்படும் மின்சார அடுப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.இதுவே USB இணைப்பைக் கொண்ட முதலாவது வெப்ப இலத்திரனியல் மின்சார அடுப்பாகும். இவற்றை மின்சார வசதியற்ற இடங்களில் சார்ஜ் செய்து பயன்படுத்த முடியும்.

இவை 5W,10W,15W ஆகிய வேறுபட்ட வலுவுடைய மின்சாரத்தில் பயன்படுத்தக் கூடியவாறு வெவ்வேறு அளவுகளில் கிடைக்கின்றன.இதன் பெறுமதியானது பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவிற்கு அமைய 125 தொடக்கம் 500 அமெரிக்க டொலர்களுக்குள் மாறுபடக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.

# மரக்கறியில் இசை மீட்கும் ஜப்பானியர்கள்



வழமையாக இசையை மீட்டுவதற்கு என்று வயலின்,மிருதங்கம், வீணைபோன்ற கருவிகள் காணப்படுகின்றன. ஆனால் அதையும் தாண்டி ஒருபடி மேலே போய் இந்த ஜப்பானியர் இசையை மீட்டுகின்றார்.

ஆச்சரியம் என்னவென்றால் இவர் இசை மீட்டுவது வகை வகையான மரக்கறிகளில் தான். Paul simon இவர் சின்ன வய தில் இருந்தே இப்படியான செயல்களை செய்து வருகின்றார்.

கரட், லீக்ஸ், கோவா போன்ற மரக்கறிகளில் துளையிட்டு இசை மீட்டுகிறார் இவர்.

அதை தானே ஒளிப்பதிவும் செய்கின்றார். இவரின் புதிய முயற்சியை Youtube இல் ஏராளமானோர் பார்த்து இரசித்துள்ளனர்.

எங்கே நீங்களும் பாருங்களே இந்த ஜப்பானியரின் செயலை....



லண்டனில் இடம்பெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளும் பார்வையாளர்களை மேலும் கவர்ந்து கொள்ளும் பொருட்டு பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் மணற் சிற்பங்கள்....

# 'நந்தன' புதுவருட இராசி பலன்கள்



## மிதுனம்

மிருகசீரிடம் 3,4 பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3

### வக்ரசனி மாறியதும் வளர்ச்சி அதிகரிக்கும்!

**சவால்களைச் சமாளிப்பதிலும், சாமர்த்தியமாகப் பேசுவதிலும் முன்நிலை வகிக்கும் மிதுன இராசி நேயர்களே!**

கரவருடம் முடிந்து நந்தன வருடம் தொடங்குகிறது, உங்களை பொறுத்தவரை தனாதிபதி சந்திரனின் பார்வை பூரணமாக மிதுனத்தில் பதிந்து ஆண்டு தொடங்குவதால், பணவரவு எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாகவே இருக்கும்.

பற்றாக்குறை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று சொல்லும் அளவிற்கு கிரகநிலைகள் சாதமாக உலாவருகின்றன.

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசி நாதன் புதன் உச்சம் பெறுகிறார். அதை வக்ரம் பெற்ற சனி பார்க்கிறார். குரு இலாப ஸ்தானத்தில் சஞ்சரித்து, உங்கள் இராசிக்கு 3,5,7 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். எனவே, சகோதர ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நிறைவேற்றுவீர்கள்.

12 ஆம் இடத்தில் இருக்கும் கேது பயணங்களை அதிகரிக்க வைக்கும். செவ்வாயும் சனியும் இணையும் நேரத்தில் மட்டும் கவனத்தோடு செயற்பட வேண்டும். வீண்பழிகள், வாங்கல், கொடுக்கல்களில் சிக்கல், வாகனத்தால் தொல்லை வரலாம்.

உங்களுக்கு இந்த நந்தன வருடம் எப்படி இருக்கும் என்பதை பற்றி பர்ப்போம்

**ஆண்டின் தொடக்கம் முதல் வைகாசி 3வரை**

ஆண்டின் தொடக்கத்தில் சந்திர பலம் நன்றாக இருக்கிறது. சனியின் வக்ர இயக்கமும், நினைக்க இயலாத ராஜ யோகத்தைக்கொடுக்கும். விரய கேது ஆறாமிடத்து இராகு காரணமாக பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்ப வழிவகுக்கும்.

**சிவல்புரி சிங்காரம்**

சித்திரை 17இற்கு மேல் மேஷ புதனின் சஞ்சாரத்தால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும் மாமன் மைத்துனர் வழியில் ஒத்து ழைப்பு கிடைக்கும்.

சூரிய பலம் கூடுவதால் அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைத்து ஆனந்தப்படுவீர்கள். ஆற்றல்மிக்கவர்கள், உங்களுக்கு பின்னணியாக இருந்து காரிய வெற்றிக்கு கைகொடுத்து உதவுவர்.

என்ன இருந்தாலும் அர்த்தாஷ்டமச்சனியின் ஆதிக்கம் நடப்பதால் இறைவனை பூஜித்தும் இணைந்து செயற்படுபவர்களை நேசித்தும் எதையும் தொடங்கும் முன்யோசித்தும் செய்தால் வெற்றிகிட்டும்.

நவக்கிரகங்களில் நல்லவர் என்று வர்ணிக்கப்படுபவர் குரு. உங்கள் இராசிக்கு 7,10 க்கு அதிபதியாக குரு விளங்குவதால், 12ல் சஞ்சரிக்கும் பொழுது பக்கபலமாக இருப்பார். பணத்தேவைகளை பூர்த்திசெய்வார். சிக்கல்களை விலக்குவர்.

12-ல் சஞ்சரிக்கும் விரயஸ்தான குரு, விரயத்தை அளவிற்கு அதிகமாகச் செய்வாரோ என்று நீங்கள் நினைக்க வேண்டாம். அவரோடு கேதுவும், சுக்கிரனும் இணைந்திருப்பதால் ஆலயத்திற்காகவும் ஆன்மீகத்திற்காகவும் ஒரு தொகையை செலவுசெய்வீர்கள் வீட்டிற்குத் தேவையானவற்றை பட்டியல் போட்டு வாங்கி, பணத்தை நல்ல வழியில் விரயம் செய்யும் சூழ்நிலை உருவாகும். வியாழக் கிழமையன்று குரு தட்சிணாமூர்த் திக்கு முல்லைப் பூமாலை அணிவித்து, அர்ச்சித்து வழிபட்டுவந்தால், அனைத்துக் காரி யங்கிளிலும் வெற்றிகிடைக்கும்.

உங்கள் இராசிக்கு 12 இல் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 4,6,8 ஆகிய இடங்களில் பதிவதால் அந்த இடத்து ஆதிபத்தியங்கள் எல்லாம் உடனுக்குடன் நடைபெற்று உற்சாகத்தை வரவழைத்துக் கொடுக்கும். கடன்சுமை குறையவும் கடமைகளை நிறைவேற்றவும், பெயர்ச்சியாகும் குருவின் பார்வை பலன்கொடுக்கும்.

வீடுவாங்கலாமா, இடம் வாங்கலாமா என்று மனதில் நடத்திய பட்டிமன்றத்திற்கு தீர்ப்பு கிடைக்கும். வெள்ளை உள்ளம் படைத்தவர்கள் இல்லம் தேடிவந்து உங்களுக்கு

**வக்ர குரு வரவைக் கொடுக்குமா? செலவைக் கொடுக்குமா?**

புரட்டாசி 26ஆம் திகதி முதல் தை 24 ஆம்திகதி வரை ரிசபத்தில் சஞ்சரிக்கும் குரு வக்ரம் பெறுகிறார். 7,10க்கு அதிபதியான குரு வக்ரம் பெறும் பொழுது, நன்மைகளையே வழங்கும் விலகிச்சென்ற வரனை மீண்டும் வரவழைத்து கொடுக்கும். கைவிட்டு போன் தொழில் மீண்டும் உங்களுக்கே வந்து சேரலாம்.

புதிய ஒப்பந்தங்கள் மகிழ்ச்சி தரும் விதத்தில் அமையும். பிற இனத்தாரின் ஒத்துழைப்போடு கடன் சுமையில் இருந்து விடுபடுவீர்கள். செலவு வரும் முன்னதாகவே வரவு வந்து கை கொடுக்கும்.

பொதுவாக, இக்காலத்தில் குருவிற்குரிய சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

**பாம்புக் கிரகப்பெயர்ச்சி பக்கபலமாக இருக்குமா?**

கார்த்திகை 17 ஆம் திகதி துலாம் இராசியில் ராகுவும், மேஷ இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். இந்தக் கிரகப் பெயர்ச்சி உங்களுக்கு யோகம் தரும் வித்திலேயே அமைகிறது. அந்நிய தேச அனுகூலம் எண்ணியபடியே கிடைக்கும். கூட்டு முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். அவர்களின் கல்வி கருதியும், கல்யாண வாய்ப்புக் கருதியும் ஒரு தொகையைச் செலவிடுவீர்கள்.

கேதுவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் உடல் ஆரோக் கியத்தில் மட்டும் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும். நோய்க்கான அறிகுறி தோன்றும் பொழுது மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது. யோகபலம் பெற்ற நாளில் சர்ப்பசாந்தியை முறையாகச் மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் வரவேண்டிய தொகை வருவதில் தாமதம் ஏற்படும். நழுவிச் சென்ற வாய்ப்புக்களை வரவழைத்துக் கொள்ள சனி பகவானைத்தான் சரணடையவேண்டும். சனிக்கிழமை விடிந்ததும் காகத்திற்கு சோறு வையுங்கள். சனியின் சந்நிதியில் கருநிற காகம் ஏறிக் காசினி தன்னைக் காக்கும் என்ற சனி கவசத்தைப்பாடி எள் தீபம் ஏற்றுங்கள். பணியில் ஏற்பட்ட தொய்வுகள் அகலும்.

**வருடம் முழுவதும் வசந்தம் வர வழிபாடு!**

புதன் கிழமை தோறும் அருகில் உள்ள ஆலயத்துக்குச்சென்று விஷ்ணுவை வழிபடலாம். எட்டு வகை இலட்சுமியால் என்ற அஷ்டலட்சுமி கவச பாடலை தினமும் படித்து வழிபட்டால் செல்வநிலை உயரும்.

சிறப்பு வழிபாடாக காக்கும் கடவுள் விஷ்ணுவையும் இலட்சுமியையும் வழிபட்டு வாருங்கள். இறைவனை கைகூப்பித் தொழுதால் பை நிறைய பணம் சேரும்.

மிதுன இராசியில் பிறந்த பெண்களுக்கு இந்த நந்தன ஆண்டில் குருப் பெயர்ச்சிக்குப்பின்னால் குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான சூழ்நிலை உருவாகும். கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்டுவீர்கள். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட்டாலும், மூன்றாம் நபரால் மனநிம்மதிக்குறைவு ஏற்படலாம்.

கன்னி இராசியில் செவ்வாய், சனி கூடும் நேரத்தில் கணவன்-மனை விக்குள் விட்டுக்கொடுத்து செல்வது நல்லது. விலை உயர்ந்த பொருட் களை கையாளும் பொழுது கவனம் தேவை. ராகு-கேது பெயர்ச்

## சனியின் வக்ர இயக்கமும் நினைக்க இயலாத இராஜயோகத்தைக் கொடுக்கும்

பக்கமலமாக இருப்பர். வழக்குகள் சாதகமாக முடியும்.

**செவ்வாய் சனி சேர்க்கைக்காலம்**

கன்னி இராசியில் செவ்வாயும் சனியும் சேரும் நாட்கள் மட்டும் நீங்கள் மிகக் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும். நல்லதையே செய்தாலும் மற்றவர்கள் உங்கள் மீது பழி சுமத்துவர்.

வாங்கிய வீட்டை விற்கும் நிலை வந்ததே என வாடலாம். வளர்ச்சியை கருதி ஏற்படுத்திய தொழிலை பங்குதார்களே எடுத்துக் கொள்ளலாம். வாகனத்தில் செல்லும் போது கவனம் தேவை.

ஆனி 9 முதல் ஆடி 29 வரை தேனினும் இனிய வாழ்க்கை அமைய தெய்வ தரிசனங்கள்தான் தேவை.

**துயரங்களைப்போக்குமா துலாம் இராசிச்சனி?**

ஆவணி 27 ஆம் திகதி முதல் துலாம் இராசிக்குள் உச்சம் பெறும் சனி யோகத்தை அள்ளி வழங்குவார். பிள்ளைகளின் கடன், கடமைகளை முடித்து நிம்மதி பெறுவீர்கள். உறவினர் பகை அகலும், உயரிய பொறுப்புகளும், பதவிகளும் ஒரு சிலருக்கு வந்துசேரும்.

செய்வதால் எதிர் பார்ப்புக்கள் நிறைவேறும்.

மார்கழி மாதம் செவ்வாய்-சனி இரண்டின் பார்வையும் கேதுவின் மீது பதிவதால் வாங்கிய சொத்தை விற்கவும் மீண்டும் புதிய சொத்துக்கள் வாங்கவும் வாய்ப்புகள் உருவாகும்.

**வக்ர சனியால் வளர்ச்சி ஏற்படுமா?**

சித்திரை 1 ஆம்திகதி முதல் ஆனி 6 ஆம் திகதி வரையிலும், பிறகு மாசி 4 ஆம் திகதி முதல் பங்குனி 31 ஆம்திகதி வரையிலும் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் இராசி அடிப்படையில் 8,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக விளங் கும் சனி பகவான் வக்ரம் பெறும் பொழுது, பூர்வீக சொத்துக்களைக் கைபற்றிக் கொள்வதில் தாமதம் ஏற்படும். பார்வைக்கு மிடுக்காக நீங்கள் தோன்றினாலும், மனதுக்குள் கவலை குடிகொண்டிருக்கும். மாற்று மருத்துவத்தின் மூலம் உடல்நலத்தை சீராக்கிக் கொள்ளலாம்.

தொழில் கூட்டாளிகள் நம்பிக்கை மாறி, உங்கள் விழிப்புணர்ச் சியையும் மீறி சில தவறுகளைச் செய்ய நேரிடலாம். வராத பாக்கிகள் வந்து சிக்கு பின்னால் உத்தியோகத்தில் இருப்ப வர்களுக்கு உயர்பதவிகள் கிடைக்கும். தாய் வழியில் எதிர்பார்த்தபடி தனபாலம் வந்து சேரும்.

துலாத்தில் சனி உச்சம் பெறும் பொழுது பிள்ளைகளால் பெருமைக் குரிய சம்பவங்கள் நடைபெறும். சொத்துக்களை வாங்கிச் சொந்தபந்தங்கள் வியக்கும் அளவு வீடு கட்டிக் குடியேறுவீர்கள். சனிக்கிழமை




சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்வதோடு சுயஜாதக ரீதியாகவும் பரிகாரங்கள் செய்தால் உடனடியாக பலன்களைக் காண இயலும்.

(தொடரும்)

# அமெரிக்காவின் தீர்மானத்திலிருந்து இலங்கை கற்கவேண்டிய பாடங்கள்

**13 -வது திருத்தச்சட்டத்தை அமுல் படுத்துவதற்கான நடவடிக்கைகளை இலங்கை எடுத்திருந்தால், தற்போது ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கு இந்தியா தனது ஒத்துழைப்பை ஒருபோதும் வழங்காதிருந்திருக்கலாம்**

கடந்தமாதத்தில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை சிறிலங்கா தனது கருத்தில் எடுத்துள்ள அதே வேளையில் 2009ல் ஜெனிவாவில் இடம்பெற்ற கூட்டத்தொடரின் போது இலங்கை தான் பெற்றுக் கொண்ட வெற்றி மமதையில் செயற்பட்டதை மீளவும் திரும்பிப்பார்க்கலாம்.

இலங்கை அரசாங்கமானது தமிழீழ விடுதலைப்புலிகளை தோற்கடித்து யுத்த வெற்றியைப் பிரகடனப்படுத்தி ஒரு வாரத்தின் பின்னர் இலங்கை இராணுவத்தால் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் ஏனைய மனித உரிமைகளுக்கு எதிராக, குறிப்பிட்ட சில மேற்குலகநாடுகள் ஒன்று சேர்ந்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால், சிறிலங்கா அரசாங்கம் 2009ல் கூட்டப்பட்ட பேரவையின் சிறப்புக் கூட்டத் தொடரில் வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

அந்த நேரத்தில் இலங்கையின் இறுதிக் கட்ட உள்நாட்டுப் போர் இடம்பெற்ற யுத்தவலயத்தில் சிந்தப்பட்ட இரத்தம் கூட காய்ந்திருக்கவில்லை. ஆனால், தனது இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு

**நியூஸ் போர்ட்**

மீறல்களைத் தொடர்பில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படாது இலங்கை அரசாங்கம் தப்பித்துக்கொண்டது.

ஆனால், இலங்கை அரசாங்கத்தினால் உறுதி கூறப்பட்ட விடயம் ஒன்று தற்போது நிறை வேற்றப்பட்டுள்ள ஜெனிவா தீர்மானத்தில் உள்ளடங்கியிருப்பதை பேரவையில் சில உறுப்பு நாடுகள் நினைவில்கொண்டுள்ளன. இலங்கையில் நடைமுறையிலுள்ள இனமோதலானது. இராணுவத்தீர்வு மூலம் நிறைவுக்குக் கொண்டுவரப்படமாட்டாது எனவும் இந்த யுத்தமானது நாட்டில் நிலையான இறுதியான, சமாதானத்தையும் நல்லிணக்கப்பாட்டையும் கொண்டுவருவதற்கேற்ற வகையில் 13 வது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் அரசியல் தீர்வொன்றின் மூலமே நிறைவுக்குக் கொண்டுவரப்படும் என இலங்கை அரசாங்கம் அண்மையில் வழங்கியிருந்த உறுதிப்பாடு வரவேற்கப்படவேண்டிய ஒன்றாகும்.

2009 இல் கூட்டப்பட்ட கூட்டத்தொடரின்போது இலங்கை அரசாங்கம் 13 வது திருத்தச்சட்டம் தொடர்பாக வழங்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும் என நம்பிய இந்தியா அதற்கான பரிசாக அப்போது இலங்கையை ஆதரித்திருந்தது. ஆனால், இலங்கை அரசாங்கமானது 13வது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பில் இந்தியாவை ஏமாற்றியதால் தற்போது இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களித்துள்ளது என கூறப்படுகின்றது.

தற்போது பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க முற்பட்டமைக்கு இரு நோக்கங்கள் காணப்படுகின்றன. அதாவது இந்தியாவானது இவ்வாக்கெடுப்பு இடம்பெறுவதற்கு சற்றுமுன்னர். இலங்கைக்கு எதிராக அமெரிக்காவின் தலைமையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை ஆதரித்து வாக்களிப்பதென முடிவெடுத்திருந்தது. இத்தீர்மானத்தை ஆதரித்து வாக்களிப்பதன் மூலம் இலங்கை ஜனாபதியால் வழங்கப்பட்ட 13வது திருத்தச்சட்டம் தொடர்பான வாக்குமூலத்தை மீளவும் சுட்டிக்காட்டலாம் என இந்தியா எண்ணியது.

இந்நிலையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது ஏன்?

இலங்கை அரசாங்கமானது தனது மாகாணங்களுக்கான அதிகாரத்தைப் பரவலாக்கி தற்போது மத்திய மயப்படுத்தப்பட்டுள்ள நாட்டின் நிர்வாக அதிகாரத்தைப் பரவலாக்கி அதற்கான தீர்வை நோக்கி நகர்வதற்காக வரையப்பட்ட 13வது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசாங்கத்திற்கு நினைவூட்டுவதற்கான ஒருவழிமுறையாகவே தற்போது இந்தியா இலங்கைக்கு எதிராக வாக்களித்துள்ளது.

இத்திருத்தச் சட்டத்தை இலங்கையானது நிறைவேற்றும் பட்சத்தில் அங்கு வாழும் தமிழ்மக்களுக்கு நிலையான, உறுதியான அரசியல் வழி அமைதித் தீர்வை வழங்க முடியும் என இந்திய மத்திய அரசு நம்புகின்றது.

1987 இல் கைச்சாத்திடப்பட்ட இந்தியா-இலங்கை உடன்படிக்கையின் பிரகாரமே 13வது திருத்தச்சட்டம் உருவாக்கப்பட்டது இத்திருத்தச்சட்டமானது இலங்கையின் மாகாணங்களுக்கு அதிகாரப்பரவலாக்கலை வழங்குவதற்கான சரத்தைக்கொண்டுள்ளது.

இலங்கையின் வடக்குக்கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களுக்கான அதிகாரப்பகிர்வு வரையறுக்கப்பட்டு, மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்குவதற்கான நடைமுறை உள்ளபோதிலும், தமிழ்மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வுகள் வழங்கப்படாது, உள்ளூர் அரசியல்வா ரங்கள் வழங்கப்படாது காணப்படுவது வேதனைக்குரிய விடயமாகும்.

அடிப்படையில், இலங்கையின் ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் தீவிர கவனம் செலுத்தி, வடக்கு மற்றும் கிழக்கில் அரசியல் ரீதியான இயல்பு நிலையைக் கொண்டுவருவதற்காக மேற்கொண்டிருந்தால் இந்தியா 2012 இல் நிறைவேற்றப்பட்ட பேரவையின் தீர்மானத்துக்கு தனது ஆதரவை வழங்காது இருந்திருக்கலாம். இலங்கை இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட யுத்தகால மீறல்கள் கவனத்திற்கொள்ளப்படாது விடப்பட்டிருக்கும்.

அரசியல்தீர்வை நோக்கிய இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகள் மீது இந்தியா மேலும் நட்பை பலப்படுத்திக் கொள்வதற்கு வழிவகுத்திருக்கும். இதன் மூலம் அனைத்துலக ரீதியில் இலங்கையானது மேலும் கூட்டாளிகளைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுப்பதற்கு இந்தியா உதவியிருந்திருக்கும்.

இதற்குப்பதிலாக இலங்கை ஜனாதிபதி மிகவிரைவான, தளர்வான நடவடிக்கையை மேற்கொண்டுள் ளார். இலங்கை ஜனாதிபதி 13வது திருத்தச் சட்டத்துக்கு அப்பாற்பட்ட சரத்துக்களை நிறைவேற்றுவதில், தான் ஆர்வமாக உள்ளதாக அறிவித்தபோது உண்மையில் அரசியல்வழித் தீர்வில் இலங்கை அரசாங்கம் மிகவும் ஆர்வமாக உள்ளது என எல்லோரும் கருதினர்.

ஆனால், இலங்கை ஜனாதிபதி 13வதுதிருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணி, காவற்றுறை அதிகாரப்பகிர்வில் சிலவரையறைகளை மேற்கொண்டபோது அந்த நம்பிக்கை இழந்து போனது. அத்துடன் உள்நாட்டை அடிப்படையாகக்கொண்ட அரசியற் தீர்வொன்றை முன்வைப்பது தொடர்பாகவும் ராஜபக்ச தனது கருத்துக்களை முன்வைத்தார். இதன் பெறுபேறாக அரசியற் தீர்வொன்றைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் இலங்கை ஜனாதிபதி எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார் என்பது தெளிவற்ற விடயமாக உள்ளது.

அண்மையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு உருவாக்கப்படுவதற்கான அறிவிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், இக்குழுவுக்கு தமிழ்க்கட்சி தனது பிரதிநிதிகளின் பெயர்களை அனுப்பாததாலேயே இக்குழுவை உருவாக்குவது தொடர்பில் தாமதம் காணப்படுவதாக கூறப்படுவதானது உண்மையில் தந்திரோபாய ரீதியான தாமதம் என்பது ஆச்சரியப்படத்தக்க தொன்றல்ல.

2012 ஜனவரியில் இலங்கைக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணாவருகை தந்த போது சிறிலங்கா அதிபர் 13வது திருத்தச் சட்டம் தொடர்பான தனது வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். ஆனால், இவ்வாக்குறுதி வழங்கிய கையோடு. தான் இவ்வாறான வாக்குறுதி எதையும் இந்திய அமைச்சரிடம் வழங்கவில்லையென இலங்கை ஜனாதிபதி அறிவித்தார்.

இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற மீறல்களுக்கு எதிராக இந்தியா வாக்களித்ததாகவும், 13ஆம் திருத்தச்சட்டத்தின் பிரகாரம் அரசியல் அதிகாரப்பகிர்வை வழங்கி நாட்டில்நிலையான அமைதியை உருவாக்கி, தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்பதை மட்டும் நோக்காகக்கொண்டுஇந்தியா வாக்களிக்கவில்லை. என அதிகாரிகள் தெரிவித்தள்ளனர்.

அமெரிக்காவின் ஆதரவுடன் பேரவையில் முன்வைக்கப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்து வாக்களித்ததில் இந்தியக்கூட்டணி கட்சிகள் பங்கு வகிக்கின்ற போதிலும் இலங்கைக்கு இந்தியாவானது தனது செய்தியைத் தெளிவாக அனுப்புவதற்கேற்ற வகையிலேயே இதற்கான ஆதரவை இந்தியா வழங்கியுள்ளது. ஆனால், இந்தியா இவ்வாக்கெடுப்பில் பங்குபற்றாது நடுநிலை வகித்திருந்தாலும் கூட இந்தியாவின் நிலைப்பாட்டில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதையே அது காண்பித்திருக்கும்.

இலங்கை இத்தீர்மானத்தை தோற்கடிப்பதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்தியிருந்தது. இதனால், இந்திய மத்திய அரசானது, தனக்கு ஆதரவளிக்கும் என இலங்கை முழுமையாக நம்பியிருந்தது. இலங்கை வெளிவிவகார செயலகத்துக்கு இந்திய மத்திய அரசாங்கமானது, பேரவையில் நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் சரத்துக்களை கவனத்திற் கொண்டுள்ளதாக செய்தி அனுப்பிய போது இந்தியாவின் உண்மையான நிலைப்பாடு முதலில் வெளித் தெரிந்தது.

இலங்கையானது, தனக்கு எதிராக



வாக்களித்த 24 நாடுகளுடனும் பகைமை பாராட்டியதுடனும், தனக்கு சார்பாக வாக்களித்த 15 நாடுகள் மற்றும் நடுநிலை வகித்த 8 நாடுகள் ஆகிவற்றுக்கு நன்றி பாராட்டி கடிதம் அனுப்பியிருந்தது. *இந்தியாவானது, இவ்வாக்கெடுப்பில் பங்குபற்றாது, நடுநிலை வகிப்பது சரியான தெரிவாக இருக்காது என இலங்கை, இந்தியாவுக்கு அனுப்பிய தகவலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.* இந்தியாவானது, தற்போது இலங்கைக்கு எதிராக வாக்களித்தன் மூலம் இலங்கையைப் பாதுகாக்க வேண்டும் எனக் கருதியதைவிட தனது நாட்டின் சொந்த நலனைக் காப்பதிலேயே குறியாக இருந்துள்ளது என்பதை தெளிவாகக் காட்டியுள்ளது.

பேரவையில் முன்வைக்கப்படும் தீர்மானம் தொடர்பில் சில வரையறைகளையும் மாற்றத்தையும் கொண்டு வந்து தீர்மானத்தை ஆதரிப்பது தொடர்பாக இந்தியா ஆராய்ந்து வருவதாக மார்ச் 19 அன்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்திருந்தார். இந்நிலையில் இந்தியா இத்தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்க வேண்டும் என அமெரிக்கா கோரிக்கை விடுத்திருந்தது.

இத் தீர்மானத்தை ஆதரிப்பதன் மூலம் இலங்கைக்கு மிக வலுவான செய்தி ஒன்றை அனுப்பமுடியும் என்வும் அதேநேரம் இலங்கை மீதான சீனாவின் சொல்வாக்கை குறைக்க முடியும் எனவும் இந்தியா நம்பியிருந்தது. *இலங்கைத் தீவில் நிலவும் இனமுரண்பாட்டைத் தீர்ப்பதில் இந்தியா பங்களிக்க வேண்டும் என இலங்கை அரசும் தமிழ் மக்களும் கருதுகின்றனர். எப்போதும் இதையே இருதரப்பும் எதிர்பார்த்து நிற்கின்றன.*

கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை அமுல் படுத்தி அரசியற் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் இதற்கான நகர்வுகளில் இலங்கை அரசாங்கம் தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும் எனவும் இந்திய மத்திய அரசு நம்புகிறது.

இலங்கையின் நகர்வுகள் தற்போது மறுக்க முடியாதவாறு கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டின் இறுதியில் இலங்கை அரசாங்கம் தனது முயற்சிகள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

தமிழ் தலைமைக்கும் தமிழ் மக்களுக்கும் நேர்மையான நீதியான அரசியற் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுப்பதில் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் தவறிழைத்தால் அனைத் துலக சமூகமானது தொடர்ந்தும் இலங்கை மீது எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

மலர்ந்துள்ள நந்தன புதுவருடத்தில் அன்பர்கள், நண்பர்கள் , வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவிக்கும் அதேநேரம்

செல்வம் சேரும் பொன்னான நாளாம் அட்ஷய திருதியை இம்மாதம் 24 ஆம் திகதி(செவ்வாய்க் கிழமை) அன்றைய தினத்தில் உங்கள் இல்லத்துக்கு தங்கப் பவுண் ஒன்றை உங்கள் வசதிக்கேற்ப கொள்வனவு செய்து செல்வத்தை மென்மேலும் பெருக்கிக் கொள்ளுங்கள்.

சானுகா நகையகம்



அட்ஷய திருதியை
(24.04.2012)

பின்பற்றுங்கள் உங்கள் இல்லத்தில்
செல்வச் செழிப்பு மேலோங்கட்டும்

அன்றைய தினத்தில் உங்களை அன்புடன் அழைக்கின்றனர் யாழ். நகரின் கஸ்தூரியார் வீதியில் சானுகா நகையகத்தினர்.
1995 முதல் மனம் கவரும் தங்க ஆபரணங்கள்

இல.200G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 3700

சானுகா ஜுவல்ஸ்



இல. 64D, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 4687

# இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு அவசியம் வேண்டும்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் காலம் கடந்த ஞானம்

(கொழும்பு).

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கையில் வசிக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே வேறுபாடு உள்ளது என்பதை இலங்கை அரசில் பொறுப்பில் உள்ளவர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஜனாதிபதி ராஜபக்ஷ போரால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுப் பணிகளுக்காக தற்போது செய்வதை விட இன்னும் அதிகமாகச் செய்யவேண்டும் என இலங்கை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனிப்பட்ட விடயமாக இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து டில்லியில் நேற்று முன்தினம் அவர் செய்தியாளர்களிடம் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத அமைப்பான விடுதலைப் புலிகள் அமைப்பு ஒழிக்கப்பட்டது. மிகுந்த மகிழ்ச்சி அளிக்கின்றது. தற்போதைய இலங்கை அரசுக்கு அங்குள்ள தமிழர்களுக்கான மறு வாழ்வுப் பணிகளை முழு வீச்சில் மேற்கொள்வதற்கான மிகப் பெரிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் இதை வலியுறுத்தி வருகின்றன. இலங்கைத்தமிழர் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காண வேண்டும் என இந்த நாடுகள் கூறி வருகின்றன. இந்த வாய்ப்பை இலங்கை அர்சு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

போர் முடிவுக்கு வந்து மூன்று ஆண்டுகள் ஆகி விட்டன. இலங்கை தமிழர்களுக்கு இந்த கால கட்டத்தில் அதிகமான மறு வாழ்வுப் பணிகளை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் அந்த அளவுப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. விடுதலைப் புலிகளுக்கும் இலங்கையில் வசிக்கும் தமிழ் மக்களுக்கும் இடையே வேறுபாடு உள்ளது.

ஆனால் இலங்கை அரசில் பொறுப்பில் உள்ளவர்கள் இதை புரிந்து கொள்ளவில்லை. மறுவாழ்வுப் பணிகளை பொறுத்தவரை இலங்கை அரசு இன்னும் அதிகமான பணிகளைச் செய்திருக்க வேண்டும்.

இலங்கை தமிழர்கள் தொடர்ந்து நடந்து வந்த போரால் கடந்த 30 ஆண்டுகளாக கடுமையான பாதிப்பிற்கும் பாகுபாட்டிற்கும் ஆளாகியுள்ளனர். அவர்களுக்கான நிவாரணப் பணிகளை முழு வீச்சில் மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# உழவியந்திரத்திற்குள் சிக்குண்டு குடும்பஸ்தர் பரிதாப உயிரிழப்பு

(ஒட்டுசுட்டான்)

உழவியந்திரம் தடம்புரண்டதில் அதில் பயணித்த சாரதி கீழே விழுந்து உழவியந்திர சில்லுக்குள் நசியுண்டு விபத்துக்குள்ளா னதில் பரிதாபமாக உயிரிழ ந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த 10 ஆம் திகதி இரவு 8 மணிக்கு முத்தையன்கட்டு இடதுகரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த கோ.காண்டீபன் (வயது 35) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு பரி தாபமாக உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் மாஞ்சோலை மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசா ரணையின் பின் உறவினர்களிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளது.

(அ-3-258)

யாழ். மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்க அறிவித்தல்

15.04.2012 ஞாயிறு நடைபெற விருந்த மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் எதிர்வரும் 29.04.2012 ஞாயிறு காலை 10.00 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதனை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகிறோம்.

என்.இராஜதேவன் உ.தவபாலன்
தலைவர் (8160) செயலாளர்

# கடத்தப்பட்ட குமார் குணரட்னத்தின் கதை தொலைக்காட்சி நாடகம் போன்றது

## அமைச்சர் மேர்வின் கூறுகின்றார்

(கொழும்பு)

முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் குமார் குணரட்னம் மற்றும் திமுத்து ஆட்டிகல ஆகியோர் கடத்தப்பட்ட கதையை கேட்கும் போது எழுத்தாளர் கருணாசேன ஜயலத்தின் ஊமை இதயம் என்ற கதையில் வரும் தம்மி சுதத் என்ற கதாபத்திரமே நினைவுக்கு வருவதாக அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது குணரட்னமும் திமுத்துவும் நடித்த புதிய தொலைக்காட்சி நாடகம் போன்றது எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இந்த தொலைக்காட்சி நாடகத்தில் கடத்தலில் இருந்து விடப்பட்டு வந்த திமுத்து தனது கண்களை கட்டி அழைத்துச் சென்றதாக கூறியதுடன் இடையில் இரண்டு பேர் வாகனத்தில் இருந்து இறங்கிச் சென்றதாகவும் ஊடகங்களிடம் தெரிவித்தார். கண்கள் கட்டப்படிருந்த திமுத்து எப்படி இரண்டு பேர் வாகனத்தில் இருந்து இறங்கி சென்றதை பார்த்தார் என்பது ஆச்சரியமானது.

அத்துடன் தன்னை கடத்தியவர்கள் ஜே.வி.பி. பற்றி விசாரித்ததாக திமுத்து கூறியிருந்தார். ஜே.வி.பியை பற்றி ஏன் திமுத்துவிடம் விசாரிக்க வேண்டும். அதேபோல் திமுத்து ஆட்டிகல விடுவிக்கப்பட்ட உடன் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தியது மிகப் பெரிய ஆச்சரியம் எனவும் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அதேபோல் திருட்டுத்தனமாக இலங்கைக்குள் வந்து வெட்கமற்ற வேலைகளை செய்ய குணரட்னத்திற்கு எந்த உரிமையும் கிடையாது. குணரட்னத்தின் அவுஸ்திரேலிய குடியுரிமை மூலம் இந்த சர்வதேச சூழ்ச்சி தெளிவாகியுள்ளது. இவர்கள் இதன்மூலம் நாட்டை காப்பாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் படையினர் ஆகியோருக்கு அவப் பெயரை ஏற்படுத்தி மீண்டும் இலங்கை மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை சுமத்தவே முயற்சித்துள்ளனர்.

இப்படியான சூழ்ச்சிகளை செய்து இராணுவத்தினர் மற்றும் நாட்டை அவப்பெயருக்கு உட்படுத்தாது தேர்தலில் அரசியல்வாதிகளுடன் போட்டியிட வேண்டும் எனவும் மேர்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு தமிழக முதல்வரின் வாழ்த்துச் செய்தி

(சென்னை)

தமிழ்ப்புத்தாண்டையொட்டி முதல்வர் ஜெயலலிதா தமிழர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு,

தமிழ்ப்புத்தாண்டு மலருகின்ற இந்த நன்னாளில் என் அன்புக்குரிய தமிழ் பெருமக்கள் அனைவருக்கும் எனது இனிய தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.


பல்லாண்டு காலமாய் சித்திரை முதல் நாளை தமிழ்ப்புத்தாண்டாகக் கொண்டாடிய தமிழ்மக்கள் அந்த நாள் வேறு ஒரு நாளுக்கு மாற்றப்பட்டதால் மனமுடைந்தார்கள். வலிந்து திணிக்கப்படுகின்ற மாற்றங்களை மக்கள்ஒருநாளும் ஏற்பதில்லை.

எனவே சித்திரை முதல் நாளையே பெரும்பான்மையான உலகத் தமிழர்கள் புத்தாண்டாகக் கொண்டாடினார்கள்.

சித்திரை முதல்நாளையே தமிழ்ப்புத்தாண்டாக மீண்டும் அதிகாரபூர்வமாக அறிவிக்க வேண்டும் என பல கோடி தமிழர்கள் விரும்பினர்.

அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் மக்களின் மனம் விரும்பும் மக்கள் அரசாக செயற்படும் இவ்வரசு சித்திரை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டு என மாற்றி அறிவித்தது.

இப்புத்தாண்டில் அனைவரது வாழ்விலும் மகிழ்ச்சியும் இன்பமும் பெருக வேண்டும். எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும். தமிழர் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்று வாழ்த்தி உலகெங்கும் வாழும் தமிழ் பெருமக்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை எனது உளமார்ந்த தமிழ்ப்புத்தாண்டு நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கின்றேன் என தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். (அ-2)




# தென்கொரியாவில் தேர்தல்; ஆளும் புதிய முன்னணிக்கு 165 இடங்கள்

தென்கொரியாவில் நேற்று முன்தினம் 300 தொகுதிகளுக்கான பாராளுமன்ற தேர்தல் நடந்தது. தென்கொரிய பாராளுமன்றத்தில் மொத்தமுள்ள 300 இடங்களில் ஆளும் புதிய முன்னணி கட்சிக்கு 165 இடங்களும் எதிர்க்கட்சியான ஐக்கிய ஜனநாயக கட்சிக்கு 89 இடங்களும் உள்ளன.

300 இடங்களுக்கான பாராளுமன்ற தேர்தல் அமைதியாக நடந்தது. தேர்தல் முடிவு கருத்துக்கணிப்புக்களுக்கு தடை செய்யப்பட்டுள்ளதால் எந்த கட்சி ஆட்சியைப் பிடிக்கும் என்பது தெரியவில்லை.


எதிர்வரும் டிசெம்பர் மாதம் தென்கொரிய ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே இந்த பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் ஜனாதிபதி தேர்தலிலும் எதிரொலிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஜனாதிபதி லீ மியூங், இந்த தேர்தலில் வெற்றி பெற அனைத்து வித முயற்சிகளும் மேற்கொண்டுள்ளார். (அ-2)



மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் கிருஷ்ணாவை ஐரோப்பிய வெளியுறவுத்துறை அமைச்சர் மிலன் ரோசன் டில்லியில் சந்தித்ததைப் படத்தில் காணலாம்.

# நிலநடுக்க பீதி இருந்தாலும் கூடங்குள செயற்பாட்டில் மாற்றம் எதுவுமில்லை

## நிலைய இயக்குநர் தெரிவிப்பு



நாடு முழுவதும் நிலநடுக்க பீதி இருந்தாலும் கூடங்குளத்தில் உள்ள அணு உலை செயற்பாட்டில் எவ்வித தடையும் இல்லை என்றும் பணிகள் வழக்கம் போல் நடைபெற்றன என்றும் கூடங்குளம் நிலைய இயக்குனர் காசிநாத் பாலாஜி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

எங்களுக்கு இந்தோனேசியா நிலநடுக்கம் மற்றும் இந்தியா அளவிலான நில அதிர்வு, சுனாமி ஆகியன குறித்தும் எங்களுக்கு தகவல் வந்தது.

ஆனால் நாங்கள் எப்போதும் வழக்கமாக அறிவிக்கப்படும் எச்சரிக்கை அலாரத்துடன் பணிகள் தொடர்ந்து நடந்தது. இதில் எவ்வித இடைநிறுத்தமும் இல்லை. குறிப்பாக சுனாமி வந்தாலும் கூடங்குளத்தை பாதிக்காது. காரணம் கடல் மட்டத்தில் இருந்து இந்த நிலையம் 7.5 மீற்றர் உயரத்தில் உள்ளது.

இலங்கையானது கன்னியாகுமாரி மாவட்டத்தில் இருந்து மிக அருகாமையில் இருப்பதால் எங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என அந்த அரசு சமீபத்தில் தெரிவித்திருந்தது.

இலங்கை அரசின் அச்சம் தேவையற்றது. உலகிலேயே இல்லாத அளவிற்கு இந்த அணு மின்நிலையம் முழு பாதுகாப்புடன் அமைக்கப்பட்டுள்ளது.

உறுதியாக சொல்கிறேன் பாதிப்பு என்பதற்கு இடமில்லை. இலங்கை அர சின் எல்லைக்கு அப்பால் உள்ள இது குறித்துக் கவலைப்பட வேண்டாம். சர்வதேச சட்ட விதிமுறைகளின்படியே இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது என்றார். அணு பாதிப்பு தொடர்பான மசோதாவை சமீபத்தில் பாராளுமன்றில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றியுள்ளோம்.

எல்லை தாண்டி உருவாகும் பாதிப்பிற்கும் இழப்பீடு தொடர்பான அம்சங்களும் இந்த சட்டத்தில் இடம்பெற்றுள்ளன என்றார். (அ-2)

# சிறைக்கைதிகள் விருவிப்பு

பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 34 கைதிகள் உடனடியாக விடுவிக்கப்பட்டுள்ளனர். பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டிருந்த 34 கைதிகளில் 26 பேர் மீனவர்கள் மற்றும் மீதமுள்ள எட்டு பேர் எல்லை வழியாக சட்ட விரோதமாக பாகிஸ்தான் சென்றவர்களாவர். இருநாடுகளிடையே மீனவர்களை பரிமாறும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இவர்கள் விடுவிக்கப்படவுள்ளனர். கடந்த 2008 ஆம் ஆண்டு மும்பையில் ஏற்பட்ட தீவிரவாத சம்பவத்தையடுத்து கைது செய்யப்பட்ட இந்தியர்கள் வெகு நாட்களாக சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். கைது செய்யப்பட்ட மீனவர்களில் பெரும்பாலானோருக்கு எழுதவும், படிக்கவும் தெரியாதவர்களாக இருந்துள்ளனர். தற்போது விடுதலை செய்யப்பட்டவர்கள் அனைவரும் இன்றைய தினம் எல்லைப் பகுதியான வாகாவை வந்தடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)

# உலக வங்கித் தலைவர் தேர்வு எதிர்வரும் 16 இல்

உலக வங்கியின் 12 ஆவது தலைவர்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்வு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதில் அமெரிக்க வேட்பாளர் ஜிம் யாங் கிம் புதிய தலைவராக தேர்வு செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவருக்கு அடுத்த இடத்தில் நைஜீரிய நிதியமைச்சர் கோஜி ஒகன்கோ இவேலா உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அமெரிக்க வேட்பாளரையே உலக வங்கி தலைவராக தேர்வு செய்ய வேண்டும் என அமெரிக்க அரசு வலியுறுத்தியுள்ளது. (அ-2)

# சிகரெட் தீயினால் காட்டுத்தீ உருவாகியது

(மொஸ்கோ)

சிகரெட்டை அணைக்காமல் தூக்கி எறிந்ததால் காட்டுத்தீ பரவ காரணமானவருக்கு ரஷ்ய நீதிமன்றம் 19.6 மில்லியன் டொலர் அபராதம் விதித்துள்ளது. ரஷ்யாவைச் சேர்ந்த அலெக்சாண்டர் மால்கோ (வயது-21) கடந்த 2009 ஆம் ஆண்டு தான் புகைத்த சிகரெட்டை அணைக்காமல் தூக்கி எறிந்தார்.

இந்த சிகரெட் துண்டு காய்ந்த புல் மீது விழுந்து தீப்பற்றியது. தீ கொழுந்து விட்டு எரிந்த போதும் அதை அணைக்க மால்கோ எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. இதனால் இரண்டு ஹெக்டேயர் அளவுக்கு காட்டுத்தீ பரவி அரிய தாவரங்கள் நாசமாயின.

இது தொடர்பாக மால்கோ மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. 19.6 மில்லியன் டொலர் மதிப்புக்கு சேதம் ஏற்பட்டதால் அதே அளவு தொகை மால்கோவுக்கு நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது. அது மட்டுமல்லாது மால்கோ ஓராண்டுக்கு சமூக பணியாற்ற வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-2)

# சிரிய மோதலை நிறுத்துமாறு அனான் மீண்டும் வலியுறுத்து

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்துக்கான மோதல்கள் வலுத்து வந்தன. ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்த நிலையில் கிளர்ச்சியை முடிவுக்கு கொண்டு வர ஐ.நா. முன்னாள் தலைமச் செயலாளர் கோபி அனான் முயற்சிமேற்கொண்டார். ஆனால் அதை மீறுகின்ற வகையில் இராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்துகின்றது.

இந்நிலையில் இரு தரப்பினரும் மோதல்களை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று கோபி அனான் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில், இனியும் காலத்தை வீணடிக்கக்கூடாது. சிரியா அதலபாதாளத்துக்குள் தள்ளப்படுவதற்கு முன்னதாக இரத்தம் சிந்துதலை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் எனகூறியுள்ளார்.

சிரியாவில் மோதல் கள் முடிவுக்கு வர ஐ.நா. பாதுகாப்பு குழு உதவ வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-2)

# நிலநடுக்கம் குறித்து ஆராய ஜப்பானிய விஞ்ஞானிகள் தரைக்குக் கீழ் ஆய்வு

உலகிலேயே முதன்முறையாக ஜப்பான் விஞ்ஞானிகள் தரைக்கு கீழே துளையிட்டு பூமியின் மேல் ட்டினை ஆய்வு செய்து வருகின்றனர். இவர்கள் தரைக்கு கீழே ஏழு கிலோ மீற்றர் துளையிட்டு பூமியின் மேல் ஓட்டினை ஆய்வு செய்து வருகின்றனர்.

இதன்முடிவில் நிலநடுக்கத்தின் போது ஏற்படும் விளைவுகள் குறித்து அறியப்படும்.

இந்த ஆய்வில் உலகம் முழுவதும் நிலநடுக்கத்தின் போது ஏற்படும் விளைவுகள் அறியப்படும்.சென்னை போன்ற நிலநடுக்கப்பகுதிக்கு அருகிலும் கடற்கரையிலும் அமைந்துள்ள நகரங்களில் நிலநடுக்கங்கள் ஏற்படுத்தும் விளைவுகள் பற்றி ஆய்வு செய்யப்படும்.



இதுவரை உலகில் தரைக்கு கீழே அதிக பட்சமாக 2.1 கி.மீற்றர் வரை தான் துளையிடப்பட்டுள்ளது.

இதற்கும் மேல் தோண்டினால் புவியிருந்து பாறைக் குழம்புகள் வெளியாக வாய்ப்புள்ளது. எண்ணெய் அல்லது எரிவாயு வெளியாக வாய்ப்புள்ளதால் இந்த ஆய்வு எளிதான காரியம் அல்ல.

இந்த ஆய்வின் போது தரைக்கடியில் உணர்விகள் வைக்கப்படுவதால் எதிர்காலத்தில்பூகம்பங்களின்போக்கு இப்படித்தான் இருக்கும் என்று தெரியவரும். இந்த ஒரு ஆய்விலேயே உலகம் முழுமைக்கும் ஒரு பொதுவான கருத்து உருவாக்கப்படும். (அ-2)

# இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி அபாயங்களை எதிர்கொள்ள வியூகம்

## உயர் அதிகாரி தகவல்

கூடங்குளம் அணுஉலை தொடர்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் விரைவில் பேச்சுவார்தத்தை இடம் பெறவுள்ளதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

கூடங்குளம் அணுஉலையில் ஏற்படக்கூடிய பாதிப்புக்கு முகம் கொடுப்பது தொடர்பாகவும் அதற்கான பாதுகாப்பு வழிகள் குறித்தும் இரு நாடுகளும் பேச்சு நடத்த திட்டமிட்டுள்ளன.

தமிழ் நாட்டின் கூடங்குளத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அணுஉலை தொடர்பாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க அந்த நாடு சம்பந்தப்பட்டதரப்பினருக்கு எழுத்து மூலம் ஏற்கனவே அறிவித்துள்ளார்.

கூடங்குளம் அணுஉலை இலங்கைக்கு அண்மையில் அமைந்துள்ளதால் இலங்கைக்கும் தாக்கம் ஏற்படும் என நம்பப்படுகிறது.

எனவே, அத்தகைய நிலையில் இரு நாடுகளும் இணைந்து முன்னெடுக்க வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடு குறித்து இரு தரப்பினரும் பேச திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்குமிடையிலான நேரடிப் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடைபெற இருப்பதாக இரு நாட்டு தூதுவர்களும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் இருந்து ஏதும் அணுக்கசிவு ஏற்பட்டால் அது குறித்து முன்கூட்டியே அறிவதற்காக இந்தியாவை நோக்கியதாக 5 முன்னெச்சரிக்கை கோபுரங்களை அமைக்க இலங்கை அணுசக்தி அதிகார சபை திட்டமிட்டுள்ளது. (அ-2)


## COLOMBO PEST CONTROL SERVICE

20 வருட அனுபவத்துடன் தற்பொழுது யாழிலும்...




புதியதாக நிர்மானிக்கப்படும் கட்டடங்களுக்கும், நிலக்கறையானால் பாதிக்கப்பட்ட கட்டடங்கள், இல்லங்கள் என்பவற்றுக்கும் 10 வருட உத்தரவாதத்தோடு இலவச பரிசோதனையுடன் பாதுகாப்பு அளிக்கின்றோம்.

யாழில் 527, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி -: 0213207007
0777666684

(8164)


# இனமுறுகல் ஏற்பட இடமளிக்கமாட்டேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு

இனங்களுக்கு இடையில் முறுகல் நிலைமை ஏற்பட இடமளிக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கு இடையில் முறுகல் நிலைமை ஏற்பட சந்தர்ப்பம் அளிக்கப்படமாட்டாது என அவர் தெரிவித்துள்ளார்.

சில தரப்பினர் பிரிவினை வாதத்தை தூண்டும் வகையில் செயற்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார். நுவரெலியாவில் பள்ளிவாசல் ஒன்றை திறந்து வைத்து உரையாற்றிய போது ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

சிங்கள, முஸ்லிம் சமூகத்திற்கு இடையில் வரலாற்றுக் காலம் முதல் நெருங்கிய பிணைப்பு காணப்படுவதாகவும் நாசகார சக்திகளின் சதித் திட்டங்களுக்கு துணை போகக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சார்க் நாடுகளின் சுகாதார மாநாடு நேற்று மாலைதீவில்

சார்க் பிராந்திய நாடுகளின் சுகாதார அமைச்சர்களது மாநாடு நேற்றைய தினம் மாலைதீவில் ஆரம்பமாகியுள்ளது.

இம்மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இலங்கை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் மாலைதீவுக்கு பயணமானார். இம்மாநாட்டின் போது தொற்று நோய்கள் மற்றும் நீர்வெறுப்பு நோய் கட்டுப்பாடு தொடர்பாக விசேட கவனம் செலுத்தப் படவுள்ளது.

நீர்வெறுப்பு நோயை கட்டுப்படுத்துவதில் இலங்கை கடந்த காலத்தில் பெற்ற வெற்றிகர முன்னேற்றங்கள் சார்க் பிராந்திய நாடுகளில் நீர்வெறுப்பு நோயை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதில் நல்ல முன்னுதாரணமாக விளங்குகிறது.

அந்த வகையில் நீர்வெறுப்பு நோய் கட்டுப்பாடு தொடர்பாக பிராந்திய யோசனைகளை அமைச்சர் இம்மாநாட்டில் முன்வைக்கவுள்ளார். (அ-2)

# கூட்டமைப்பை விமர்சிக்கும் தகுதி பியசேனவுக்கு இல்லை

## அரியநேத்திரன் எம்.பி. தெரிவிப்பு

சுயநலத்துடன் அரசாங்கத் தரப்புக்கு தாவி விட்டு தற்போது கூட்டமைப்பை விமர்சிக்கும் பியசேன முத லில் தமிழ்த்தேசியக் கூட்டணமப்பில் இருந்து விலகிய தாக முதலில் கூறட்டும் என அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பி.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாறை மாவட்ட மக்கள் தமிழ்க் கூட்டமைப்புக்கு கடந்த பொதுத் தேர்தலில் வாக்களித்ததற்கு காரணம் தமிழ் மக்களின் உரிமைக்கும் அரசியல் பலத்துக்கும் மட்டுமன்றி உணர்வு ரீதியாக சிந்தித்து வாக்களித்துள்ளனர்.

அம் மக்களுக்கு அபிவிருத்திக்கு அப்பால் தமது உரிமைகள் வென்றெடுக்கப்பட வேண்டும் என்ற நோக் கில் வாக்களித்துள்ள நிலையில் அவர்களின் வாக்குகளை பெற்று சுயநலத்துடன் அரசாங்குப் பக்கம் தாவி விட்டு கூட்டமைப்பை பியசேன எம்.பி.விமர்ச்சிப்பது ஏற்றுக் கொள்ள முடியாது.

முதலில் தனக்கு தமிழ் மக்கள் ஏன் வாக்களித்துள்ள னர் என்பதை கேட்டுப் பார்க்கட்டும். இதன் பின் அவர்க ளின் வேண்டுகோளின் பேரில் பதவியை இராஜினாமா செய்யட்டும்.

கூட்டமைப்பை விழர்சிக்கும் முன்னர் தமிழரசு கட்சி யின் மூலம் பாராளுமன்ற உறுப்பினராகிய பியசேன முதலில் தான் கூட்டமைப்பில் இருந்து விலகியுள்ளதாக கூறட்டும் எனவும் சவால் விடுத்துள்ளார். (அ-2)


## மரண அறிவித்தல்



### செல்வி சுரோமி ஆறுமுகநாதன்

(முன்னாள் ஆசிரியர் நெடுந்தீவு மகா வித்தியாலயம், பொலிகண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை)

அல்வாய் மேற்கு மந்திலா வத்தையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சுரோமி ஆறுமுகநாதன் அவர்கள் 11.04.2012 புதன்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லையா ஆறுமுகநாதன் மற்றும் நஞ்சினி தம்பதியரின் ஏக புத்திரியும், ரூபகாந்தன் (கனடா), பகிரதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுமிதாவின் (கனடா), மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமைக் கிரிகைகள் 15.04.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்வாய் மேற்கு,
அல்வாய்.

(சி/6349)

தகவல்:-
ஆ.பகீரதன் (சகோதரன்).



வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்,
அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

Maximum Durability... Maximum Range

TATA

டாட்டா நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட
உதிரிப்பாக விற்பனைநிலையம்



TATA GENUINE PARTS
Let's go beyond limits

(சி/6350)

குறிப்பு:- எமது கிளை ஸ்தாபனத்தில் சகல உதிரிப்பாகங்களையும் எந்நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.(24Hours)

இல:147, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே:-021 222 9482

தர்ணிகா மோட்டோர்ஸ்

கிளை A9 வீதி கரடிப்போக்கு,
கிளிநொச்சி.
(கொமர்ஷல் வங்கிக்கு அருகாமையில்)

T.P-Fax:-021 228 0056
0777448475

# ஈழத்தமிழர்களுக்காக தமிழக தமிழ் குரல்கள் ஓங்கி ஒலிக்க வேண்டும்

## சிறிதரன் எம்.பி. உரை

(மதுரை)

தமிழர்கள் பகுதியில் சிங்களவர் குடியேற்றம் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் இந்தியாவின் மதுரையில் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் இன்றைய நிலை என்ற தலைப்பில் மதுரை வழக்குரைஞர் சங்கத்தில் கடந்த புதன்கிழமை உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் நடத்திய போராட்டத்தில் 3 இலட்சம் மக்களும் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளும் கொல்லப்பட்டுள்ளனர். முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட பகுதிகளில் நிகழ்ந்த கடைசிக் கட்ட போரில் மட்டும் 1.40 இலட்சம் பேர் கொல்லப்பட்டனர். போர் முடிந்து 3 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் தமிழ் மக்கள் இன்னும் முள்வேலிச் சிறைக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழர் பகுதியில் சிங்கள்வர் குடியேற்றம் செய்வது முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இராணுவ முகாம்களை அமைத்து தமிழ் மக்களின் சுதந்திரமான நடவடிக்கைகளுக்கு பெரும் இடையூறு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இரண்டாம் மூன்றாம் தரக் குடிமக்களாக தமிழர்கள் நடத்தப்படுகின்றனர்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகள் தான் தமிழர்கள் அதிகம் வசிக்கும் பகுதியாக இருந்தன. அதற்கான அடையாளங்களையே அழிக்கும் நடவடிக்கையில் இலங்கை அரசு ஈடுபட்டிருக்கிறது.

ஜெனீவா தீர்மானம் இலங்கை தமிழ் மக்களுக்கு புதிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கை தமிழர்களுக்கு சுதந்திரம், சம உரிமை கிடைக்கும் என்றால் அது தமிழகத்தில் இருந்து கொடுக்கப்படும் அழுத்தத்தின் காரணமாகவே வழங்கப்படும் என்ற நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

தமிழக மக்களின் ஒட்டுமொத்த குரலும் ஓங்கி ஒலித்ததன் காரணமாகவே ஜெனீவா தீர்மானத்திற்கு இந்திய அரசு ஆதரவு தெரிவித்திருக்கிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு கொள்கை ரீதியான மாற்றம் ஏற்பட்டிருப்பதை காண முடிகிறது.

தமிழக மக்களின் ஒட்டுமொத்த குரலும் ஓங்கி ஒலித்ததன் காரணமாகவே ஜெனீவா தீர்மானத்துக்கு இந்திய அரசு ஆதரவு தெரிவித்திருக்கிறது.

இலங்கை தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு கொள்கை ரீதியான மாற்றம் ஏற்பட்டிருப்பதை காண முடிகிறது.

இருந்த போதும் தமிழர் பகுதியில் இருந்து இராணுவத்தை முழுமையாக வெளியேற்றுவது இலங்கை தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு, கொல்லப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க பொது விசாரணை என்பதெல்லாம் எதிர்பார்ப்பாக இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## பிரான்ஸ் பல்கலைக்கழகத்தில் சனல் 4 ஆவணப்படம்

பிரான்சின் எல்லைக்குட்பட்ட இடத்தில் அமைந்துள்ள பல்கலைக்கழகத்தில் சனல்4 ஆவணப்படம் திரையிடப்பட்டிருந்தது. இதனைப் பிரான்ஸ் தமிழ் இளையோர் அமைப்பு மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இத்திரைப்படத்தை நூறு வரையிலான பல்கலைக்கழக மாணவர்கள் பார்த்திருந்தனர். (ந-8-11)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தானத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ)

# அரசாங்கம் சவால்களை எதிர்கொள்ளத் தயார்

## அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க

(கொழும்பு)

ஜே.வி.பியோ அல்லது புதிதாக உருவாக்கப்பட்ட முன்னணி சோஷலிச கட்சியோ அரசாங்கத்திற்கு சவாலாக அமையாது என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னணி சோஷலிச கட்சியை அரசாங்கம் கண்டு கொள்ளவே இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில தரப்பினர் புதிய கட்சி உருவாக்கத்திற்கு பாரியளவில் பிரசாரம் கொடுத்த போதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இவ்வாறான கட்சிகளினால் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். புதிய கட்சியும் ஜே.வி.பி.கட்சியும் வங்குரோத்து அடைந்துள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)



யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி ஒருதொகுதி சஞ்சிகைப் பிரதிகளை அண்மையில் வழங்கியுள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம நூலகர் திருமதி இமெல்டா கருணாகரனிடம் இதனை ஆளுநர் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# கடத்தல் சம்பவம் தொடர்பில் எவ்வித தெளிவும் கிடையாது

## ஜே.வி.பியின் பிரசார செயலாளர் கூறுகிறார்

(கொழும்பு)

கடத்தல் சம்பவம் தொடர்பில் எவ்வித தெளிவும் கிடையாது என ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

கடத்தல் சம்பவம் தொடர்பில் முன்னுக்குப் பின் முரணான தகவல்களே இதுவரையிலும் வெளியிடப்பட்டு வருவதாக ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடத்தல் சம்பவம் தொடர்பில் ஒவ்வொரு தரப்பினரும் வெளியிட்ட கருத்துக்கள் மாறுபட்டவை என அவர் குறிப்பிட்டுள்ளார். ஊடகங்களிலும் மாறுபட்ட தகவல்களே வெளியிடப்பட்டிருந்தன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடத்தல் சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிடுவதற்கு முன்னர் தெளிவான ஆதாரங்கள் பற்றி ஆராய வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

குமார் குணரட்னம் என்ற பெயரில் தமது கட்சியின் மத்திய செயற்குழுவிலோ அல்லது அரசியல் குழுவிலோ எவரும் அங்கம் வகிக்கவில்லை என அவர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். (அ-2)

# பல்லில் எக்ஸ்ரே எடுத்தால் மூளையில் கட்டி ஏற்படும்

## ஆய்வில் தகவல்

(பாஸ்டன்)

அமெரிக்காவில் உள்ள பாஸ்டனை சேர்ந்த பிரபல நரம்பியல் டாக்டர் எலிசபெத் கிளே தலையில் எடுக்கப்படும் எக்ஸ்ரேயால் பாதிப்பு ஏற்படுமா? என்று ஆய்வு நடத்தி இருக்கிறார்.

அதில் பல் நோய்க்காக எடுக்கப்படும் எகஸ்ரேயால் மூளையில் கட்டி ஏற்பட வாய்ப்பு உள்ளது தெரிய வந்துள்ளது.

மூளையில் கட்டி ஏற்பட்டுள்ள ஆயிரத்து 400 பேரிடம் அவர் ஆய்வு நடத்தியதில் பலருக்கு பல் நோய்க்கான எக்ஸ்ரே எடுக்கப்பட்டு இருப்பது தெரிய வந்தது.

அது மட்டும் அல்ல பல் நோய்க்கு எடுக்கும் எக்ஸ்ரேயால் மூளையின் நரம்புகள் பாதிப்பதாகவும் டாக்டர் கூறியுள்ளார். (அ-2)


# சேவை நலன் பாராட்டு



தியாகராசா சிவபாலன் இ.அ.சே. 2.1
சேவைக்காலம்=23 வருடம்=தீவகம்

நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட வித்தியாலயத்தில் அதிபராக இருந்து 02.01.2012 இல் இளைப்பாறிச் சென்ற திரு. தியாகராசா சிவபாலன் அவர்கள் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து மேலும் கல்விப் பணி தொடர வாழ்த்துகின்றோம்.

கோட்டக்கல்விப் பணிப்பாளர்
அதிபர்கள்
வேலணைக் கல்விக் கோட்டம், வேலணை.

(8159)

நம்மிடமுள்ள குறைகளை நீக்கி கொள்வதே நமக்கு ஏற்படக்கூடிய பெரிய அதிர்ஷ்டமாகும்.
- கதே

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இலங்கைவரும் இந்தியக் குழுவில் தி.மு.கவின் இளங்கோவன் நியமனம்

## கட்சிக்குள் அதிருப்தி

(சென்னை)

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள இந்திய அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் தி.மு.கவின் சார்பில் டி.கே.எஸ்.இளங்கோவன் நியமிக்கப்பட்டமை குறித்து அக் கட்சிக்குள் அதிருப்தி காணப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடந்த கூட்டத்தொடரில் கொண்டுவரப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்துக்கு ஆதரவாக இந்தியா வாக்களித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து இந்திய மக்களவையின் எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு எதிர்வரும் 16ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.


இக்குழுவில் காங்கிரஸ் கட்சி பாரதிய ஜனதா கட்சி, தி.மு.க., அதிமுக மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெறுவார்கள் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள இக்குழுவின் நிகழ்ச்சி நிரலை பார்வையிட்ட தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இக்குழுவில் அதிமுக இடம் பெறாது என அறிவித்திருந்தார்.

இந்நிலையில் இக்குழுவில் தி.மு.கவின் சார்பில் டி.கே.எஸ். இளங்கோவன் இடம்பெற்றிருப்பது அக்கட்சியில் சல சலப்பை ஏற்படுத்தி உள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன.

இலங்கை விவகாரம் தொடர்பில் இந்திய மக்களவையில் குரல் கொடுத்து வருபவர்களான டி.ஆர். பாலு, திருச்சி சிவா ஆகியோரில் ஒருவரை இக்குழுவில் நியமித்திருக்க வேண்டும் எனவும் மாறாக இளங்கோவனை நியமித்திருப்பது சிலரை திருப்திப் படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என தி.மு.கவுக்குள் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு ள்ளது.

தி.மு.கவின் மூத்த உறுப் பினர்கள் பலரைப் புறக்கணித்து 2002 ஆம் ஆண்டு அக்கட்சியில் இணைந்து கொண்ட இளங்கோவனுக்கு முக்கியத்துவம் அளித்திருப்பது கட்சியின்



மூத்த தலைவர்களின் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக கூறப்படுகின்றது.

கனிமொழியின் பரிந்துரையின் பிரகாரமே இளங்கோவன் இக்குழுவில் இடம்பெற்றுள்ளதாக தி.மு.க.வட்டாரங்களில் இருந்து தெரிய வருகின்ற போதிலும் அதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட போரின்பின்னர் அங்கு விஜயம் செய்திருந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தொடர்பில் பலவகைப் பட்ட விமர்சனங்கள் முன்வைக்கப் பட்டிருந்தமை தெரிந்ததே. (எ-11)

## பிறக்கும் தமிழ்ப் புத்தாண்டில் பிரகடனம் செய்து கொள்வோம்

தமிழ்- சிங்கள புத்தாண்டு இன்று பிறக்கின்றது. பிறக்கின்ற புத்தாண்டு சிறப்பு மிக்கதாக அமைய வேண்டும் என்பது அனைவரதும் விருப்பம்.

எனினும் இந்த விருப்பம் முழுமைபெறாமல் போவதன் காரணம் யாது என்பதை ஒரு கணம் சிந்தித்தாக வேண்டும்.

அந்த சிந்தனை தூய்மையானதாக - பலமானதாக- பக்கம் சாராததாக இருக்குமாயின் வெற்றிகளுக்கும் தோல்விக்கும் நாங்களே காரணம் என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

ஒருகாலத்தில் யாழ்ப்பாணத்தின் கலாசாரம் பண்பாடு எத்துணை பெருமைமிக்கதாக இருந்தது என்பதை நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆனால் அந்த பெருமைக்கு இப்போது என்ன நடந்தாயிற்று?

இளைஞர்களுக்கும் பெரியவர்களுக்குமான இடைவினைத் தொடர்பு தற்போது அறவே இல்லை. இதன் காரணமாக இளைஞர்கள் தங்கள் வயதுக் கோளாறின் வழி நடந்து கொள்கிறார்கள். அதன் முடிவு கலாசாரச் சீரழிவுகள், மன உடைவுகள், தற்கொலை முயற்சிகள், இளம் பெண்களை கடத்துதல், பாலியல் வன்மங்கள், பழிதீர்ப்புகள் என வெறுப்புக்குரிய செயல்கள் சன்னதம் கொண்டுள்ளன.

இத்தகைய மோசமான பிடுங்கல்களை மனங்களில் தாங்கிக்கொண்டு புத்தாண்டு சிறப்புமிக்கதாக அமைய வேண்டுமென நினைப்பதனால்- வாழ்த்துவதனால்- ஆசிப்பதால் எதுவும் நடந்துவிட மாட்டாது.

முதலில் எங்களிடம் திருத்தம் ஏற்பட வேண்டும். அந்த திருத்தத்தை செயலில் காட்ட வேண்டும். கடந்த சில வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்து மண்ணின் கலாசாரம், பண்பாடு இளைஞர்களால் கட்டிக் காக்கப்பட்டது.

அதேவேளை இளைஞர்களால் கட்டிக்காக்கப்பட்ட கலாசாரத்தை இன்றைய இளைஞர்கள் சிதைத்து விடுகின்றனர் எனில், அதற்கான காரணம் என்ன? பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடுகின்றனர்.

பாடசாலை நிர்வாகங்கள் மாணவர்களுக்குப் பயந்து பேசாமல் இருக்கின்றன. பல்கலைக்கழக மாணவர்கள் எதுசெய்தாலும் அது சரி என்ற நினைப்பில் சமூகம் மௌனித்து இருக்கின்றது.

இதுவே எங்கள் சமகால போக்கு. நிலைமை இப்படியாக இருக்கையில், எத்தனை ஆண்டுகள் புதுக்கப் புதுக்க பிறந்தாலும் எங்கள் இனத்தைத் தூக்கி நிமிர்த்த முடியாது.

"எனவே நாங்களே திருந்துவோம் என இன்று பிறக்கின்ற புத்தாண்டில் பிரகடனம் செய்வோம்.

பிரகடனம் நிறைவேற்றப்பட்டால் எங்கள் இனத்தின் பெருமை வான் உயர்ந்த புகழை பெற்றுக்கொள்ளும்; இது உறுதி.

## இரத்ததான நிகழ்வு

(கொக்குவில்)

கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இரத்த தான நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு பொற்பதி வீதியில் உள்ள பொற்பதி அறிவாலயத்தில் நடைபெறும்.

8 ஆவது ஆண்டாக நடைபெறும் இவ் இரத்ததான நிகழ்வில் குருதிக் கொடையாளர்கள் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## சித்திரைப்புத்தாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவையின் அனுசரணையுடன் கோண்டாவில் வடமேற்கு, தென்மேற்கு, மத்தி மேற்கு, மத்தி கிழக்கு, வடகிழக்கு, தென் கிழக்கு ஆகிய 6 கிராம அலுவலர் பிரிவுகளும் இணைந்து நடத்தும் சித்திரை புத்தாண்டு விழா 2012 நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர் திருமதி வ. சோமசூரியசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் ப. செந்தில்நந்தனன், கௌரவ விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலன், யாழ். கோண்டாவில் இந்து மகா வித்தியாலய அதிபர் சு. சண்முககுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (அ-9)




மனிதர்கள் வாழ்வியலில் மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற நான்கு உருவங்கள் தொடர்புற்றுள்ளன. முதலில் மனிதன் மாதாவைக் கண்ணால் காண்கின்றான். தன்னைக் கருவாகத் தாங்கி ஈன்றெடுத்த தாயே மாதா. அந்தத் தாயே பிதாவை அவனுக்கு அறிமுகம் செய்து வைக்கிறாள். பிதாவான தந்தை குருவிடம் அவனை ஒப்படைத்து அறிவு பெறச் செய்கிறான். குரு அந்த மனிதனை தெய்வத்திடம் வழிபாட்டின்மூலம் ஆற்றுப்படுத்துகிறார். இந்த மனித வாழ்வியலின் படிமுறை வளர்ச்சி எல்லோருக்கும் இயற்கையானதே. தாய், தந்தை, குரு மூவரையும் மனிதன் நேரிலே காணலாம். இணைந்து செயற்படலாம். ஆனால் தெய்வத்தை அறியலாம். மனதால் உணரலாம். ஆனால் தெய்வத்துடன் இணைவது என்பது எளிதல்ல.

மணிவாசகர் வாழ்வியலில் இப்படி முறை வளர்ச்சி ஏற்பட்டதை அவர் நன்கு உணர்ந்துள்ளார். தன்னுடைய வாழ்க்கையில் இறைவனே குருவாக வந்து ஆட்கொண்ட அனுபவத்தைப் பெற்றவர். குருந்தமர நிழலிலே குருவாய் வந்த கோலத்தை அவரால் மறக்க முடியவில்லை. உலக இன்பங்களை விட மேலான இன்பம் ஒன்று வழிபாட்டால் ஏற்படும் என்ற உண்மையை உணர்ந்து கொண்டார். மீண்டும் அந்தக்குருவடிவாய் வந்த இறைவனைக் காண விரும்பி வேண்டுதல் செய்கிறார். அவருடைய வாய்ச்சொற்கள் பாடலாக வெளிவரும்போது பயன்பட்ட சொற்கள் இதனை நன்கு உணர்த்துகின்றன. ஒருவனே, குருவனே, கோமளக் கொழுந்தே என இறைவனை அழைக்கின்றார்.

ஒருவனே என்பது தனக்கு யாரும் நிகரில்லாத தந்தையே என்பதாகும். உலகியல் நிலையில் அவர் அறிந்த தந்தையைவிட இறைவன் எல்லோருக்கும் தந்தையாக விளங்குகின்ற ஒரேயொரு ஒப்பற்ற தந்தையாவார். அதனால் ஒப்பில் அப்பனே என இறைவனை அழைத்து வணங்குகிறார். உலகிய தந்தை உடலை மட்டுமே பாதுகாப்பார். ஆனால் இறைவனோ எவராலும் அளித்தற்கரிய வீடுபேற்றினை அளிக்கும் தந்தையாவார். அதனால் ஒப்பில் அப்பனாக விளங்குகிறார்.

குருவான இறைவன் தன்னை வருகவென்று அழைத்து அவன் பக்கலில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என விரும்புகிறார். பந்தபாசம் என்னும் பிறவித் துன்பத்திலிருந்து இழுத்து விடுவிக்க இறைவனால்தான் முடியும். வருக என்று நின்பால் வாங்கிட வேண்டும் என்ற பாடலின் தொடர் இப்பொருளையே தெளிவாய் உணர்த்தி நிற்கிறது. இறைவன் பக்குவமடைந்த மக்களுக்கு மட்டுமன்றி தேவர்களுக்கும் குருவானவன். மணிவாசகருடைய உள்ளத்திலே இறைவனைப் பிரிந்ததால் ஏற்பட்ட தனிமையும் பிரிவுத் துயருமே மேலோங்கி நின்றமையால் அதனை ஒழிப்பதற்குவழிபாடுசெய்கிறார். தருகநின் பாதம் என்று வேண்டுதல் செய்கிறார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இறைவனுடைய திருவடி பற்றிய நினைப்பே எல்லாத் துன்பங்களையும் போக்கவல்லது. மேலும் போற்றி என்ற சொல் மணிவாசகரால் பலமுறை பாடல்களிலே பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல் நாவினால் உச்சரிக்கப்படும் போது இறைவன் திருவுருவை அகத்திலே காணலாம். ஐம்புலன்களையும் ஒருநிலைப்படுத்தி நாம் இறை சிந்தனையோடு செயற்பட்டால் எல்லாம் இனிதே நிறைவேறும்.

ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி யெங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருக நின்பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே

# புத்தாண்டு பாரம்பரியங்களுக்கு மதிப்பளித்து நட்புறவு ஐக்கியத்துக்காக பாடுபடுவோம்

## புத்தாண்டு வாழ்த்துச்செய்தியில் ஜனாதிபதி



(கொழும்பு)

பிறந்திருக்கும் சிங்கள, தமிழ்ப்புத்தாண்டு எல்லோருக்கும் சமாதானம், மகிழ்ச்சி மற்றும் சுபீட்சம் நிறைந்த புத்தாண்டாக அமையட்டும்.

புத்தாண்டு பண்டிகை மனிதர்களுக்கும் இயற்கைக்குமிடையே குறிப்பிடத்தக்க பிணைப்பை ஏற்படுத்தும் ஒரு மிகப் பெரும் தேசிய விழாவாகும். புலர்ந்திருக்கும் இப் புத்தாண்டு எமது உள்ளங்களுக்கு புதிய சிந்தனைகளையும் உணர்வுகளையும் கொண்டு வருகின்றது.

அது எமது வாழ்க்கையையும் சமூகத்தனையும் புதிய உறுதியுடனும் துணிவுடனும் பார்ப்பதற்கான வழியைக் காட்டுகின்றது. நட்புறவு மற்றும் ஐக்கியத்தினூடாக இப்புத்தாண்டு மேலும் அர்த்தம் நிறைந்ததாக மாறுகின்றது. எனவே இப்புத்தாண்டுக் கொண்டாட்டங்களின்போது எல்லோருக்கும் மத்தியில் நட்புறவையும் கூட்டுறவையும் கட்டியெழுப்ப எல்லாவகையிலும் முயற்சிப்பது அவசியமாகும்.

இப்புத்தாண்டுடன் இணைந்ததாகக் கடைப்பிடிக்கப்படும் பல்வேறு முக்கிய பாரம்பரியங்கள் குடும்பத்திற்கும் கிராமத்திற்குமிடையேயான ஐக்கியத்தையும் புரிந்துணர்வையும் மேலும் பலப்படுத்துகின்றது.

இந்த ஐக்கியம் தேசிய சுபீட்சத்திற்கான மிக முக்கிய ஊக்க சக்தியாக அமைகின்றது. நாடு சுபீட்சத்தை நோக்கி முன்னேறி வருகின்ற சூழ்நிலையில் எல்லோரினாலும் சுப நேரத்தில் கடைப்பிடிக்கப்படும் இந்தப் பாரம்பரியங்கள் ஒரு மிகப்பெரும் அருளாக அமையும். எனவே இப்புத்தாண்டின் பாரம் பரியங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக் குமாறு உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்புதுவருட காலத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கும் முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் ஏனைய கடமைகளில் ஈடுபட்டிருக்கும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியும் சுபீட்சமும் நிறைந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். (அ-2)

## மாதாந்த ஆய்வரங்கம்

அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பினால் மாறி வரும் பொருளாதார சூழலில் சமூகத்தின் பங்கு எனும் கருப்பொருளிலான மாதாந்த ஆய்வரங்கம் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மதியம் 12 மணிவரை இல 60, அரசடிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள சொண்ட் அலுவலகத்தில் நடைபெறும்.

இலங்கை மத்திய வங்கியின் வடமாகாண சிரேஷ்ட முகாமையாளர் ப.சிவதீபன் மேற்படி கருப்பொருள் தொடர்பாக விளக்கமளிக்கவுள்ளதாக அந்நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ-2)

## கிரிக்கெட் போட்டிகள்

(கரவெட்டி)

கரணவாய் சோளங்கன் விளையாட்டுக் கழகத்தின் வடமராட்சி உட்பட்ட 32 அணிகள் பங்கு பற்றும் அணிக்கு 12ஓவர் கொண்ட 11பேர் பங்குபற்றும் கிரிக்கெட் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் கரணவாய் மகா வித்தியாலய மைதானத் தில் நடைபெறவுள்ளது. (அ-3-24)

## சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் றோட்டறக்ட்கழகத்தின் சுருதி-06 சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு சுன்னாகம்- சபாபதிப்பிள்ளை வீதியிலுள்ள வாழ்வக மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக றோட்டறக்கழக Rtr.என். தேவரூபன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் றோட்டறக் கழக தலைவர் எஸ். சிவசங்கர், சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் றோட்டறக்கழகத்தின் பட்டயத் தலைவர் ஏ .ஜி.ஏ.ஜெயச்சந்திரா, கிருபாலேணர்ஸ் உரிமையாளர் ஏ.கிருபாகரன், கௌரவவிருந்தினராக முல்லைத்தீவு ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் வீ.சஞ்சீவ், வாழ்வகம் -தலைவர் ஏ.ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நூலின் முதற்பிரதியை சுன்னாகம் றோட்டக் கழகத்தின் பட்டயத் தலைவர் ஏ .ஜி ஏ.ஜெயச்சந்திராவும் இணைப்பிரதியைமுல்லைத்தீவு ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் வீ.சஞ்சீவ் ஆகியோரும் பெறுவர். (அ)

## கிளி.இ.போ.ச. ஊழியர்களுக்கு கொடுப்பனவில் குளறுபடிகள்

கிளிநொச்சி இலங்கை போக்குவரத்துச் சபையை சேர்ந்த ஊழியர்களுக்கு மாதாந்த ஊழியம் உரிய முறையில் வழங்கப்படுவதில்லை என விசனம் தெரிவித்துள்ளனர்.

இங்கு பணியாற்றுபவர்களில் 50 இற்கு மேற்பட்டவர்கள் வெளிமாவட்டத்தை சேர்ந்தவர்கள் ஆவர்.

இவர்களுக்கான மாசிமாதக் கொடுப்பனவு சில ஊழியர்களுக்கு முழுத் தொகையாகவும் சிலருக்கு அரைவாசியாகவும் வழங்கப்பட்டதுடன் சில ஊழியர்களுக்கு வழங்கப்படாமலும் உள்ளது.

இவ்விடயம் தொடர்பாக உயர் அதிகாரிகளிடம் முறையிட்டபோதும் உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை ஏமாற்றுப்பதிலையே அளிக்கின்றனர்.

எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-85)

## இறுவெட்டு வெளியீட்டு விழா

சைவப்புலவர் பொன். சுகந்தனால் எழுதப்பட்டு தென்னிந்திய முன்னணிப் பாடகர்களாலும் இசையமைப்பாளர்களினாலும் உருவாக்கம் பெற்ற பக்திப்பாடல் இறுவெட்டு வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நெல்லியடி முருகன் திருமண மண்டபத்தில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு விருந்தினராக இரா.வரதீஸ்வரன் கலந்து கொள்வார்.

மதிப்பீட்டுரையினை ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு நிகழ்த்தவுள்ளார். இறுவெட்டின் முதற்பிரதியை வல்லிபுர ஆழ்வார் ஆலய தலைமை அறங்காவலர் இ.அன்னலிங்கம் பெற்றுக்கொள்வார். (அ-9)

## அணு உலையால் இலங்கைக்கு பாதிப்பு ஏற்படாது- இந்தியா

கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பில் இலங்கை அமைச்சர் சம்பிக்க வெளியிட்டுள்ள குற்றச்சாட்டுக்கு இந்திய மத்திய அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.

கூடங்குளம் அணுமின்நிலையத்தால் இலங்கைக்கு ஆபத்து உள்ளது எனவும் அத்திட்டத்தை இந்தியா கைவிட வேண்டும் எனவும் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். அவரது இந்தக் குற்றச்சாட்டை இந்திய மத்திய அமைச்சர் நாராயணசாமி மறுத்துள்ளார்.

இந்திய அணு உலைகளால் இலங்கைக்கு எந்த வகையிலும் ஆபத்து இல்லை எனவும் அவ்வாறு ஆபத்து இருப்பதாக இலங்கை அரசு முறைப்பாடு செய்தால் அதனை எதிர்கொள்வது குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார். ஐ.நா. மனித உரிமை ஆணையகத்தில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தால் இரு நாடுகளுக்கு இடையேயான உறவு பாதிக்கப்படாது எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

## ஆயுள் தண்டனை கைதிக்கு விடுமுறை

(கொழும்பு)

பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டமையால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவருக்கு சிறைச்சாலைகள் திணைக்களம் ஒருநாள் விடுமுறை வழங்கி வீட்டுக்கு அனுப்பி வைத்துள்ளது.

சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவருக்கு முதன்முறையாக விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இவருக்கு 2010 ஆம் ஆண்டு சிறைச்சாலைக்குள் திருமணம் நடைபெற்றது. மஸ்கெலியாவைச் சேர்ந்த இவர் 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றார்.

2000 ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட இவருக்கு 2003 ஆம் ஆண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## கீதை காட்டும் மந்திர தியானம்

மக்களுக்கு ஆன்மீக விழிப்புணர்வை ஏற்படுத்தும் கீதை காட்டும் மந்திர தியானம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லூர் நாவலர் வீதி, நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் மாலை 5 மணிக்கு இத்தாலி நாட்டைச் சேர்ந்த தவத்திரு ஹரே கிருஷ்ண பிரபுவின் பகவத்கீதை சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (அ-9)

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
மகேந்திரா நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட உதிரிப்பாக விற்பனைநிலையம்
தர்ணிகா மோட்டோர்ஸ்
Mahindra

குறிப்பு:- எமது கிளை ஸ்தாபனத்தில் சகல உதிரிப்பாகங்களையும் எந்நேரத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.(24Hours)
இல:147, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே:-021 222 9482
தர்ணிகா மோட்டோர்ஸ்
கிளை A9 வீதி கரடிப்போக்கு, கிளிநொச்சி. (கொமர்ஷல் வங்கிக்கு அருகாமையில்)
T.P-Fax:-021 228 0056
0777448475

# மே.தீவுகளுக்கு எதிரான முதல் டெஸ்ட்: அவுஸ்திரேலியா போராடி வெற்றி

(பிரிஜ்டவுன்)

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியா அணி போராடி வெற்றி பெற்றது.

மேற்படி முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மேற்கிந்தியத் தீவுகளின் பிரிஜ்டவுனில் நடைபெற்றது.

மழையால் சிறிது நேரம் பாதிக்கப்பட்ட முதல்நாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 3 விக்கெட் இழப்பிற்கு 179 ஓட்டங்களை எடுத்திருந்தது.

2-வது நாளில் தொடர்ந்து ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 153 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 449 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

அந்த அணி சார்பில் சந்தர்போல் சிறப்பாக ஆடி சதம் அடித்தார். அவர் 235 பந்துகளில் தனது 25 ஆவது சதத்தை எட்டினார்.

சந்தர்போல் 103 ஓட்டங்களுடனும், பிஷூ 18 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

பின்னர் முதல் இன்னிங்ஸை ஆடிய அவுஸ்திரேலிய அணி 2-வது நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 44 ஓட்டங்களை எடுத்திருந்தது.


தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலிய அணி 3-ம் நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 248 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மைக்கல் ஹசி 47 ஓட்டங்களுடனும், மத்யூ வேட் 19 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

4-ம் நாள் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி, தனது முதல் இன்னிங்ஸில் 285 ஓட்டங்களை எடுப்பதற்குள் 8 விக்கெட்டுக்களை இழந்து தத்தளித்தது.

ஆஸி அணியை 300 ஓட்டங்களுக்கு கட்டுப்படுத்திவிடலாம் என்று நினைத்த மேற்கிந்திய அணிக்கு, இறுதிவரிசை துடுப்பாட்ட வீரர்களான ரியான் ஹரிஸ், ஹில்பென்ஹியூஸ், நேதன் லயன் ஆகியோர் பாடம் புகட்டினர்.

இவர்களது சிறப்பான ஆட்டத்தால் ஆஸி



அணி 400 ஓட்டங்களைக் கடந்தது. முடிவில் 406 ஓட்டங்களை எடுத்திருந்தபோது தனது முதல் இன்னிங்ஸை இடைநிறுத்தியது.

ரியான் ஹரிஸ் 68 ஓட்டங்களுடனும், நேதன் லயன் 40 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

இதையடுத்து தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆரம்பத்திலேயே 3 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

அடுத்து வந்த டரன் பிராவோவும் சந்தர்போலும் தாக்குப் பிடித்து ஆடினாலும் அவர்களால் தங்கள் விக்கெட்டுக்களை காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை.

பிராவோ 32 ஓட்டங்களிலும், சந்தர்போல் 12 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

4-ம் நாள் ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 71 ஓட்டங்களை எடுத்திருந்தது.

டியோ நரைன் 20 ஓட்டங்களுடனும், பொலக் 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

ஆட்டத்தின் கடைசி நாளில் மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் 148 ஓட்டங்களுடன் சுருண்டது.

அவுஸ்திரேலிய அணியின் ஹில்பென்ஹியூஸ் 4, ரியான் ஹரிஸ் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர் 192 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலிய அணி தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது.


அந்த அணியின் ஷேன் வோட்சன் 52 ஓட்டங்களைக் குவித்தார். மற்றைய வீரர்கள் சீரான இடைவெளியில் தங்களது விக்கெட்டுக்களை இழந்தனர். இதனால் ஆட்டத்தில் வெல்லுவது யார் என்ற பரபரப்பு காணப்பட்டது.

எனினும் அவுஸ்திரேலிய அணி இறுதியில் 7 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது

இப்போட்டியின் ஆட்டநாயகனாக அவுஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் ரியான் ஹரீஸ் தேர்வு செய்யப்பட்டார்.

இவ் வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியா அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

# பெங்களூருக்கு அதிர்ச்சி; சென்னை திரில் வெற்றி



ஐ.பி.எல். 5 ஆவது தொடரில் நேற்றைய முதல் போட்டியில் 206 ஓட்டங்களுக்கு பதிலெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சிறப்பாக ஆடி வெற்றி பெற்றது.

ஐ.பி.எல் தொடரின் நேற்று நடைபெற்ற முதல்போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ்-பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக கிறிஸ் கெய்ல்-அகர்வால் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை அளித்தனர். அதிரடியாக ஆடிய அகர்வால் 26 பந்துகளில் (5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள்) 45 ஓட்டங்களை எடுத்தது பிராவோவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடக்கத்தில் பொறுமையாக ஆடிய கிறிஸ் கெய்ல், அகர்வாலின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து தனது வழமையான அதிரடிக்கு மாறினார்

ரெய்னாவின் முதல் ஓவரில் 3 சிக்ஸர்களை அடித்த அவர் அணியின் ஓட்ட எண்ணிக்கையை ஜெட் வேகத்தில் உயர்த்தினார்.

35 பந்துகளைச் சந்தித்து (2 பவுண்டரிகள், 6சிக்ஸர்கள்) 68 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஜடேஜாவின் பந்தில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த டி வில்லியர்ஸ் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

பொறுப்பாக ஆடி வந்த விராட் ஹோலி 5 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடித்து அரைச்சதம் கடந்து அதிரடிக்கு தாவினார். இறுதிக் கட்டத்தில் வந்த திவாரி 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்து திருப்திப்பட்டுக் கொண்டார்.

கடைசி ஓவரை வீசிய போலின்ஜர் சிக்ஸ் அடிக்க முயன்ற விராத் ஹோலியை 57 ஓட்டங்களில் வெளியேற்றினார். மேலும் ராஜ், புஜாரா ஆகியோர் ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்டமிழந்தனர்.

கடைசி பந்தில் வினேய் குமார் சிக்ஸர் அடிக்க நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் 8 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களைக் குவித்தது.

சென்னை சுப்பர் கிங்ஸ் தரப்பில் போலின்ஜர் சிறப்பாக பந்துவீசி 3 விக்கெட்டுக்களையும், மோர்கல், ஜடேஜா ஆகியோர் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 206 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு மந்தமான தொடக்கம் கிடைத்தது.

மெதுவாக ஆடிய முரளி விஜய் 11 ஓட்டங்களில் முரளிதரனின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து வெளியேறினார்.

தொடக்க வீரர் டு பிளிசஸ் மட்டும் அதிரடியாக ஆடினார் அவருக்கு ஒத்துழைப்பு அளித்த சுரேஸ் ரெய்னா 23 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்த டு பிளிசஸ் 71 ஓட்டங்களுடன் முரளிதரன் பந்திலேயே ஆட்டமிழந்தார். அதன்பிறகு வந்த அணித்தலைவர் தோனி 1 பவுண்டரி, 2 சிக்ஸர்களுடன் 40 ஓட்டங்களை எடுத்து வெளியேறினார்.

**அல்பி மோர்கல் அபாரம்**

விராத் ஹோலி வீசிய 18-வது ஓவர் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு சாதகமாக அமைந்தது. தோனிக்கு பிறகு ஆடவந்த அல்பி மோர்கல் 18-வது ஓவரில் 2 பவுண்டரிகள், 3சிக்ஸர்களுடன் 28 ஓட்டங்களைக் குவித்தார்.

இதையடுத்து கடைசி ஓவரில் 15 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி பெறலாம் என்ற நிலையில், மோர்கல் கடைசி ஓவரின் முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார். இதையடுத்து போட்டியின் விறுவிறுப்பு அதிகரித்தது.

அதன்பிறகு பிராவோ 2 பவுண்டரிகள், 1 சிக்ஸர்கள் அடித்தார். கடைசி பந்தில் 2 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் ஜடேஜா பவுண்டரி அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இதன்மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ரோயல் சலன்ஞர்ஸ் அணியின் சார்பில் முரளிதரன் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சென்னை சுப்பர் கிங்ஸின் வெற்றிக்கு அடித்தளமிட்ட டு பிளிசஸ் தேர்வானார்.

# புனேக்கு அதிர்ச்சி கொடுத்து முதல் வெற்றியை பெற்றது பஞ்சாப்

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் 14-வது லீக் ஆட்டம் மொஹாலியில் நேற்று நடைபெற்றது இப்போட்டியில் சௌரவ் கங்குலி தலைமையிலான புனே வாரியர்ஸ் அணியும், கில்கிறிஸ்ட் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய புனே வாரியர்ஸ் இந்தியா அணி களமிறங்கியது.

அவ் அணி சார்பில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக சௌரவ் கங்குலியும், ஜெஸி ரைடரும் களமிறங்கினர்.

எனினும் இருவரும் முறையே 16, 7 ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

புனே வாரியர்ஸ் அணி சார்பில் எந்தவொரு வீரரும் குறிப்பிடத்தக்க அளவு ஓட்டங்களை எடுக்கவில்லை.

எனினும் மிதுன் மன்ஹாஸ் 31 ஓட்டங்களைக் குவித்து அணியின் மொத்த ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச்சேர்த்தார்.

இறுதியில் புனே வாரியர்ஸ் அணி 19 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 115 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பஞ்சாப் அணி சார்பில் திமித்ரி மஸ்கரன்னஸ் 25 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 116 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் களமிறங்கிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 17.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து குறித்த இலக்கை அடைந்து வெற்றி பெற்றது.

**இன்றைய போட்டி:**
இரவு 8 மணிக்கு கொல்கத்தாவில் நடைபெறும் போட்டியில், ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிகள் மோதுகின்றன.

# இடி மின்னலுடன் கூடிய...

வீசுவதால் கால நிலையில் மாற்றம் ஏற்படும் என வானிலை அவதான நிலையத்தின் வானிலையாளர் சூரியகுமார் தெரிவித்தார்.

கால நிலை மாற்றத்தால் மேற்கு, தென் கிழக்கு, தெற்கு மற்றும் கரையோரப்பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்யும் எனவும் மழை பெய்யும் சமயத்தில் கடல் கொந்தளிப்பாக காணப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் காலப்பகுதியில் காற்றின் வேகம் கடலின் தென்மேற்கு திசையில் 10 கிலோ மீற்றர் தொடக்கம் 30 கிலோ மீற்றர்வரை வீசக் கூடும் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை நேற்றுக்காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் பதிவான மழை வீழ்ச்சியின்படி இரத்மலானை-93.8 மில்லி மீற்றர், கொழும்பு -70.3 மில்லி மீற்றர், இரத்தினபுரி-66.7 மில்லி மீற்றர், கட்டுநாயக்க 43.3 மில்லி மீற்றரும்,

இதேவேளை நேற்றுக்காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் ஆகக் கூடுதலாக வவுனியாவில் 34.9 செல்சியஸும் வெப்ப நிலை பதிவாகியுள்ளது.

ஆகக் குறைவாக நுவரேலியாவில் 13.7 செல்சியஸும் பதிவாகியுள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவதானமாக இருக்குமாறு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு தினங்களுக்கு முன் ஏற்பட்ட இடி மின்னல்கள் காரணமாக இரு இளைஞர்கள் மரணமடைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இலங்கை விவகார...

சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க இச்சந்திப்பு சிறந்த முறையில் அமைந்திருந்தது. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உள்ளது.

இத்தீர்வு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாக கொண்டதாக இருக்கவேண்டும். அது தொடர்பில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையில் ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட வேண்டும்.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன. அது குறித்து அடுத்த மாதம் இடம்பெறவுள்ள நாடாளுமன்ற அமர்வில் விவாதிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புனர்வாழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது. அதில் பிரச்சினைகள் எழுந்துள்ளன. சில இடங்கள் குறித்து நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

மார்ச் மாதம் நான் வடக்கு சென்றபோது அதுகுறித்து அறிக்கை தயாரித்துள்ளேன். இப்பிரச்சினை தொடர்பில் மே மாதம் நாடாளுமன்ற அமர்வில் விவாதிக்கவுள்ளோம்.

வடபகுதியில் துரிதமாக மீள்குடியேற்ற நட வடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் தாமதம் உள்ளது என்பதை குறிப்பிட வேண்டும்.

எனினும் நாம் அதனை துரிதப்படுத்த வலியுறுத்துவோம் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள ரணில் விக்கிரமசிங்க, புதுடில்லியில் அந் நாட்டின் வெளிவிவகார அமைச்சின் எஸ்.எம்.கிருஷ்ணாவைச் சந்தித்து இலங்கை விவகாரம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை தெரிந்ததே.

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் கொண்டுவரப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்த பின்னர் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# மண்டைதீவுச் சந்தியில்...

ஆழ்ந்த கவலையும் அடைந்துள்ளனர்.

இது தொடர்பில் மண்டைதீவு திருமுறைக் கழகம் விடுத்த கண்டன அறிக்கையில்,

மண்டைதீவுச்சந்தியில் சுருவம் அமைக்கும் செயல் மண்டைதீவில் மதக் கலவரத்தை ஏற்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு மோசமான செயலை பங்குத் தந்தை ஒருவர் மேற்கொண்டமை மிகவும் வேதனைக்குரியது.

தற்போது சுருவம் அமைக்கப்பட்டு வரும் இடமானது நயினாதீவிலிருந்து நல்லூர்த் தேர்திருவிழாவுக்கு பாதையாத்திரையாக வருகின்ற அடியவர்களுக்கு தாக சாந்தி வழங்குவதற்காக மண்டைதீவு இந்து இளைஞர்களால் பந்தல் அமைக்கும் இடமாகும்.

எனினும் 1990ஆம் ஆண்டு மண்டைதீவில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் அந்தப் பணி தடைப்பட்டது.

இந்நிலையில் மண்டைதீவுச்சந்தியில் கடற்படை முகாமிற்கு அருகில் தனிப்பட்ட செல்வாக்கைப் பயன்படுத்தி சுருவம் அமைக்கும் மோசமான செயலை மண்டைதீவுப் பங்குத்தந்தை மேற்கொண்டதானது திருச்சபைக்கே இழுக்கை ஏற்படுத்துவதாகும்.

வேலணைப் பிரதேச சபையில் எந்த அனுமதியையும் பெற்றுக்கொள்ளாமல் நேற்றும், இன்றும் விடுமுறை தினமாக இருப்பதை பயன்படுத்தி மதக்கலவரத்தை தூண்டும் வகையில் சட்டவிரோதமாக மண்டைதீவு பங்குத்தந்தையும் யாழ்.மறைமாவட்ட ஆயரின் செயலாளருமாக இருக்கின்ற அடிகளார் மேற்கொண்ட இச்செயலை இந்து அமைப்புக்கள் மட்டும் மன்றி ஏனைய மதங்களும் கண்டிக்க வேண்டும்.

இது தொடர்பில் யாழ். ஆயர் உட்பட இலங்கையில் உள்ள சகல ஆயர்களுக்கும், வத்திக்கானிலுள்ள திருச்சபைக்கும் தெரியப்படுத்தும் பணியை மண்டைதீவு திருமுறைக் கழகம் முன்னெடுக்கவுள்ளது.

இதேவேளை பிரஸ்தாப சுருபம் அமைக்கப்படுவது தொடர்பில் வேலணைப்பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராசாவுடன் தொடர்பு கொண்ட போது, சுருவம் அமைப்பதற்கான அனுமதி எதுவும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்ததுடன், அதனைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையை தான் எடுப்பதாகவும் உறுதியளித்தார் என்று மண்டைதீவு திருமுறைக்கழகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# தோட்டக்...

சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த பெண் தனது வீட்டிலிருந்து நேற்று முன்தினம் இரவு காணாமல் போயுள்ளார். அவரை உறவினர்கள் காணாது தேடியபோது பெண்ணின் சடலம் வீட்டிக்கு அருகில் உள்ள தோட்டக் கிணற்றிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சடலம் மானிப்பாய் பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் தெல்லிப்பழை வைத்தியசாலையில் பணியாளராக கடமையாற்றுகிறார் என உறவினர்களால் தெரிவிக்கப்படு கிறது.

இதேவேளை இம் மாத காலப்பகுதியில் மட்டும் இளம் பெண் மரணங்கள் 6 இடம் பெற்றுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் அதிகாரி தெரிவிக்கை, யில் இவ்வாறான சம்பவங்கள் தற்போது அதி கரித்து காணப்படுகின்றது.

பெற்றோர்கள் தம் பிள்ளைகள் குறித்து கவனமாக இருக்க வேண்டும். அவர்களின் செயற்பாடுகள் குறித்து அவதானிக்க வேண்டும்.

கைத்தொலைபேசி பாவனையும் இவ்வாறான சம்பவங்களுக்கு காரணமாகவுள்ளது என அவர் தெரிவித்தார். (எ-4)

# நயினாதீவு ஆலயத்தில் நில அதிர்வு ஏற்படவில்லை

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலுள்ள குறிப்பிட்ட மாடிக் கட்டிடங்களில் உணரப்பட்ட நிலநடுக்கம் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திலும் உணரப்பட்டதாக வெளிவந்த செய்தி தவறானது என ஆலய அறங்காவலர் சபையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய புதிய ராஜகோபுரம் மற்றும் ஆலயத்தில் நில அதிர்வு உணரப்பட்டதாக வலம்புரியில் நேற்று வெளியான செய்தி தொடர்பில் மனம் வருந்துகின்றோம். (ந)

# எஞ்சியுள்...

மேம்படுத்திக் கொள்ள தேவையான ஒழுங்குகளை செய்து கொடுத்துள்ளோம்.

பெரும்பாலானோர் விடுதலை செய்யப்பட்டு தற்போது 700 பேர் மாத்திரமே புனர்வாழ்வு பெற்று வருகின்றன. இவர்களை விடுதலை செய்ய நீண்ட நாட்கள் எடுக்கும். ஏனெனில் மேற்படி 700 பேருக்கும் விசேட வகையில் புனர்வாழ்வுகள் அளிக்கப்பட வேண்டியுள்ளது.

மேலும் புத்தாண்டை முன்னிட்டு விசேட விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் வருடத்தில் வவுனியாவில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் கூறினார். (எ-11)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 04 - 07 - 1924



உதிர்வு 16 - 03 - 2012

### அமரர். பொன்னம்பலம் அன்னம்மா

நவிண்டில், கரவெட்டி.

16.03.2012 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தாயாரின் துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 14.04.2012 சனிக்கிழமை அன்று காலை கீரிமலையில் நடைபெறும். **17.04.2012 செவ்வாய்க்கிழமை** அன்று வீட்டுக் கிருத்தியமும், அதன் பின்பு மதியபோசனமும் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறவிருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

சந்தை வீதி,
நவிண்டில்,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

## கடந்தவை

இரண்டு மாதங்கள்

மண்மகிழ 02 ✱ 02 ✱ 1946



கண்ணெகிழ 12 ✱ 02 ✱ 2012

அமரர்
சின்னத்துரை கணபதிப்பிள்ளை

இரண்டு ஆண்டுகள்

மண்மகிழ 30 ✱ 08 ✱ 1982



கண்ணெகிழ 13 ✱ 04 ✱ 2010

அமரர்
பிரபாகரன் பிறேமலோஜினி

பதினைந்தாண்டுகள்

மண்மகிழ 03 ✱ 05 ✱ 1981



கண்ணெகிழ 08 ✱ 04 ✱ 1997

அமரர்
கணபதிப்பிள்ளை பிரதீபன்

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

கற்றாகி போனதே - உங்கள் உயிர் மூச்சு
கனவாகி போனதே - உங்கள் கதைகள்
ஆழமாய் பதிந்ததே - உங்கள் நினைவுகள்
ஆறவில்லை ஆறவில்லை - உங்கள் மறைவுகள்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

குடும்பத்தினர்.

(வி-6352)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.